# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

முதலாம் பதிப்பு
விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 195 வைகாசி 26ஆம் நாள் சனிக்கிழமை 09 ஜூன் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


## ம.எண்ணெய் விலை குறையும்

கொழும்பு, ஜூன் 9
"மண்ணெண்ணெய்யின் விலையை 25 தொடக்கம் 30 ரூபாவால் குறைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மாற்றம் வரும் திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வரும்" இவ்வாறு இராஜாங்க அமைச்சர் டிலீப் வீரஆராச்சி தெரிவித்துள்ளார்.
மண்ணெண்ணெய்யின் விலை கடந்த மே 10 ஆம் திகதி 57 ரூபாவால் அதிகரிக்கப்பட்டது. அதனால் வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங் >> 06

## ஈழத் தமிழருக்கு நீதி கேட்டு சென்னையில் இன்று மாநாடு

யாழ்ப்பாணம், ஜூன் 9
ஈழத் தமிழர்களுக்கு நீதி கேட்டு வழக்குரைஞர்கள் மாநாடு ஒன்று இன்று தமிழ்நாட்டுத் தலைநகர் சென்னையில் நடைபெறுகின்றது. சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி து. அரிபரந்தாமன் தலைமையில் இந்த மாநாடு இடம்பெறுகின்றது.
ஈழத் தமிழர்கள் ஆதரவு வழக்குரைஞர்கள் கூட்டமைப்பு மற்றும் பன்னாட்டு ஈழத்தமிழர் உரிமை மையம் ஆகியன இந்தப் >> 06



## காங்கேசன் இறங்குதுறை மீள மக்கள் பாவனைக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 9
காங்கேசன் இறங்குதுறை 29 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் மக்கள் பாவனைக்கு நேற்றுக் கையளிக்கப்பட்டது.
இறங்குதுறையில் வழிபாடுகள் மேற்கொள் >> 06

### கடலட்டை பிடிப்பவர்களை வெளியேற்றக்கோரி

# கடற்றொழில் திணைக்களத்தை முடக்கி மக்கள் போராட்டம்

### அதிகாரிகளின் வாக்குறுதியை அடுத்து இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 9
வடமராட்சி கிழக்கில் தங்கி கடலட்டை பிடிப்பில் ஈடுபடுகின்ற வெளிமாவட்ட மீனவர்களை வெளியேற்றக் கோரி யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் நேற்று 4 மணிநேரம் முற்றாக முடக்கப்பட்டது. வெளிமாவட்ட மீனவர்களின் சட்டத்துக்குப் புறம்பான செயற்பாடுகள் மீது துரிதமான நடவடிக்கை எடுக்கப்படும் என்கிற அதிகாரிகளின் உறுதி >> 06

### தாமரைக் கோபுரத்தில் இருந்து வீழ்ந்ததில்

## கிளிநொச்சி இளைஞன் கொழும்பில் உயிரிழப்பு



கிளிநொச்சி, ஜூன் 9
கொழும்பு தாமரைக் கோபுரக் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த கிளிநொச்சியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மின் தூக்கியில் (லிப்ட்) இருந்து வீழ்ந்து நேற்று உயிரிழந்தார். >> 25

### எதிர்காலத் தலைமுறையின் எதிர்காலத்தை அழிக்கும்

## பகிடிவதையை ஒழிக்க ஒன்றிணையுங்கள்!

### அரச தலைவர் அழைப்பு

கொழும்பு, ஜூன் 9
பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் மனிதாபிமானமற்ற பகிடிவதையை ஒழிக்க அனைவரும் ஒன்றிணைந்து பொது வேலைத்திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ளார். >> 06

## போராட்டக் களத்தில் நேற்று அரசியல்வாதிகள் மோதல்



>> 24

see more news in newuthayan.com

### விக்கியுடன் சேர்ந்து செயற்படவும் தயார்

## குடாநாட்டு நில ஆக்கிரமிப்புடன் இராணுவத்துக்கு தொடர்பில்லை

### யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 9
தமிழர் பிரதேசங்களில் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெறுவதாகச் சொல்லப்படுகின்ற நில ஆக்கிரமிப்புகளுக்கும் இராணுவத்துக்கும் எந்தவொரு சம்பந்தமும் கிடையாது.
இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்தார். அத்துடன் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக் >> 23

## தமிழ்க் கூட்டமைப்பின் முகத்தில் எட்டி உதைத்துவிட்டார் மைத்திரி

### அரியணையேற்றிய ஏணியை மறந்து செயற்படுவதாகச் சாடல்

கொழும்பு, ஜூன் 9
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அரியணையேறுவதற்கு ஏணியாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இன்று காலால் எட்டி உதைத்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சி. சிறீதரன் இவ்வாறு குற்றஞ் சாட்டினார்.
நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தேசிய பாதுகாப்பு நிதிய திருத்தச் சட்டவரைவு மீதான >> 06

### வன்முறைகளைத் தடுக்கத் தவறிய

## கோத்தபாய முஸ்லிம்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும்

கொழும்பு, ஜூன் 9
முஸ்லிம்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறிய முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக் ஷ முஸ்லிம் மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோரவேண்டும். இதைவிடுத்து தான் ஆட்சிக்கு வந்தால், முஸ்லிமக ளுக்குப் பாது >> 25

## நீதிமன்றில் பீடி புகைத்த பெண்ணினால் பரபரப்பு

### கைது செய்யப்பட்ட அவர் மறியலில்

முல்லைத்தீவு, ஜூன் 9
நீதிமன்றில் கைதிகள் கூண்டில் இருந்து பீடி புகைத்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட விளக்கமறியல் கைதி ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். சம்பவம் முல்லைத்தீவு நீதிமன்றில் நேற்று இடம்பெற்றது. >> 24

## முஸ்லிம்களை மீளக்குடியமர்த்த அனைத்துத் தரப்புகளும் முயற்சி

### முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 9
யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்கள் ஏனைய மக்களுடன் சகோதரர்களாக வாழ்ந்துவந்தபோதும் 1990ஆம் ஆண்டு ஏற்பட்ட குழப்ப நிலைகள் அவர் >> 24

## சுதாகரை விடுவித்துவிட்டு கிளிநொச்சிக்கு வாருங்கள்

### மைத்திரியிடம் கூட்டமைப்பு கோரிக்கை

கொழும்பு, ஜூன் 9
தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் அரச தலைவரால் வழங்கப்பட்ட உறுதிமொழிகள் இன்னும் உரியவகையில் நிறைவேற்றப்படவில்லை, என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சார்ள்ஸ் நிர்மலநாதன் குற்றஞ்சாட்டினார்.
ஆகக்குறைந்தது அரசியல் கைதியான ஆனந்த சுதாகரையாவது எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் விடுதலைசெய்துவிட்டு 18ஆம் திகதி கிளிநொச்சி வந்தாலே அரச தலைவரின் பயணம் சிறப்பானதாக >> 25

## ஆலயங்களில் சாதிப்பாகுபாடு இன்றும் தொடர்ந்து வருகிறது

### சைவ மகாசபையின் கலந்துரையாடலில் இந்து அமைப்புக்கள் சில சுட்டிக்காட்டின

யாழ்ப்பாணம் ஜூன் 9
இன்றும் பல ஆலயங்களில் சாதிப்பாகுபாடு இருந்து வருகிறது. எமது கண்கூடாகவே அவற்றைக் காணக்கூடியவாறு உள்ளது. இவ்வாறு சைவ மகா சபையின் பொதுச் செயலாளர் ப. நந்தகுமார் தெரிவித்தார்.
வரணிப் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் பக்கோ இயந்திரத்தைக் கொண்டு ஆலயத்தின் தேர் இழுக்கப்பட்டதன் >> 24

# யாழ்ப்பாணம் பல்கலையின் 33ஆவது பட்டமளிப்பு நிகழ்வு

## ஆயிரத்து 706 பேருக்குப் பட்டங்கள்





**யாழ்ப்பாணம், ஜூன் 9**

**யாழ்ப்பாணம் பல்கலைக் கழ கத்தின் 33ஆவது பொதுப் பட்டமளிப்பின் இரண்டாவது பகுதி கைலாசபதிகலையரங்கில்நேற்றுநடைபெற்றது. பல்கலைக்கழகவேந்தர்பேராசிரியர்எஸ். பத்மநாதன் தலைமை யில் நடைபெற்ற பட்டமளிப்பு நிகழ்வு 7 அமர்வு களாக நடைபெற்றது. ஆயிரத்து 706பேருக்குப் பட்டங்கள் வழங்கப்பட்டன.**

கலை, மருத்துவ, விஞ்ஞான, பொறியியல் பட்டப்பின் கற்கைகள் பீடங்களைச் சேர்ந்த ஆயிரத்து 223 உள்வாரிப் பட்டதாரிகளும், 43 டிப்ளோமா தாரிகளும் பட்டம் பெற்றனர். யாழ்பாணபல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தைச் சேர்ந்த 440 வெளிவாரிப்பட்டதாரிகளின்பட்டங்கள் உறுதிப்படுத்தப்பட்டன.

7 பேர் முதுமெய்யியல் மாணிப் பட்டங்களையும், வவுனியா வளாகத்தைச் சேர்ந்த 170 பேர் முதுகல்விமாணிப் பட்டங்களையும், 7 பேர் சுகாதார முகாமைத்துவத்தில்தகைமைச்சான்றிதழ்களையும், 21 பேர் சைவ சித்தாந்தத் தில் முதுமாணிப் பட்டங்களையும், 11 பேர் முதுவியாபார மாணி பட்டங்களையும், 04 பேர் முகாமைத்துவத்தில்பட்டப்பின்தகைமைச் சான்றிதழ்களையும், 95பேர் மருத்துவமாணி சத்திர சிகிச்சைமாணி பட்டங்களையும், ஒருவர் மருத்துவ விஞ்ஞான மாணி பட்டத்தையும், 31 பேர் பொறியியல் விஞ்ஞானமாணி பட்டங்களையும், 78 பேர் வி ஞ் ஞா ன மா ணி சிறப்பு மற்றும் 79 பேர் விஞ்ஞான மாணி பொதுப் பட்டங்களையும், 16பேர்கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞான மாணி சிறப்புப் பட்டங்களையும், 8 பேர்பிரயோகவிஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டங்களையும், 7 பேர் விவசாய விஞ்ஞான மாணி பட்டங்களையும், 146 பேர் நுண்கலைமாணி (கர்நாடகசங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பு) பட்டங்களையும், 459 பேர் சிறப்பு கலைமாணி, மற்றும் 81பேர் பொதுக்கலைமாணிப்பட்டங்களையும் பெற்றனர். 5 பேர் விஞ்ஞானத்தில் தகைமைச் சான்றிதழ்களையும், 09பேர் இதழியலில்தகைமைச்சான்றிதழ்களையும், 16 பேர் சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் தகைமைச் சான்றிதழ்களையும், 13 பேர் மனித வள முகாமைத்துவத்தில் தகைமைச் சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டனர்.

வெளிவாரியாகப் பட்டங்களைப் பெறுகின்ற 374 கலை மாணிப் பட்டதாரிகளினதும், ஒரு இசைமாணிப் பட்டதாரியினதும், 03 நடனமாணி பட்டதாரிகளினதும் 37 வணிகமாணி, 25 வியாபார முகாமைத்துவமாணி பட்டதாரிகளினதும் பட்டங்கள் உறுதிப்படுத்தப்பட்டன. சகல கற்கை நெறிகளுக்குமாக 34 தங்கப் பதக்கங்களும், 48பரிசில்கள் மற்றும் புலமைப்பரி சில்களும் வழங்கப்பட்டன. நிகழ்வில் பேராசிரியர்கள், மாணவர்கள் ,பெற்றோர்கள் .அரசியல் பிரமுகர்கள் ,சர்வமத தலைவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ற-7)



## கேரளக் கஞ்சாவுடன் நபரொருவர் கைது

கொழும்பு, ஜூன். 9
களனி கோபிவத்த பிரதேசத்தில் கேரளக் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் நபரொருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பேலியகொட குற்றத்தடுப்புபிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

மருதானையைச் சேர்ந்த 37 வயதுடைய நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார்.

இவரிடமிருந்து 10 கிலோ 200 கிராம் நிறை கொண்ட கேரளக்கஞ்சா கைப்பற்றப்படது.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ற.ரி4)



## சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட மூவர் கைது

வவுனியா, ஜூன் 9
வவுனியா உழுக்குளம் பகுதியிலுள்ள குளத்தில் சட்டவிரோதமான வலைகளைப்பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறப்புஅதிரடிப்படையினருடன்இணைந்து இலங்கை தேசிய நீர் உயிரினச்செய்கை அபிவிருத்தி அதிகாரசபை மாவட்ட நீர் உயிரினச் செய்கை விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் இணைந்துமேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே இவர்கள்கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட நபர்களிடமிருந்து சட்டவிரோத வலைகள், படகுகள் என்பன கைப்பற்றப்பட்டன. இவற்றின் பெறுமதி நான்கு இலட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர்களை மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன என தேசிய நிர் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள்தெரிவித்தனர். (ற.ரி4)

## சிரமதானப் பணியில் சுற்றுலாப் பயணிகள்



கொழும்பு, ஜூன் 9
கல்பிட்டியபிரதானவீதிக்கு அருகில் உள்ளபகுதியை சுத்தம்செய்யும்பணியில் சுற்றுலாப்பயணிகள் ஈடுபட்டனர். உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மத்திய சுற்றாடல் ஆணையகத்தால் சிரமதானப் பணிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இதில் கல்பிட்டிய சுற்றுலா வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாபயணிகள் கலந்துகொண்டனர். உள்நாட்டவர்கள் தமது நாட்டை சுத்தமாக வைத்திருக்க ஒத்துழைப்பு வழங்காத நிலையில், வெளிநாட்டவர்களின் செயற்பாடு பலராலும் பாராட்டப்பட்டுள்ளது. (ற.ரி4)

## பேருந்து – லொறி விபத்து

### ஐவர் படுகாயம்


நுவரெலியா, ஜூன் 9
நுவரெலியா - உடபுஸ்ஸலாவ பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஐவர் படுகாயமடைந்தனர்.

இந்தவிபத்து நேற்றுமுன்தினம் இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியாவிலிருந்து உடபுஸ்ஸலாவயை நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து ஒன்றும், கோணப்பிட்டியவிலிருந்து நுவரெலியாவை நோக்கிப்பயணித்த லொறியும் நேருக்கு நேர் மோதியுள்ளன.

பஸ்ஸில் மோதுண்ட லொறி பிரதான வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்துள் ளது எனக் கூறப்பட்டது. விபத்தில் தனியார் பேருந்தில் பயணித்தவர்களில் இருவரும், லொறியில் பயணித்த மூவரும் படுகாயங்களுக்கு உள்ளாகினர். காயமடைந்தவர்கள் நுவரெலியா மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ற.ரி4)






## அனல்மின் நிலைய வீதியை இடைமறித்துப் போராட்டம்

புத்தளம், ஜூன் 9
நுரைச்சோலை அனல் மின் நிலையத்துக்குச் செல்லும் வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கற்பிட்டி நகரிலுள்ள மக்களால் இந்த ஆர்ப்பாட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது. கற்பிட்டிநகரின்பலபகுதிகளில்தொடர்ச்சியாக மின்சார விநியோகம் துண்டிக்கப்படுவதைக் கண்டித்தே ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

மின்விநியோகம் அடிக்கடி துண்டிக்கப்படுவதனால், தாம்பெரிய அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும், விவசாயச் செய்கைகளை முன்னெடுப்பதிலும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர். (ற.ரி4)



## சாவ. பாடசாலைகளுக்கு நேரில் சென்ற சுமந்திரன்

தென்மராட்சி, ஜூன் 9

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் உள்ள பாடசாலைகளின் தேவைகளை இனங்காண நடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று சாவகச்சேரிக்குப் பயணம் செய்தார். சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மற்றும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி என்பவற்றுக்குச் சென்று அதிபர்களுடன் கலந்துரையாடி விவரங்களைப் பெற்றுக் கொண்டார். வடமாகாணசபை உறுப்பினர் கேசவன் சயந்தன் நகரசபைத் தவிசாளர் திருமதி இ. சிவமங்கை ஆகியோரும் நாடாளுமன்ற உறுப்பினருடன் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-9)

*நாட்டில்*

## நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே அரசு மற்றும் மக்களது நோக்கம்

*இப்தார்நிகழ்வில்அரசதலைவர்தெரிவிப்பு*

கொழும்பு,ஜூன் 9

சமாதானம் மற்றும் சகல இனங்களுக்கிடையிலான பரஸ்பர புரிந்துணர்வுமற்றும்நம்பிக்கை மூலமாக நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதுமக்களினதும்அரசினதும் நோக்கமாகும். எனத் தெரிவித்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அரசு என்ற வகையில் அதற்கானஅர்ப்பணிப்பை மேற்கொள்ளத் தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார்.

இஸ்லாமியர்களின்சிறப்பு இப்தார் நிகழ்வு நேற்று முன்தினம்அரசதலைவர் மாளிகையில் இடம்பெற்றது. இதன்போதே அரச தலைவர் இதனைத் தெரிவித்தார்.

இவ்வாறு அரச தலைவர் ஊடகப்பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,இந்தஇப்தார் நிகழ்வுஇனங்களுக்கிடையிலானநல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் சிறந்த நிகழ்வாகும் என்று அரச தலைவர் தெரிவித்தார்.

தேசிய நல்லிணக்கத்துக்காக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை இஸ்லாமிய மதத் தலைவர்கள் இதன்போது, பாராட்டினார்கள். சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டஅல்குர்ஆனின்முதற் பிரதி அரச தலைவரிடம் கையளிக்கப்பட்டது.

இஸ்லாம்மதத்தலைவர்களும் பெரும்பாலான இஸ்லாமியர்களும்இந்தநிகழ்வில் கலந்துகொண்டதுடன், நாட்டின் சமாதானம், ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கு ஆசிகூரும்நிகழ்வும்இடம்பெற்றது.

அமைச்சர்கள்பைசர்முஸ்தபா,ரவூப்ஹக்கீம்,ரிஷாத் பதியுதீன், அப்துல் ஹலீம், இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்கள் உள்ளிட்டவர்கள் இந்த நிகழ்வில்கலந்துகொண்டனர். (ந.ரி2)



## செயல் அமர்வும் அனுபவப் பகிர்வும்

யாழ்ப்பாணம்.ஜூன்.9

தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வுச் செயல் அமர்வு மற்றும் அனுபவப்பகிர்வு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. ரான்பெரன்சி அரச சார்பற்ற நிறுவனத்தின் ஏற்பாட்டில் மாவட்டச்செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலகத் தகவல் உத்தியோகத்தர்களுக்கு இந்த செயல் அமர்வு நடைபெற்றது. இதில், தகவல் அறியும் உரிமைச் சட்டம் பற்றி உத்தியோகத்தர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டதோடு,கடந்த கால அனுபவங்களும் பகிரப்பட்டது. (ந.ரி2,7)

# சீன மீன் ரின் தடையை பரிசீலிப்பது அவசியம்

*சுனில் ஹந்துன் நெத்தி தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 9

**சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ரின் மீன் தடைகள் குறித்து இலங்கை அரசு மீள் பரிசீலனை செய்ய வேண்டும். இலங்கைசீனாவின்பொருளாதார உறவுமுறையை கருத்திற் கொண்டு அரசு செயற்பட வேண்டும்.**



இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்றஉறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்நேற்று வியாழக்கிழமை நடைபெற்றமதுவரிக்கட்டளைச் சட்டத்தின்கீழானவிவாதத்தின்போது அவர் இந்தவிடயத்தைச்சுட்டிக்காட்டினார்.

அவர் தெரிவித்ததாவது:

இலங்கையில் ரின் மீன் உற்பத்திதடை செய்யப்பட்டுள்ளது.

இந்தவர்க்கமீன்களில்மிகவும்நுண்ணியபூச்சி உள்ளது என்று கூறப்பட்டு நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபைமற்றும்உணவுக் கட்டுப்பட்டு அதிகார சபை இந்தத் தடைகளை விதித்துள்ளன.

அதிக உஷ்ணம் காரணமாகப்பல்வேறுசந்தர்ப்பங்களில்இவ்வாறானகாரணிகள் உருவாகும். இதற்கு முன்னரும் இவ்வாறான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

சீனாவின் ரின் மீன் நிறுவனம் ஒன்றே இதனைத் தயாரித்து வருகின்றது. சீனாவின் உணவுப் பாதுகாப்பு அமைப்பு அதில் சிக்கல்கள் இல்லைஎன்றகாரணிகளை வெளியிட்டுள்ளது. இதன் உண்மைத் தன்மைகள் குறித்து இலங்கை அரசு ஆய்வுகளை முன்னெடுக்க வேண்டும்.

சீனாவின் உற்பத்தியை நிறுத்துவதன் மூலமாக இலங்கைசீனாஆகியநாடுகளின்பொருளாதாரஉறவு முறியக்கூடிய நிலைமைகள் ஏற்படலாம். இலங்கை மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு இடையில்அரசியல் உறவுமுறை மட்டும் அல்லாதுபொருளாதாரஉறவும் பெரிய அளவில் உள்ளது. இலங்கைக்குக்கொண்டுவரும் ரின் மீன் உற்பத்திகளில்சீனாவின்மக்கரல்டின் மீன்களும் பெருமளவில் இறக்குமதிசெய்யப்படுகின்றன. இவற்றையும்கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும். நாடுகளின்உறவுமுறையையும் கவனத்தில் கொண்டு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். என்றார். (ந-61)



## மன்னார் சதொச அகழ்வுகள் நேற்று மதியத்துட்ன்நிறுத்தம்

*மீள திங்கள் ஆரம்பமாகும்*

மன்னார், ஜூன் 9

மன்னார் சதொச வளாகத்தில் நேற்று 10ஆவது நாளாக அகழ்வுப் பணிகள் நடைபெற்றன. நேற்று மதியத்துடன் அகழ்வுப் பணிகள் நிறுத்தப்பட்டு எதிர்வரும் திங்கட்கிழமை அகழ்வுப் பணிகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சிறப்பு சட்ட மருத்துவ நிபுணர் டபிள்யூ. ஆர். ஏ. எஸ். ராஜபக்ச தலைமையிலான குழுவினர், களனிபல்கலைக்கழகப்பேராசிரியர்ராஜ் சோம தேவா தலைமையிலான குழுவினர், சிறப்புத் தடவியல் நிபுணத்துவப் பொலிஸார் மற்றும் அழைக்கப்பட்ட திணைக்களங்களின் அதிகாரிகள் மற்றும் சட்டத்தரணிகள் எனப் பலர் சம்பவ இடத்தில் பிரசன்னமாயிருந்தனர். யாழ் பல்கலைக்கழக மருத்துவப்பீட மாணவர்களும் பயிற்சி நிலை மருத்துவர்களும் அதிகாரிகளும் இணைத்துக்கொள்ளப்பட்டு அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வந்தன.

தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் அகழ்வுப் பணிகளின் போது மனித எலும்புகள், மண்டையோடுகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு அகழ்வுப் பணிகள் மன்னார் நீதிவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் இடம்பெறும்என்றுதெரிவிக்கப்பட்டது. (ந-56,60)

## ஹெரோயினுடன் ஒருவர் கைது

கொழும்பு.ஜூன்.9

ஹெரோயின் வர்த்தகத்தில் ஈடுபட்டுவந்த ஒருவர் ஹுங்வெல்ல பஹாத்கம பகுதியில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

25 வயதுடைய இளைஞர்ஒருவரேகைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து, 55 இலட்சம் ரூபா பெறுமதியான, 505 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ந.ரி2)

## அனுமதி பத்திரம் இன்றி கல் ஏற்றியவர் கைது

வடமராட்சி, ஜூன்.9

அனுமதிப்பத்திரம்இன்றி கல் ஏற்றிய ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சி வல்லிபுரம் பகுதியில்வைத்து, சந்தேகநபர் காங்கேசன்துறை சிறப்புக் குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

கோப்பாயைச்சேர்ந்த40 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டவராவார்.

சந்தேகநபரைபருத்தித்துறைப் பொலிஸாரிடம் பாரப்படுத்தியுள்ளதாகவும் குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர். (ந.ரி2.26)

விளம்பி வருஷ வீரமாகாளியின் சிறப்பம்சம்



மகரவாகனத்தில் வீரமாகாளியின் திருக்காட்சி

மகரவாகனம் சுமந்திட வீரமாகாளி
மக்களை காவல் செய்திட வருகிறாள்
நகரமெங்கும் செவ்வண்ணக் கொடிகள் பறந்திட
நாயகி 'மகர ஜோதி'யாய் காட்சி தருகின்றாள்
சிகரம் போல் இராஜகோபுரம் எழுந்த கோவிலில்
சிம்மவாகினி மகரவாகனத்தில் வருகிறாள்
திகம்பரியாய் எழுந்து அருள் செய்பவள்
திக்குகள் யாவும் போற்றிட மகரவாகனத்தில் வருகிறாள்.



மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்

[இன்று (09.06.2018) சனிக்கிழமை
வண்ணை வீரமாகாளியம்பாளின் 6 ஆம் திருவிழா.
மகரவாகன திருக்காட்சி] அன்னதானம் இடம்பெறும்.

## மகோற்சவம்

சாவகச்சேரி, ஜூன் 9
வரலாற்றுச் சிறப்புமிக்க வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் தேவஸ்தான வருடாந்த மகோற்சவத்தின் தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.
கடந்த மாதம் 28 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து14 தினங்கள் உற்சவம் நடைபெற்று வருகிறது.
ஆலய உற்சவத்தையொட்டி சுகாதார வசதிகள் மற்றும் குடிதண்ணீர் வசதிகள் சுற்றுப்புற சூழல் சுகாதார நடவடிக்கைகளை சாவகச்சேரி பிரதேச சபை வழங்கி வருகின்றது. (131)

★★★★★

யாழ்ப்பாணம்,யூன் 9
கோண்டாவில்கிழக்கு ஆசிமட அரசடிவிநாயகர் ஆலயவருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
எதிர்வரும்20ஆம்திகதிபுதன்கிழமைகாலை9.30மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 6மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறும் என ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை தெரிவித்துள்ளது.

★★★★★

வடமராட்சி, ஜூன் 9
பருத்தித்துறை வியாபாரிமூலை அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி அம்பாள்சமேதஆதிசிவவீரபத்திரசுவாமிகோவில்வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை9மணிக்குகொடியேற்றத்துடன்ஆரம்பமாகவுள்ளது.
தொடர்ந்து10தினங்கள்இடம்பெறும்இந்தமகோற்சவத்தின் தேர்த்திருவிழாஎதிர்வரும்20ஆம்திகதிபுதன்கிழமைகாலை 9மணிக்கும் சமுத்திர தீர்த்தத் திருவிழா மறுநாள் வியாழக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கும் நடைபெறும்.
கோவில் பிரதமகுரு பிரம்மஸ்ரீ ச.வாசுதேவக்குருக்களின்உதவியுடன்நெல்லியடிதடங்கன்புளியடிமுருகமூர்த்தி கோவில் பிரதம குரு பிரம்மஸ்ரீ ரா.ரெங்கசாமிக்குருக்கள் பிரதம குருவாக இருந்து மகோற்சவத்தை நடத்தி வைப்பார். (173)

## சாவகச்சேரி கொல்களம் திங்களிலிருந்து இயங்கும்

### சபைத் தவிசாளர் தெரிவிப்பு

சாவகச்சேரி, ஜூன் 9
சீரமைக்கப்பட்ட சாவகச்சேரி பிரதேச சபையின் கொல்களம் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் மீண்டும் இயங்குமென்றுசபையின்தவிசாளர் க.வாமதேவன் சபை அமர்வின் போது நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.
கொடிகாமம் கொயிலாமனைப் பகுதியில் உள்ள மயானத்தை அண்டிய பகுதியில் கொல்களம் அமைத்திருந்தது. அந்தப் பகுதியில் கொடிகாமம் நகரப் பகதியில் சேகரிக்கப்பட்ட திண்மக்கழிவுகள் உட்பட இரவுவேளைகளில் வாகனங்களில கொண்டுவரப்படும் திண்மக் கழிவுகளும் கொட்டப்பட்டு வந்ததால் அந்தப் பகுதியில் சுகாதாரச்சீர்கேடு காணப்பட்டது.
கொல்களமும் அதனை அண்டியபகுதிகளும் திருத்தம் செய்ய வேண்டுமென்று பொது சுகாதார பரிசோதகர் முறையிட்டார்.
அதையடுத்து கொல்களம் மற்றும் அதனையண்டியபகுதிகள்சபைஊழியர்களால் துப்பரவு செய்யப்பட்டது. திருத்தவேலைகளும்மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.
கொல்களம்திருத்தவேலைகள்நடைபெற்றதால் கொடிகாமம் மற்றும் மிருசுவில் இறைச்சிக் கடைகளுக்கான கால்நடைகள் காவகச்சேரி நகரசபையின் கொல்களத்தில் வெட்டுவதற்கு பிரதேச சபையால் அனுமதி கோரப்பட்டு தற்போது சாவகச்சேரி கொல்களத்தில் கால்நடைகள் வெட்டப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் கொடிகாமம்கொல்களத்திருத்தவேலைகள் முடிவுறுவதால் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் இயங்கவுள்ளதென்று தெரிவித்தார்.
கொடிகாமம் கொயிலாமனை மயானத்தை அண்டிய பகுதியில் மீள்சுழற்சி இயந்திரம் பொருத்தி பிளாஸ்ரிக் பொருள்கள் மற்றும் உடைந்த கண்ணாடிகள் கொள்வனவு செய்து மீள்சுழற்சி செய்ய முன்னைய சபை நடவடிக்கை மேற்கொண்ட போதிலும் அவை செயற்படுத்தாததால் திண்மக் கழிவுகள் மயானப்பகுதியில் அதிகளவில் கொட்டப்பட்டதென்றும் ஊர்மக்கள் தெரிவித்தனர். (49)

## வாசகர் வட்டத்தின் மாதாந்த திரையிடல்

யாழ்ப்பாணம், யூன் 9
யாழ்ப்பாண பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் மாதாந்த திரையிடல் 14 "பற்றில் ஒஃவ் அல்ஜியர்ஸ் " பிரெஞ்சுத் திரைப்படம் ஆங்கிலத்துணைத்தலைப்புகளுடன் நூலக கேட்போர்கூடத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு இலவசமாக காண்பிக்கப்படும்.
இந்தநிகழ்வில்ஆர்வம்உள்ளவர்களை கலந்துகொள்ளுமாறு வாசகர் வட்டத்தினர் அழைப்புவிடுத்துள்ளனர்.

## குளத்தில் மூழ்கி முதியவர் சாவு

ஊர்காவற்றுறை ,யூன் 9
ஊர்காவற்றுறை பிரதே சபைக்கு முன்பாக உள்ள "அக்கா தங்கை" குளத்தில் மூழ்கி முதியவர் ஒருவர் சாவடைந்துள்ளார்.
ஊர்காவற்றுறை சென் ஜேமஸ் வீதியை பிறப்பிடமாக கொண்ட கனடாவாசியான 60 வயது மதிக்கத்தக்க முதியவர் நேற்று முன்தினம் மாலை குளத்தில் நீராடச் சென்ற வேளை நீரில் மூழ்கி சாவடைந்துள்ளார். (138)

## 'வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை' நூல்வெளியீடு

வடமராட்சி, ஜூன் 9
வடமராட்சி சமூக மாற்றத்துக்கான நண்பர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் சி.கா.செந்திவேல் எழுதிய 'வட்டுக்கோட்டையில் இருந்துமுல்லைத்தீவுவரை' என்னும்அரசியல்பகுப்பாய்வு விமர்சனநூல்அறிமுகநிகழ்வு அல்வாய் வடக்கு இளங்கோ சனசமூக நிலைய பொதுநோக்கு மண்டபத்தில் இன்று சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
மூத்தஎழுத்தாளர்சாகித்யரத்னாதெணியான்தலைமையில் இடம்பெறும்இந்தநிகழ்வில்அறிமுகவுரையைஒய்வுநிலை உதவிக்கல்விப்பணிப்பாளர்மு.அநாதரட்சகனும்மதிப்பீட்டுரையை ஒய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர் பி. முத்துலிங்கமும் வழங்குவார்கள்.
கருத்துரைகளை சமூகச் செயற்பாட்டளர்களும் ஆசிரியர்களுக்குமான அருளானந்தம் தர்சன், சூடாமணி தர்சன் ஆகியோர் நிகழ்த்துவார்கள்.
நூலாசிரியர்சி.கா.செந்திவேல்பதிலுரைநிகழ்த்துவார்.(173)

## குருதிக்கொடைநிகழ்வு

சாவகச்சேரி ஜூன் 9
சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் ' பிறருக்காக எம் உதிரம் ஈய்வோம்'என்றதலைப்பிலானகுருதிக்கொடை நிகழ்வுகல்லூரிமண்டபத்தில்எதிர்வரும்13ஆம் திகதி புதன்கிழமை நடைபெறுமென பழைய மாணவர்சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (9)

★★★★★

கொழும்புத்துறை, ஜூன் 9
குருநகர் இளையோர் சமூகத்தின் ஏற்பாட்டில் மண்டைதீவில் கடற்படையினரால் கொலை செய்யப்பட்ட 31 குருநகர் மீனவர்களின் 32 ஆவது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு மாபெரும்குருதிக்கொடைநிகழ்வுகுருநகர்கலாசார மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 3 மணிவரை இடம்பெறவுள்ளதாகஏற்பாட்டாளர்கள்அறிவித்துள்ளனர். (135)



தொல்புரம் வழக்கம்பரை அம்மன் ஆலய மண்டலாபிஷேக பூர்த்திநாளில்பக்திபூர்வமாகநடைபெற்றமஹாசண்டிஹோமம்.

## கட்டுரைத் தொகுப்பு வெளியீடு

யாழ்ப்பாணம், யூன் 9
ஜீவநதியின் 100 ஆவது வெளியீடான இ.சு.முரளிதரனின் "சுரோடிங்கரின் பூனை" கட்டுரைத் தொகுப்பு வெளியீட்டு நிகழ்வு யாழ்ப்பாணம் தேவரையாளிஇந்துக்கல்லூரியில்நாளைஞாயிற்றுக்கிழமைமாலை 3.30 மணிக்கு கவிஞர் த.ஜெயசீலன் தலைமையில் இடம்பெறவுள்ளது.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கவிஞர் சோ.பத்மநாதன் கலந்துகொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## குருநகர் தூயஒளி படகுப் படுகொலையின் 32 ஆவது நினைவு தினம்

கொழும்புத்துறை, ஜூன் 9
குருநகர் கடற்றொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில்1986ஆம்ஆண்டுமண்டைதீவுக் கடற்பரப்பில் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட குருநகர் தூயஒளி படகுப் படுகொலையின் 32ஆவது ஆண்டு நினைவேந்தல்நிகழ்வுகுருநகர்சனசமூக நிலைய முன்றலில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.
இந்த நிகழ்வில் முதன்மைச் சுடரினை யாழ்.மாநகர சபை முதல்வர் இ.ஆர்னோல்ட் ஏற்றிவைப்பார். தொடர்ந்துசமய வழிபாடுகளும்சிறப்புரைகளும்இடம்பெறும்.
இதேவேளை குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் அன்றைய தினம் காலை 6 மணிக்கு இடம்பெறும் திருப்பலியில் இறந்தோருக்கான சிறப்பு இறைவேண்டல்கள் இடம்பெறவுள்ளதாக பங்குத்தந்தை தெரிவித்துள்ளார். (135)

## சாவ. நகரசபை உறுப்பினர் தொடர்பில் வெவ்வேறான கருத்துக்கள் முன்வைப்பு

### ஆர்ப்பாட்டக்காரருக்கு தண்ணீர் போத்தல் வழங்கிய விவகாரம்;

சாவகச்சேரி, ஜூன் 9
சாவகச்சேரி நகரசபைக்கு எதிராகப் போராட்டம் செய்த சமுர்த்திப்பயனாளிகளுக்குத் தனதுசொந்தச்செலவில்நீர்ப் போத்தல்கள்வாங்கிவழங்கியுள்ளார் நகரசபையின் உறுப்பினர் ஒருவர்.
இந்த விடயம் ஏனைய மக்களிடையே வெவ்வேறு விதமானகருத்துக்களைவெளிப்படுத்தியுள்ளது.
சாவகச்சேரி நகரசபையின் அமர்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றபோது நடைபவனியாக வந்த சமுர்த்திப் பயனாளிகள் சபையின் முன்னால்ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்டனர். ஒரு மணிநேரமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரருக்குத் தனது செலவில் 300 க்கும் மேற்பட்ட நீர்ப் போத்தல்களை வழங்கியுள்ளார் அமர்வில் கலந்து கொள்ள வந்திருந்த உறுப்பினர்.
இந்த நீர்ப் போத்தலால் எறிந்ததில் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் கலந்துரையாடிக் கொண்டிருந்தபொலிஸ்அலுவலரின் கையில் காயமேற்பட்டது. கையில் காயமேற்பட்டபோதிலும்பொலிஸ்அலுவலர் நகரசபையின் தவிசாளர் மற்றும் ஆர்ப்பாட்டக்காரருடன் கலந்துரையாடுவதில்அக்கறையுடன்செயற்பட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது. உறுப்பினரின் ஆதரவுடன் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதா அல்லது களைத்திருந்த மக்களுக்கு தனது செலவில் நீர்ப்போத்தல்கள் உறுப்பினர் வழங்கினாரா எனவும்கருத்துக்கள்நிலவுகிறன. (21,9)

## காங்கேசன்துறை கடற்றொழிலாளர் சங்கம் 29 வருடங்களின் பின்னர் அதே இடத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 9
காங்கேசன்துறைக் கடற்றொழிலாளர் சங்கம் 29 வருடங்களின் பின்னர் அதே இடத்தில் ஆரம்பிக்கவுள்ளதாகவும் அது பற்றிய கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.
பழைய அலுவலகம் இருந்த இடத்தில் தற்காலிகமாகுடில்அமைத்து இருப்பதாகவும் இந்தஅலுவலகம்வெளிச்சவீட்டுக்குபக்கத்தில்ஆரம்பிக்கவுள்ளதாகவும்தெரிவிக்கப்பட்டது. சங்கத்துக்குரிய அரனில் இராணுவ காவலரண் உள்ளது. அவர்கள் 2மாதத்துக்குள் அதை எடுப்பதாகவும் தற்காலிகமாக மாற்று பாதை பயன்படுத்துவதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (4,26)

## ஆலயத்தில் பெறுமதியான பொருள்கள், பணம் திருட்டு

ஊர்காவற்றுறை,யூன் 9
ஊர்காவற்றுறைதம்பாட்டி கிராமத்தில் உள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினம் இரவு 2 இலட்சம் பெறுமதியான பொருள்களும் உண்டியல் பணமும் களவாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.
அத்துடன் கோயிலுக்கு அருகாமையில்உள்ளபல சரக்குகடையிலும்பொருள்கள் திருடப்பட்டுள்ளன.
இந்தச்சம்பவம்தொடர்பில் ஆலய நிர்வாக சபை ஊர்காவற்றுறைபொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (138)

## மகோற்சவம்

வடமராட்சி, ஜீன் 9
பருத்தித்துறை, வியாபாரி மூலை அருள்மிகு பத்திரகாளி அம்பாள் சமேத ஆதி சிவ வீரபத்திரசுவாமி கோவில்வருடாந்தமகோற்சவம் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன்ஆரம்பமாகி 10தினங்கள்நடைபெறும். எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த் திருவிழாவும்மறுநாள் 21ஆம் திகதி வியாழக்கிழமை காலை 5 மணிக்கு சமுத்திரத்தீர்த்தஉற்சவமும்இடம் பெறும். (173)

## நிலுவை அறவீடுகளை மேற்கொள்ள நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஜீன் 9
யாழ்ப்பாணம் மாநகரசபையின்வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி நிலுவை அறவீடுகளை மேற்கொள்ள வட்டாரம் 1 இற்கானநடமாடும்சேவை யாழ்ப்பாணப் பொதுநூலகத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணிவரைஇடம் பெறுவுள்ளது என யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் த.ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

## சமாதான நீதிவானாக சத்திய பிரமாணம்

யாழ்ப்பாணம்.ஜீன் 9
கரந்தன் மேற்கு, நீர்வேலியைச் சேர்ந்த லயன் நாகமணி இராசநாயகம் கடந்த மாதம் 31 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றநீதவான்வி.இராமகமலன் முன்னிலையில் அகிலஇலங்கைசமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்எடுத்துக்கொண்டார். இவர்தற்போதுவலிகாமம் கல்வி வலயத்தில் முகாமைத்துவ உதவியாளர் சேவையில் களஞ்சியக் காப்பாளராகவும், நீர்வேலி மேற்குகிராமஅபிவிருத்திச் சங்கத் தலைவராகவும், உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய அருட்பணி பேரவை செயலாளராகவும், ஊரெழு கிழக்கு சர்வசக்தி சனசமூக நிலையத் தலைவராகவும், இளவாலை மறைக்கோட்ட பேரவை பொருளாளராகவும், யா/உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை பழைய மாணவர் சங்க ஆலோசகராகவும், ஊரெழு கிராம அபிவிருத்திச் சங்க போசகராகவும் இருப்பதுடன் கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட்டு வலிகிழக்கு பிரதேச சபை உறுப்பினராகவும் தேர்வாகியுள்ளார். (28)



காரைநகர் மருதடிவீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழா இடம்பெற்றது. (250)

### வழக்கை மீளப் பெறக்கோரி

# சிறுவர் நீதிமன்றுக்கு அருகில் பெண்ணுக்கு கடும் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜீன் 9
யாழ்ப்பாணம்சிறுவர்நீதிமன்றுக்கு அருகில்குடும்பப்பெண் ஒருவர் குருதி வழிந்தோடுமளவு சவளால் கடுமையாகத் தாக்கப்பட்டார். தாக்குதல் மேற்கொண்ட நபர் சவளைக் கையில் கொண்டு துணிசச்சலுடன் அந்தப் பகுதியில் நடமாடினார். நீதிமன்றில் உள்ள வழக்கு ஒன்றை மீளப் பெறுமாறு வற்புறுத்தியே தான் தாக்கப்பட்டார் என்று தாக்குதலுக்குள்ளான பெண் தெரிவித்தார்.

சம்பவம் நேற்று மாலை யாழ்ப்பாணம் சிறுவர் நீதிமன்றுக்கு அருகில் இடம்பெற்றது. மணியம்தோட்டம் மூன்றாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த ச. யமுனா (வயது 52) என்பவரே இவ்வாறு தாக்குதலுக்கிலக்கானார். உறவினர்களின்உதவியுடன்யாழ்ப்பாணம் போதனாமருத்துவமனையில்அனுமதிக்கப்பட்டார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது;
கடந்த 2017ஆம்ஆண்டுமார்ச்மாதம்மனைவியின் அசிட் தாக்குதலுக்கு உள்ளான கணவர் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டார். இதுதொடர்பில் மனைவி கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்பட்டிருந்தார். மனைவியுடன்தொடர்புடையமற்றுமொருநபர்பொலிஸாரால்தேடப்படுகிறார் என்று பொலிஸ் தரப்பு தெரிவித்தது. அசிட்தாக்குதலுக்கு இலக்கானகணவர்கண் பார்வையற்றநிலையில்தற்போதும்யாழ்ப்பாணம்போதனாவைத்தியசாலையில்சிகிச்சை பெற்றுவருகிறார். இது தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றில் இடம்பெற்று வருகிறது. இந்த வழக்குடன் தொடர்பு பட்ட அசிட் வீசினார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட பெண்ணின் தாயாரே நேற்றுத் தாக்குதலுக்கு இலக்கானார்.

"வழக்கை மீளப் பெறுமாறு கோரி மகளுடன் சேர்ந்து நபரொருவர் நேற்று முன்தினம் வீட்டுக்கு வாள் பொல்லுகளுடன் வந்தனர். அவர்கள் வீட்டில் புகுந்து பொருள்களை அடித்துச் சேதமாக்கினர். மகனுக்கும் அடித்தனர். இது தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்வதற்கு பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடுசெய்துள்ளேன். குறித்தநபரை அடையாளம் காட்டியபோதும் அவரைக் கைது செய்யவில்லை. வீட்டில்உடைக்கப்பட்டஅனைத்துப் பொருள்களும் அப்படியேதான் உள்ளன. இன்று(நேற்று) நான் சென்றுகொண்டிருந்த போதுசவளுடன்வந்துகுறித்தநபர்என்னைத் தாக்கினார். அவர் பொலிஸாருடன் தொடர்புபட்டவர். யாழ்ப்பாண உதவிப் பொலிஸ் உத்தியோகத்தராகக் கடமையாற்றி தற்பொது தலைமறைவாக உள்ளசிங்கம்ரூஎனப்படும் சிறீகஜனுடன்நெருக்கமானவர். எனதுமகளுடன் அவருக்குத் தொடர்பு உண்டு இருவரும் சேர்ந்தே மருமகனுக்கு அசிட் வீசினார்கள். வழக்கின்தீர்ப்புஎதிர்வரும்18ஆம்திகதிவழங்கப்படவுள்ளது இந்த நிலையிலேயே அவர் என்னைத் தாக்கினார்" என்று காயமடைந்த யமுனா தெரிவித்தார். (21)

## அரசியல்பகுப்பாய்வுவிமர்சன நூலின் அறிமுக நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஜீன் 9
சி.கா.செந்தில்வேல் எழுதிய வட்டுக்கோட்டையிலிருந்து முல்லைத்தீவு வரை எனும் அரசியல் பகுப்பாய்வு விமர்சன நூல் அறிமுக நிகழ்வு இன்றுசனிக்கிழமைபிற்பகல் 3.30 மணிக்கு அல்வாய் வடக்கு இளங்கோ சன சமூக நிலையப்பொதுநோக்குமண்டபத்தில்நடைபெறவுள்ளது. மூத்த எழுத்தாளர் சாகித்திய ரத்னா தெணியான் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அறிமுக உரையை ஓய்வுநிலைஉதவிக் கல்விப் பணிப்பாளர் மு.அநாதரட்சகன், மதிப்பீட்டு உரையைஓய்வுநிலைபிரதிக் கல்விப்பணிப்பாளர்பி.முத்துலிங்கம், கருத்துரைகளை சமூக செயற்பாட்டாளர்கள் அருளானந்தம் தர்சன், சூடாமணி தர்சன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (422)

## பரிசளிப்பு நிகழ்வு

காரைநகர், ஜீன் 9
யாழ்ப்பாணம் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு நிகழ்வு கல்லூரியின் திறந்தவெளி அரங்கில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் தி.மதிவதனன் தலைமையில் இடம்பெறவுள்ளது.
இந்தநிகழ்வில்முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் இ.இளங்கோவனும் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஓய்வுநிலைப் பிரதிச் செயலர் ப.விக்கினேஸ்வரனும் கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (250)



தெல்லிப்பழைபிரதேசசெயலகசமுர்த்திஅபிவிருத்தித் திணைக்களத்தின் சமுர்த்திப் பயனாளிகளின் பிள்ளைகளானமாணவர்களுக்குசிசுதிரியமற்றும் சிப்தொறபுலமைப்பரிசில்வழங்குவதற்கானசான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வுகள் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று முன்தினம் பிரதேச செயலர் சி.சிவசிறிதலைமையில் இடம்பெற்றது. (9)

## ‘தீவகம்’வரலாற்றுநூல்வெளியீடு

காரைநகர், ஜீன் 9
பிரித்தானிய யாழ் தீவக ஒன்றியத்தினால் ஆளவாழ்தல் அமைப்பின் ஒருங்கிணைப்புடன் என். செல்வராஜாவின் ‘தீவகம்’ எனும் சப்த தீவுகளின் வரலாற்று நூல் வெளியீட்டு நிகழ்வு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில்நாளை ஞாயிற்றுக்கிழமைமாலை 3.00 மணிக்கு ஊடகவியலாளர் இளையதம்பி தயானந்தா தலைமையில் இடம்பெறவுள்ளது.
இந்தநிகழ்வில்முதன்மை விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்கலந்து கொள்ள உள்ளார்.
வரவேற்புரையை யாழ்ப்பாண சமுர்த்தி வங்கி சங்க உத்தியோகத்தர் ப.ஜங்கரனும், நூலாசிரியர்அறிமுக உரையினை வடமாகாணக் கல்வி அமைச்சின் பிரத்தியேகச் செயலாளர் என்.ஆனந்தராஜ்யும், நூல் ஆய்வுரையை ஊடகவியலாளர் இளையதம்பி தயானந்தா, பேராசிரியர்கா.குகபாலன், ம.நித்தியானந்தன், ந.விஜயசுந்தரம், நெடுந்தீவு மகேஸ் ஆகியோரும் கருத்துரைகளை வடமாகாண ஆளுநரின்உதவிச் செயலர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாணக்கல்விஅமைச்சின் செயலர் கி.சத்தியசீலன், மருத்துவர் வை.யதுநந்தனன், உடுத்துறை மகா வித்தியாலய அதிபர் வே.புவனேந்திரன், பேராசிரியர் பொன்.பாலசுந்தரம் பிள்ளை, நடா.சிவராசா, எஸ்.பி.சாமி ஆகியோர் வழங்கஉள்ளனர். (250)

## துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள் அமைப்பு



சாவகச்சேரி, ஜீன் 9
சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் நிறுவுநர் முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர்வே.குமாரசாமியின் குடும்பத்தினரால் கல்லூரிமாணவர்களின்நலன்கருதி 200 அடிநீளமான இரு துவிச்சக்கரவண்டிப்பாதுகாப்புநிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
அத்துடன் கல்லூரி உருவாக்கப்பட்ட காலத்தில் அமைக்கப்பட்டு சேதமடைந்து காணப்பட்ட 80 அடி மதிலும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. மாணவிகளுக்கென 135 அடி நீளமான துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்புகொட்டகையும் கல்லூரிக்கு வரும் பெற்றோர் மற்றும் விருந்தினர்களுக்கென 65 அடி நீளமான துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு கொட்டகையும் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (9)



## மரக்கன்றுகள் நடப்பட்டன

அனலைதீவு, ஜீன் 9
பன்னாட்டுசுற்றாடல்வாரத்தையொட்டிஅனலைதீவுசதாசிவ மகாவித்தியாலய வளாகத்தில் நேற்று முன்தினம் மாணவர்கள்முன்னிலையில் ஆசிரியர்களால் மரக்கன்றுகள்நடப்பட்டதெனத் தெரிவிக்கப்பட்டது.
வகுப்பாசிரியர்களால் மரக்கன்றுகள் நடப்பட்டு அந்த வகுப்பு மாணவர்களிடம் மரக்கன்றினை வளர்க்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டது. (9)

## கருத்துரையும் கலந்துரையாடலும்

கொழும்பு, ஜீன் 9
புதிய ஜனநாயக இளைஞர் முன்னணியின் ஏற்பாட்டில் சர்வதேச சூழல் தினத்தை முன்னிட்ட கருத்துரையும் கலந்துரையாடலும் ‘இயற்கை சூழலை பாதுகாக்க எழுந்து நிற்போம்’ என்றதொனிப்பொருளில்நாளை ஞாயிற்றுக்கிழமைமாலை 3 மணிக்கு மாத்தளை விஹார வீதியில் அமைந்துள்ள புனித பிரான்சிஸ் சிறுவர் இல்ல மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

# ஆன்மிக விழுமியங்களைப் பொருட்படுத்தாத சமூகத்தில் நல்லிணக்கம் சார்ந்த இலக்குகளை அடைவது கடினமாகும்

## தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் பணிப்பாளர் ஜயசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 9

'நல்லிணக்கம் என்பது ஒரு ஆன்மிகத் தத்துவமாகும். ஆன்மிக விழுமியங்களைப் பொருட்படுத்தாத சமூகத்தில் நல்லிணக்கம் சார்ந்த இலக்குகளை அடைவது கடினமாகும். எனவே நாம் அனைவரும் ஒன்றிணைந்து சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்கும் எதிரான சவால்களை எதிர்கொள்ள வேண்டும் என தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் எம். எஸ். ஜயசிங்க கூறினார்.

கொழும்பில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற பன்னாட்டு வழிநடத்தல் குழுவுடனான அமர்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

2015 ஜனவரி அரச தலைவர் தேர்தலின் முக்கிய அம்சமான தேசிய ஒருமைப்பாட்டையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்பும் பொருட்டு தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் உருவாக்கப்பட்டது. தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை நிறைவேற்றத் தேவையான செயற்றிட்டங்களை வடிவமைத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் போன்ற கடமைகளை சிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அமைப்பு மேற்கொள்கிறது. சமூகங்களிடையே உறவுப் பாலங்களைக் கட்டியெழுப்புவதன் மூலம் நிலைத்து நீடிக்கக் கூடிய சமாதானத்தை உருவாக்கலே அதன் தலையாய கடமையாகும். சிறிய மற்றும் பெரிய மட்டங்களில் ஆயுதப் போராட்டத்தைத் தடுத்தலை நாம் அனைவரும் உறுதி செய்ய வேண்டும். அதனை அரசு தனியாகச் செய்ய முடியாது. நாங்கள் இலங்கையில் இன்னும் விடைகளைத் தேடிக்கொண்டிருக்கின்றோம். நாம் அனைவரும் சாதி, மத, இன, மொழி பேதமின்றி வருந்தியுள்ளோம். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக இலங்கையில் இன்னும் ஒருசிலர் எம்மை மனிதர்களாக ஒன்றிணைப்பது எது என்பதையும் பொது நலனுக்காக ஒன்றிணைந்து செயற்படுவது எவ்வாறு என்பதையும் உணரத் தவறியுள்ளனர்.

இறுதியாக, தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அமைப்பு தேசிய ஒருமைப்பாட்டுக்கான ஒரு வரைபடத்துடன் செயலாற்ற முன்வந்துள்ளது. இலங்கைச் சூழ்நிலையில் தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் பல் வகையான முறைமைகளைப் பயன்படுத்தவேண்டும். வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மேற்கிலோ இலங்கையின் எப்பக்கங்களிலுமோ உள்ள மக்களின் வாழ்க்கையில் தாக்கம் செலுத்தும் பல்வேறு காரணிகளுடன் தேசிய ஒருமைப்பாட்டையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்பும் செயன்முறை தங்கியுள்ளது -என்றார். (21)

## நினைவேந்தலை நடத்தும் குழுவுக்கு விண்ணப்பிக்கலாம்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கான பொதுக் குழு ஒன்றை அமைப்பதற்கு முயற்சியாக அந்தக் குழுவில் இணைந்து கொள்ள விரும்பும் பொது அமைப்புக்கள் மற்றும் தகைமை சார்ந்த பொதுமக்களின் விவரங்களை வடக்கு மாகாண முதலமைச்சர் செயலகம் திரட்டத் தொடங்கியுள்ளது. அவ்வாறு சேர்த்துக் கொள்ளக் கூடிய பெயர்களை கடிதத் தலைப்புக்களில் தமது தனிப்பட்ட செயலருக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை இந்த ஆண்டு யார் நடத்துவது என்பதில் சர்ச்சை தோன்றியிருந்தது. வழமை போன்று வடக்கு மாகாணசபை நிகழ்வை நடத்தத் திட்டமிட்ட நிலையில், யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் தாமும் நடத்தப் போவதாகத் தெரிவித்திருந்தமையால் குழப்பம் ஏற்பட்டிருந்தது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாள் அன்று முள்ளிவாய்க்கால் மண்ணிலும் இது எதிரொலித்திருந்தது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கான குழு அமைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையும் இதன்போது பலதரப்புக்களாலும் அழுத்தமாக முன்வைக்கப்பட்டிருந்தன. இவ்வாறானதொரு நிலையிலேயே, முதலமைச்சர் இத்தகைய நடவடிக்கையை முன்னெடுத்தார். இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள பத்திரிகை அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஆண்டுதோறும் மே மாதம் 18ஆம் திகதி நினைவுபடுத்துவதற்காக நினைவேந்தல் நாளாக அந்தத் தினத்தை அறிவித்திருந்தோம். அதற்காக இந்த ஆண்டுக்கான வழிநடத்தல் குழுவொன்றை அமைத்திருந்தோம். எதிர்காலங்களில், சிலவேளை வட்மாகாண சபைக்கான தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்படாமல் எம்மவர் ஆட்சியில் இல்லாதிருக்க வேண்டிவரினும் அல்லது ஆளுநரின் ஆட்சியில் எதிர்வரும் காலங்களில் இருக்கவேண்டிவரினும்கூட இந்த நிகழ்வைத் தொடர்ந்து ஆண்டுதோறும் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய உத்தேசித்துள்ளோம். அதற்கான குழுவை இப்போதே நியமிக்கத் தீர்மானித்துள்ளோம்.

நினைவேந்தல் தொடர்ச்சியாக ஆண்டுதோறும் பரந்துபட்டவிதத்தில் முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதில் உறுதியாகவுள்ள ஆர்வமுள்ள பொது நிறுவனங்களை இந்தக் குழுவில் நிறுவனத்துக்கு இருவர் என்றரீதியில் இணைத்துக் கொண்டு ஒரு குழுவை உருவாக்க எண்ணியுள்ளோம். மேலதிகமாக வேண்டுமெனில் தேவையான சில நபர்களையும் உள்ளடக்கஉத்தேசித்துள்ளோம்.

இந்தக் குழுவானது 2019ஆம் ஆண்டிலிருந்து சுயமாக இயங்கக் கூடியதாக இருக்கும். குழுவில் இணைந்து கொள்ள விரும்புவோர், முதலமைச்சரின் தனிச் செயலர், முதலமைச்சர் அலுவலகம், வடமாகாணம், கைதடி என்ற முகவரிக்கு கடிதத் தலைப்புக்களில் கடிதங்களை அனுப்பி வைக்கலாம். குழு அங்கத்தவர் நியமனமானது உரியவாறு வெளிப்படையாக காலாகாலத்தில் நடைபெறும் - என்றுள்ளது. (உ-5)

### கடற்றொழில்...

மொழியை அடுத்து போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் கடலட்டை பிடிப்பில் ஈடுபடுகின்றனர். நிபந்தனைகளை மீறி அவர்கள் தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கும் உள்ளூர் மீனவர்கள், கடலட்டை பிடிப்பில் ஈடுபடுவோரை வெளியேற்றவேண்டும் என்று தொடர்ச்சியாகக் கோரி வருகின்றனர். கடந்த புதன்கிழமை, மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கு முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. போராட்டத்தின் முடிவில், சமாசத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில், கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தை முடக்கி போராட்டம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. இருப்பினும் இறுதி நேரத்தில் கடற்றொழில் சம்மேளனம், சமாசம் என்பன பின்வாங்கின. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நீரியல்வளத் திணைக்களத்தை முடக்கும் போராட்டம் நேற்று நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியிலுள்ள கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அலுவலகம் நேற்றுக் காலை 7.15 மணிக்கு போராட்டக்காரர்களால் பூட்டுப் போட்டு பூட்டப்பட்டது. பணியாளர்கள் உள்ளே செல்ல முடியாத நிலமை ஏற்பட்டது.

திணைக்களத்தின் முன்பாக போராட்டக்காரர்கள் அமர்ந்தனர். நீரியல்வளத்துறை சட்டத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்தவேண்டும், கடல்வளத்தைச் சுரண்டாதே, மக்கள் வயிற்றில் அடிக்காதே என்ற வாசகங்கள் தாங்கிய பதாகைகளை போராட்டக்காரர்கள் ஏந்திப் பிடித்திருந்தனர்.

மீனவர்கள், பொதுமக்கள், அரசியல்வாதிகள் என்று சுமார் நூறுபேர் அளவில் அங்கு திரண்டிருந்தனர்.

போராட்டம் ஆரம்பிக்கப்படும்போது வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன், பருத்தித்துறைப் பிரதேச சபைத் தவிசாளர் அரியகுமார், கரவெட்டி பிரதேச சபைத் தவிசாளர் ஐங்கரன் ஆகியோர் இருந்தனர். அதனைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் அங்கு வந்து சேர்ந்தார். காலை 8.30 மணியளவில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலர் எஸ்.கஜேந்திரன் வருகைதந்தார். நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், கஜேந்திரனை தனக்குப் பக்கத்தில் அமருமாறு கோரியபோதும் அவர் அதில் அமரவில்லை. தள்ளிச் சென்று அமர்ந்தார். காலை 9 மணியளவில், நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், வே.சிவயோகன், அ.பரஞ்சோதி, கே.சயந்தன், அஸ்மின், ஜெயசேகரம், சி.தவராசா ஆகியோரும் காலை 9.30 மணியளவில், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா, மாநகர சபை மேயர் இ.ஆர்னோல்ட் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் வருகை தந்தனர்.

காலை 11.15 மணியளவில், கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் அங்கு வருகை தந்து, போராட்டக்காரர்களுடன் பேச்சு நடத்தினார்.

அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை மீறுகின்ற படகுகளை உடனடியாகப் பிடிப்போம் என்று உதவிப் பணிப்பாளர் உறுதி வழங்கினார். இதனையடுத்துப் போராட்டக்காரர்கள் இரு நாள் அவகாசம் தருவதாகவும், உரிய நடவடிக்கை எடுக்காவிடின் திங்கட்கிழமை மீண்டும் நீரியல்வளத் திணைக்களம் முடக்கப்படும் என்றும் தெரிவித்தனர். போராட்டம் நிறைவுக்கு வந்ததையடுத்து திணைக்களத்தின் கதவு, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் திறந்து விடப்பட்டது. (உ-5,8,26)

### தமிழ்க்...

விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன ஆகிய இருவருமே தமிழ் மக்களுக்கு எதிரிகள் தான். மோசமான எதிரியை மாற்றுவதற்காக ஆட்சி மாற்றத்துக்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்தது. இவ்வாறு ஏணியாக இருந்தவர்களை எட்டி உதைக்கும் வகையில் அரச தலைவர் இன்று செயற்பட்டு வருகிறார். எதிர்க்கட்சியில் இருக்கின்ற போதிலும் வடக்கு, கிழக்கு அபிவிருத்திகளில் பங்கேற்கவேண்டிய கடப்பாடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இருக்கின்றது. வடக்கு, கிழக்குக்கு அரச தலைவரால் சிறப்புச் செயலணியொன்று அமைக்கப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்குக்கான சிறப்புச் செயலணியிலிருந்து அந்தப் பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியான கூட்டமைப்பு கவனத்தில் எடுக்கப்படாமல் விடப்பட்டுள்ளது. கூட்டமைப்பின் முகத்தில் தனது காலால் எட்டி உதைக்கும் வகையில்மைத்திரி செயற்பட்டுள்ளார்.

அதேவேளை, இலங்கையில் இருக்கின்ற படைகளில் ஏனைய மாகாணங்களில் இல்லாதளவு வடக்கிலும், கிழக்கிலும் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். படையினர் இனப் படுகொலையில் ஈடுபட்டனர் என்பது உலகறிந்த விடயம். சரத் பொன்சேகா உள்ளிட்ட தளபதிகளும் ஈடுபட்டனர். இவ்வாறு படுகொலைகளில் ஈடுபட்ட இராணுவம் மரம் வளர்ப்பு, வீடு கட்டுதல் போன்ற நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றது.

இரணைமடுக் குளத்துக்குப் பின்பகுதியில் பெரிய இராணுவக் குடியிருப்பு அமைக்கப்பட்டு வருகின்றது. இது ஏன் நடக்கின்றது? என்றும் கேள்வி எழுப்பினார். (உ-5,31)

### பகிடிவதையை...

பண்டாரவளை மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் மனிதாபிமானமற்ற பகிடிவதையை ஒழிப்பதற்கு பொறுப்பு வாய்ந்த அனைத்துத் தரப்பினரும் இணைந்து பொது வேலைத்திட்டமொன்று குறித்து உடனடியாகச் சிந்திக்கவேண்டும்.

பண்பாடற்ற முறையில் இடம்பெறும் மனிதாபிமானமற்ற பகிடிவதை காரணமாக கடந்த சில ஆண்டுகளாக பல்கலைக் கழக மாணவர்கள் பல்வேறு விரும்பத்தகாத விடயங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியிருந்தது.

எதிர்காலத்தில் நாட்டைப் பொறுப்பேற்க உள்ள மாணவர் தலைமுறைக்கு ஏற்பட்டுள்ள இந்தச் சவாலுக்கு உடனடியாகத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டியது அவசியம்.

இந்த நடவடிக்கைகளின் பின்னால் சில அதிகார மோகம் பிடித்த அரசியல் அமைப்புக்கள் செயற்படுகின்றன. எதிர்காலத் தலைமுறையினரின் எதிர்காலத்தை இருளில் தள்ளும் இந்தப் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவதற்கு அனைத்துத் தரப்பினரும் தமது பொறுப்புக்களைச் சரியாக நிறைவேற்ற வேண்டும் - என்றார். (உ-5)

### ம.எண்ணெய்...

கள் பாதிக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. மீனவர்கள் மற்றும் சமுர்த்திக் குடும்பங்க ளுக்குப் பழைய விலையிலேயே மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது. இந்த நிலையில் மண்ணெண்ணையின் விலையை 25 தொடக்கம் 30 ரூபாவால் குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (21)

### காங்கேசன்...

ளப்பட்ட பின்னர் மீன்பிடிப் படகுகள் அங்கிருந்து வெள்ளோட்டம் விடப்பட்டன.

இந்த நிகழ்வில் வலி. வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

"கடந்த மே மாதம் 26ஆம் திகதி காங்கேசன்துறை மத்தி, காங்கேசன்துறை மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 40 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டிருந்தன. அங்கு மீளக்குடியமர்ந்த மக்கள் தொழில் செய்வதற்கு வாய்ப்பளிக்கப்படவேண்டும். அவர்களில் பெரும்பாலானவர்கள் கடற்றொழிலை நம்பியிருப்பதால் இன்று (நேற்று) காங்கேசன்துறையிலுள்ள குரங்கன் துறை அந்த மக்களிடம் கையளிக்கப்படுகிறது" என்று நிகழ்வில் உரையாற்றிய வலி. வடக்குப் பிரதேச சபைத் தலைவர் தெரிவித்தார். மீளக்குடியமர்ந்துள்ள மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப உதவிகள் தேவை என்றும் அவர் வலியுறுத்தினார். காங்கேசன்துறையிலிருந்து நகுலேஸ்வரம் செல்லும் பாதையையும் விடுவிக்கப்படவேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். (உ-ற114)

### ஈழத்...

பன்னாட்டு மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது. ஓய்வுபெற்ற நீதிபதிகளான கே.பி. சிவசுப்பிரமணியம், ஜி.எம்.அக்பர் அலி, ஏ. கே.ராஜன் ஆகியோர் பல்வேறு தலைப்புக்களில் உரையாற்ற உள்ளனர். மறுமலர்ச்சி முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வழக்குரைஞர் வைகோ, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் வழக்குரைஞர் தொல்.திருமாவளவன் ஆகியோர் இந்த மாநாட்டில்சிறப்பு அழைப்பாளர்களாகக்கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர். இலங்கையில் இருந்து இளம் வழக்குரைஞர் கே.சுகாஷும் சிறப்பு அழைப்பாளராக இந்த மாநாட்டில் கருத்துரை வழங்குகின்றார். (உ)

# விசாரணைக்குத் தயார்

## மகிந்த அறிவிப்பு



கொழும்பு, ஜூன் 9

ஊடகவியலாளர் கீத் நொயார் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக, குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு வாக்குமூலம் அளிப்பதற்கு தாம் எந்த நேரமும் தயாராக இருப்பதாக முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

ஊடகவியலாளர் கீத் நொயார் கடத்தப்பட்டுத் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவிடம், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைநடத்தத்திட்டமிட்டனர்.
இதுகுறித்துக் கருத்து வெளியிட்ட மகிந்த ராஜபக்ச, இந்த வழக்குத் தொடர்பாக வாக்குமூலத்தை வழங்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் என்னிடம் கோரியிருந்தனர்.
வாக்குமூலம் அளிப்பதற்கான நேரத்தை இன்னமும் அவர்களுக்குக் கொடுக்கவில்லை.
எனக்கு எதிராகப் பழிவாங்கும் நடவடிக்கைகளை அரசு அவ்வப்போது மேற்கொண்டு வருகிறது. என்னைத் தொடர்ந்து தொந்தரவுக்கு உட்படுத்தி வருகிறது.
கீத் நொயார் கடத்தல் தொடர்பாகக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் என்னிடம் விசாரிக்க வரவுள்ளனர் என்பதை அறிவேன். எந்த நேரத்திலும் விசாரணைக்கு முகங்கொடுக்கத் தயாராக இருக்கிறேன், என்றும் அவர் தெரிவித்தார். (5)



## கனடா ஒன்ராரியோ மாகாணத் தேர்தல்: வெற்றி பெற்றார் விஜய் தணிகாசலம்

கொழும்பு, ஜூன் 9
கனடாவின் ஒன்ராரியோ மாகாண நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கையில் பிறந்த தமிழரான, விஜய் தணிகாசலம் சுமார் ஆயிரம் வாக்குகள் வித்தியா சத்தில் வெற்றி பெற்றார்.
ஒன்ராரியோ மாகாண நாடாளுமன்றத்துக்குநேற்று முன்தினம் தேர்தல் நடந்தது. ஸ்காபரோ ரூஜ் பார்க் தொகுதியில், முற்போக்கு கொன்சர்வேட்டிவ் கட்சியின் சார்பில் போட்டியிட்ட விஜய் தணிகாசலம் என்ற தமிழ் இளைஞன் வெற்றி பெற்றார்.
இவருக்கு, 16 ஆயிரத்து 224 வாக்குகள் கிடைத்தன. இவரை எதிர்த்துப் போட்டியிட்ட, தேசிய ஜனநாயகக் கட்சியின் பெலிசியா சாமுவெல், 15 ஆயிரத்து 261 வாக்குகளைப் பெற்றார். ஒன்ராரியோ மாகாண நாடாளுமன்றத்துக்கு தமிழர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும்.
கனடாவின் ஒன்ராரியோ மாகாணத் தேர்தலில் வெற்றிபெற்ற விஜய் தணிகாசலம், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் சமூக ஊடகங்களில் தாம் இட்டிருந்த பதிவுகளுக்காகத் தேர்தலுக்கு முன்னர் மன்னிப்புக் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

## பூநகரியில் ஆயிரம் மெகாவாட் கூட்டு மின் உற்பத்தித் திட்டம்



கொழும்பு, ஜூன் 9
பூநகரிப் பகுதியில் ஆயிரம் மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட, காற்றாலை மற்றும் சூரிய சக்தி கூட்டு மின் திட்டத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக, சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி இராஜாங்க அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்தத் திட்டத்துக்கான காணிகளை அளவீடு செய்யும் பணிகள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளன.
இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான சட்டரீதியான தேவைகளை நிறைவேற்றும் பணிகளில் இப்போது ஈடுபட்டுள்ளோம். திட்டத்துக்கான முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கு போட்டி ஏலம் விடும் முறையைக் கையாளுவோம்.
100 மெகாவாட் திறன் கொண்ட இன்னொரு காற்றாலை மற்றும் 150 மெகாவாட் திறனுள்ள சூரிய சக்தி மின்திட்டங்கள் இன்னும் இரண்டு மாதங்களில் உருவாக்கப்படும். உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்ய முடியும் - என்றார். (5)

## அலோசியசின் மென்டிஸ் நிறுவனத்திடம் ரூ.3 மில். வாங்கிய இராஜாங்க அமைச்சர்



கொழும்பு, ஜூன் 9
இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க,மத்தியவங்கிப்பிணைமுறி மோசடிக் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருக்கும், அர்ஜீன் அலோசியசுக்குச் சொந்தமான மென்டிஸ் நிறுவனத்திடம் இருந்து 3 மில்லியன் ரூபா பெறுமதியான காசோலைகளைப் பெற்றுக் கொண்டுள்ளார்.
கொழும்பு, கோட்டே நீதிமன்றத்தில் நடந்து வரும் வழக்கில் மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் யசந்த கோத்தாகொடை சமர்ப்பித்த பி அறிக்கையிலேயே இதுபற்றிக் கூறப்பட்டது.
இந்தப் பணத்தை இராஜாங்க அமைச்சர் தனது தேர்தல் பரப்புரைக்குப் பயன்படுத்தியுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்ததாகவும் அதில் கூறப்பட்டது.
2015-2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மூன்று கட்டங்களாகத் தலா 1 மில்லியன் ரூபா பெறுமதியான காசோலைகளை அவர் பெற்றிருக்கிறார்.
அமைச்சர் சுஜீவ சேனசிங்கவின் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் இந்தக் காசோலைகளில் ஒன்றை, 2015ஆம் ஆண்டு கொம்பனி வீதியில் உள்ள வங்கியொன்றில் மாற்றியுள்ளார்.
மேலும் இரண்டு காசோலைகள், அமைச்சரின் பாதுகாப்புக்கான பொலிஸ் அதிகாரிகளால், மாற்றப்பட்டன என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டது.
அதேவேளை, முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜீன மகேந்திரனின் 3.2 மில்லியன் ரூபா கடனட்டைக் கொடுப்பனவையும், மென்டிஸ் நிறுவனம் கொடுத்துத் தீர்த்திருப்பதாகவும், நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டது.
மென்டிஸ் நிறுவனத்திடம் இருந்து 3 மில்லியன் ரூபா பெறுமதியான காசோலைகளைத் தனது பரப்புரைக் குழு பெற்றுக் கொண்டது பற்றி தான் அறிந்திருக்கவில்லை என்று இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.
2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தமக்கான பரப்புரைகளை ஐந்து குழுக்கள் மேற்கொண்டதாகவும் அவர் கூறியுள்ளார்.
"இந்தக் குழுக்கள் நலன்விரும்பிகளிடம் இருந்து நன்கொடைகளை பெற்றன. எல்லா நிதி நடவடிக்கைகளையும் அமல் என்பவரே கையாண்டார். அந்தக் குழுக்கள் மென்டிஸ் நிறுவனத்திடம் நன்கொடை பெற்றது பற்றி நான் அறியவில்லை. அறிந்திருந்தால், அதனைப் பெறுவதற்கு அனுமதித்திருக்கமாட்டேன்" என்றும் அவர் தெரிவித்தார். (5)

## விசாரணையை ஒப்படையுங்கள் குற்றவாளிகளை பிடிக்கின்றேன்

### மேர்வின் சில்வா சவால்

முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயின் படுகொலை விசாரணையை தம்மிடம் ஒப்படைத்தால், குற்றவாளிகளை ஒரு மாதத்தில் கண்டுபிடித்துக் காண்பிப்பதாக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.
ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கம்பகா மாவட்டத்தில் மிகவும் ஜனரஞ்சகமான ஒருவர். ராஜபக்ச குடும்பத்தாருடன் அவருக்கு மாற்றுக்கருத்து இருந்தது. ஜெயராஜிற்கு பொலிஸாரிடம் இருந்தே அதிக அச்சுறுத்தல் இருந்தது என்றும் மேர்வின் சில்வா குறிப்பிட்டார். (5)





## மகிந்தவின் ஆசியின்றி மைத்திரிக்கு வாய்ப்பில்லை

### டிலான் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 9
மகிந்த ராஜபக்சவின் ஆசியின்றி, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால், 2020ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில், போட்டியிட முடியாது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும், இணைந்து செயற்பட இணங்கியுள்ளனர்.
2020ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்குப் பொருத்தமானவர் என்று, ராஜபக்ச சகோதரர்களான கோத்தபாய, பசில், சமல் மற்றும் எஸ்.பி.திசநாயக்க என்று பல்வேறு தரப்பினரும், பல்வேறு பெயர்களை முன்மொழிகின்றனர்.
அமைச்சர் துமிந்த திசநாயக்கவோ, அடுத்த அரச தலைவர் வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தான் என்று கூறுகிறார்.
அதனை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால், அவர் போட்டியிடுவதற்கு மகிந்த ராஜபக்ச ஒப்புதலளிக்க வேண்டும். அவரது ஆசி இருக்க வேண்டும், என்றும் தெரிவித்தார். (5)

## சுதர்சினியை ஆதரித்த கோத்தா தரப்பு; சதி செய்த பசில் தரப்பு!

பிரதி சபாநாயகர் தெரிவில், கோத்தபாய ராஜபக்ச தரப்பினர் சுதர்சினி பெர்ணான்டோ புள்ளேக்கு வாக்களித்தனர். பசில் ராஜபக்ச தரப்பினர் சிற்றுண்டிச் சாலையில் சதித் திட்டம் தீட்டிக் கொண்டிருந்தனர்.
சுதந்திரக் கட்சியின் 16 பேர் கொண்ட குழுவினர் எதிரணிக்குச் சென்ற பின்னர் எதிரணி பிளவுபட்டது. ஆனால் அரசு பலமாகியதாக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளு மன்ற உறுப்பினர் நளின் பண்டார சபையில் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
முன்னைய ஆட்சியின்போது அம்பாந்தோட்டையில் மாத்திரமே அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. எமது ஆட்சியில் கிராமம் முழுவதும் அபிவிருத்தி நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இன்னும் ஒரு மாதத்தில் கிராம மாற்றம் என்ற நாமத்தில் துரித கிராம அபிவிருத்தி முன்னெடுக்கப்படவுள்ளது.
தற்போது பிரதி சபாநாயகர் தெரிவின் போது கூட்டு எதிர்க்கட்சிக்குள் பிளவு ஏற்பட்டமை உறுதியாகியது. பிரதி சபாநாயகர் வாக்கெடுப்பின் போது சுதர்சினி பொர்ணான்டோ புள்ளேக்கு கோத்தபாய ராஜபக்ச தரப்பினர் வாக்களித்தனர். பசில் ராஜபக்ச தரப்பினர் சிற்றுண்டிச் சாலையில் சதித் திட்டம் தீட்டிக் கொண்டிருந்தனர். சுதந்திரக் கட்சியின் 16 குழுவினர் எதிரணிக்குச் சென்ற பின்னர் எதிரணி பிளவுபட்டது. ஆனால் அரசு பலமாகியுள்ளது - என்றார். (5,31)

கேலிச்சித்திரம்



நன்றி:அவந்த ஆட்டிகல

# சிங்கள பௌத்த பேரினவாத நிலைப்பாட்டிலேயே மைத்திரி!

## விக்ரமபாகு சாடல்

கொழும்பு, ஜூன் 9


அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் மோசமான சிங்கள பௌத்த பேரினவாத நிலைப்பாட்டிலேயே இருக்கின்றார். தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்காகத் தயாரிக்கப்பட்டு வந்த புதிய அரசமைப்பு உருவாக்கம் அதனாலேயே தடைப்பட்டது. நவ சமசமாஜக்கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன இவ்வாறு குற்றஞ்சாட்டினார்.

நவ சமசமாஜக் கட்சியின் ஏற்பாட்டில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கலந்துகொண்ட நிகழ்வொன்று கொழும்பு மருதானையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன, இலங்கை சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா, புரவெசி பலய அமைப்பின் இணை ஏற்பாட்டாளர் காமினி வெயங்கொட, காணாமல் ஆக்கப்பட்டோரைக் கண்டறியும் குழுவின் இணைப்பாளர் சுந்தரம் மகேந்திரன் மற்றும் தென்னிலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சிலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் உரையாற்றிய விக்கிரமபாகு கருணாரத்ன மேலும் தெரிவித்ததாவது:

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் இறுதித் தீர்மானத்தை எடுத்துக் கைது செய்து, தண்டனையை வழங்குவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாத அளவுக்கு சிங்களப்பேரினவாத சக்திகளின் இடையூறுகள் நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர்பணியகம், விசாரணை செய்வதற்கும், நீதிபதிகளின் குழுக்களை அமைப்பதற்கும் சாத்தியங்கள் இல்லை என்றுதான் தெரிகிறது.



பன்னாட்டுச் சமூகத்தின் உதவிகளையும் பெறமுடியாது. இவற்றைக் கூறும்போதே சிங்கள இனவாதச் சக்திகள் கூச்சலிட்டுப்பல்வேறுஎதிர்க் கருத்துக்களைக் கூற ஆரம்பிக்கின்றன. முதலாவதாகச் சிங்கள இனவாத சக்திகளை அழிப்பதற்காக ஒட்டுமொத்த சமூகத்தையும் சுத்தப்படுத்துவதற்கான கருத்தாடலை ஆரம்பிக்க வேண்டும். இப்போது பணத்தை விரயம் செய்து அமைப்புக்களை ஏற்படுத்தியும் ஒன்றையும் செய்ய முடியாவிட்டால் அதில் பயனில்லை.

1980ஆம் ஆண்டுகளில் மாகாண சபை முறையை எதிர்த்து மக்கள் விடுதலை முன்னணியினர் கிளர்ச்சி செய்தனர். மாகாணசபைவேண்டாம், அதற்கு உதவினால் கொலை செய்வோம், வாக்களித்தால் விரல்களை வெட்டுவோம் என்று அன்று அறிவித்தனர்.

வேறுமொழிகளுக்குச் சமவுரிமை அளிக்கமுடியாது. தோட்டத் தொழிலாளர்களுக்கு குடியுரிமை வழங்க முடியாது என்ற மூன்று விடயங்களை முன்வைத்துத்தான் மக்கள் விடுதலை முன்னணி கிளர்ச்சிகளை முன்னெடுத்தது.

இன்று அந்தவிதமான இனவாதச்சிந்தனைகளும் அரச தலைவருக்கு இருப்பதால்தான் அவரும் சற்றுத் தடுமாற்றம் அடைகின்றார். அரசமைப்பை மாற்றுவதற்குப் பெரிதும் கஷ்டப்பட்டு வரைவுகளைக் கொண்டு வந்தனர். இன்று அந்த முயற்சி தேக்கமடைந்தது..

இனவாதச் சக்திகளால்அதற்குத்தடைக்கற்கள் போடப்பட்டன. அதனை எதிர்கொள்ள வேண்டும் அல்லது அவற்றைத் தகர்த்தெறிய வேண்டும். ஆனால் அவற்றைச் செய்யாமல் வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தால் பிரச்சினைகள்தீராது. ரணில்விக்கிரமசிங்கவிடம் ஏன் பேசுகிறீர்கள், அவர் வங்கிக் கொள்ளையாளர் அல்லவா எனப் பலரும்என்னிடம்வினவுகின்றனர். வங்கிக் கொள்ளையாளரா அல்லதுகொள்ளைக்காரரா என்று எனக்குத் தெரியாது. ஆனால் அதனைப் பார்க்கிலும் இனவாதமே பயங்கரமானது. இனவாதத்தை அழிப்பதற்காக வங்கிக் கொள்ளையரானாலும் அவருடன் சேர்ந்து செயற்பட நான் தயார் - என்றார். (5)

# கூட்டு அரசிலிருந்து விலக சு.க. தீர்மானிக்கவில்லை

கொழும்பு, ஜூன் 9



கூட்டு அரசிலிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி விலகுவது குறித்து, இதுவரை தீர்மானிக்க வில்லையென, பிரதிய மைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகம தெரிவித்தார்.

சிறிலங்காசுதந்திரக்கட்சியின் மையச் செயற்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

"அரசிலிருந்து வெளியேறிய 16பேர் குழு, சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டு அரசிலிருந்து வெளியேறவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளார்கள். ஆனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, கூட்டு அரசிலிருந்து வெளியேறுவது தொடர்பில் எந்தவொரு முடிவும் எடுக்கவில்லை" என்று அவர் குறிப்பிட்டார். (5)

# கோப் குழுவின் தலைவராக மீண்டும் சுனில் ஹந்துன்நெத்தி

கொழும்பு, ஜூன் 9

கோப் குழுவின் தலைவராக மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தியும், அரச கணக்குக்குழுவின்தலைவராக லசந்த அழகியவன்னவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பொதுமனுக் குழுவின் தலைவராக சுஜீவ சேனசிங்க தெரிவானார்.

நாடாளுமன்றத்தில்கோப்குழுவுக்கான தெரிவும், அரச கணக்குக்குழு மற்றும் பொது மனுக்கள் குழுவுக்கான புதிய தெரிவுகளும் இடம்பெற்றன. கோப் குழுவின் தலைவர் பதவிக்கு மீண்டும் மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் சுனில் ஹன்துன்னெத்தி தெரிவு செய்யப்பட்டார். இவரை நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர முன்மொழிந்தும், லக்ஸ்மன் செனவிரத்ன வழிமொழிந்தும் மீண்டும் தலைவர் பதவிக்குத் தெரிவு செய்தனர்.

அரச கணக்குக் குழுவின் தலைவராக லசந்த அழகியவன்னவும், பொது மனுக்கள் குழுவின் தலைவராக சுஜீவ சேனசிங்கவும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர். கோப் குழுவின் அடுத்த கட்ட நடவடிக்கைகள், சுற்றிவளைப்புக்குழுவொன்றைப் புதிதாக நியமிக்க நடவடிக்கைகளை எடுக்கவும் கோப் குழுவின் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது. (5,31)

# ஆண்டிறுதிக்குள் மாகாணசபைத் தேர்தல்

கொழும்பு, ஜூன் 9

மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தும் முறை குறித்துத் தீர்க்கமான முடிவுகள் எட்டப்பட்டதும் ஆண்டு இறுதிக்குள் கால எல்லை முடிவடைந்த அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தலை நடத்தத் தயாராகவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடமத்திய, சப்ரகமுவ மற்றும் கிழக்கு மாகாணங்களின் பதவிக் காலமானது கடந்த 2017ஆம்ஆண்டுடன் நிறைவடைந்த நிலையில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துடன் வடக்கு மற்றும் வடமேல் ஆகிய மாகாண சபைகளுக்குமான கால எல்லையும் நிறைவுக்கு வரவுள்ளது. மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துமாறு கோரி அழுத்தங்கள் எழுந்தவண்ணமே உள்ளன.

கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலானது புதிய முறையில் நடத்தப்பட்டது. தேர்தல் முறைமையில் பெரிய பிரச்சினைகளை எதிர்கொண்டோம். மாகாண சபைகளுக்கான தேர்தலைப் புதிய முறையில் நடத்த முடியாது.

மாகாண சபைத்தேர்தலை நடத்தும் முறை தொடர்பில் கட்சிகளுக்கிடையிலான பேச்சு நடத்தி, அனைவருக்கும் ஏற்ற வகையிலான தேர்தல் முறை தெரிவு செய்து இந்த ஆண்டின் இறுதிக்குள் தேர்தலை நடத்துவோம் - என்றார். (5)



# தமிழர்கள் உரிமைப் போராட்டத்தை மறக்கவே சுயபொருளாதார வலுவை உடைக்கும் திட்டங்கள்

## நாடாளுமன்றில் அம்பலப்படுத்தினார் யோகேஸ்வரன்

கொழும்பு, ஜூன் 9

தமிழர்களின் சுயபொருளாதார வலுவை உடைத்துவிட்டால், அவர்கள் உரிமைக்காகப் போராடமாட்டார்கள். தங்கள் பொருளாதார நலன் குறித்தே சிந்திப்பார்கள். இதற்காகவே, 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கு- கிழக்கில் நுண்நிதி, பிரமிட் வியாபாரங்கள் என்பன அறிமுகப்படுத்தப்பட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் முன்னாள் பாதுகாப்புச் செயலரால் வடக்கு - கிழக்கில் ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

1977ஆம் ஆண்டு தொடக்கம் 2009ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 30 ஆண்டுகளாகத் தமிழர்களால் எவ்வாறு போர் நடத்தி முடிக்கப்பட்டது என்பதே ஆய்வாகும்.

தமிழ் மக்களின் சுயசார்புப் பொருளாதாரம் பலமாக இருக்கும் வரை தமிழர்களுக்குச் சிந்திக்க நேரமிருக்கும் என்பதே அந்த ஆய்வில் கிடைத்த முடிவாகும். தமிழர்களின் சுயபொருளாதார வலுஉடைத்துவிட்டால், சோறா? சுதந்திரமா? என்ற நிலை அவர்களுக்கு உருவாகும்.

உதாரணமாக மலையகத் தமிழ் மக்கள் போல பொருளாதார உறுதிப்பாட்டு நிலையை உடைத்து விட்டால், தமிழர்களது அரசியல் விடுதலைக் கோரிக்கை தாமாகவே நீர்த்துப்போகும் என்பது அவர்களின் கணக்கு.

தமிழர்களின் நேரம் அனைத்தும் உழைப்பை நோக்கியதாக இருக்கும். சிந்திக்க நேரம் இருக்காது என்று திட்டமிடப்பட்டது.

2009ஆம் ஆண்டுக்கு முன்னர் போர் இடம்பெற்றபோதும், தமிழர்கள் தங்களது அடிப்படைப்பொருளாதார இருப்பை அடையவிடவில்லை. கடந்த 30 ஆண்டுகளாகப் போர்ச் செலவோடு, சுயசார்பு பொருளாதாரத்துக்கு நிதி ஒதுக்கப்பட்டு, தமிழர்களின் நிதிப் பொருளாதார நிலை ஓரளவு உறுதிப்பாட்டுத் தன்மையிலேயே இருந்தது.

2009ஆம் ஆண்டின் பின்னர், நுண்நிதி நிறுவனங்கள் மற்றும் பிரமிட் வியாபாரம் என்பனவற்றின் ஊடாக வடக்கு - கிழக்கு மக்களின் அடிப்படைப் பொருளாதாரப் பொறிமுறை அழிக்கப்பட்டுவிட்டது - என்றார். (5)



## தோட்ட மக்கள் நேற்று வீதி மறியல் போராட்டம்

நுவரெலியா,ஜீன் 9
தோட்ட நிர்வாகத்தின் எதேச்சதிகாரப் போக்கைக் கண்டித்து, மஸ்கெலியா சாமிமலை தோட்ட மக்கள் நேற்றுவீதிமறியல்போராட்டத்தில் ஈடுபட்டனர்.
ஆர்ப்பாட்டம் காரணமாக அந்த வீதியின் போக்குவரத்துப் பாதிப்படைந்தது எனத்தெரிவிக்கப்பட்டது.
தேயிலைத் தோட்டங்கள் காடாக்கப்படுகின்றன.
தொழிலாளர்களைமருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்கு தோட்ட நிர்வாகம்நோயாளர்காவுவண்டி வழங்கப்படுவதில்லை.தாய்மார்களுக்கான கொடுப்பனவு வழங்கப்படுவது இல்லை.
இந்தத்தேவைகளைநிறைவேற்றிக்கொடுக்க தோட்ட நிர்வாகம் முன்வர வேண்டும்என்றகோரிக்கைமுன்வைத்தும், தோட்ட முகாமையாளரைவெளியேற்றுமாறும் கோரியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் சுமார் 200 க்கும் மேற்பட்டதொழிலாளர்கள்கலந்துகொண்டனர். (ந.ரி4)

# மைத்திரி, ரணிலின் இடையே பனிப் போர் உச்ச நிலையில்

## கனக ஹேரத் எம். பி. கூறுகின்றார்

**கொழும்பு, ஜூன் 9**

**மத்தியவங்கிபிணைமுறிவிவகாரத்தைஅடிப்படையாகக் கொண்டு அரச தலைவருக்கும் தலைமை அமைச்சருக்கு மிடையில் பனிப்போர் தீவிரமடைந்துள்ளது. ஐக்கியதேசியக்கட்சியின்அடுத்ததலைவர்எனஅந்தக்கட்சியினர் எதிர்பார்க்கும் பிரதித் தலைவர் ஒருவரும் அர்ஜூன் அலோசியசிடமிருந்து பணம் பெற்றுள்ளார்.**

இவ்வாறு கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும்நாடாளுமன்றஉறுப்பினர்கனக ஹேரத் தெரிவித்தார்.
கூட்டுஎதிரணிஏற்பாடுசெய்தஊடகவியலாளர் சந்திப்பு நேற்று பொரளை என்.எம். பெரேராநிலையத்தில்நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
கூட்டுஅரசுஆட்சிக்குவருவதற்குமுன்னர் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் மறந்துசெயற்படுகிறது. நாட்டுவளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்து ஆட்சியைகொண்டுநடத்துவதற்கும்எதிர்பார்க்கிறது. அதனால்தான் வெளிநாடுகளுடன் பல்வேறு உடன்படிக்கைகளை அடிக்கடி மேற்கொண்டுவருகிறது.
எட்காஉடன்படிக்கையைகொண்டுவருவதற்கு எதிர்பார்த்தது. அதற்கு நாடு தழுவிய ரீதியில் எதிர்ப்பலை கிளம்பியது. உடனே அதைக் கிடப்பில் போட்டு விட்டு சிங்கப்பூருடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை செய்துகொண்டுள்ளது. அதன் மூலம் வெளிநாட்டு சேவையாளர்கள் எமது நாட்டை ஆட்கொள்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
பெலியத்தவிலிருந்து கதிர்காமம் வரையிலானரயில்பாதையை வெளிநாடுகளுக்கு விற்பனைசெய்வதற்கானவேலைத்திட்டம் ஒன்றும்இடம்பெறுகின்றது என்று அறியக் கிடைத்துள்ளது. எதிர்காலத்தில்அந்தரயில் பாதையூடாக பயணிப்பதற்கு மேலதிக கட்டணம் செலுத்த வேண்டிவரும்.
அரசு இராணுவத்தினர் மீதான பழிவாங்கலை மீண்டும் ஆரம்பித்துள்ளது. கடந்த காலங்களில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜின் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில்கடற்படைஅதிகாரிகள்சிலரைகைது செய்திருந்தனர். எனினும் நீதிமன்றினூடாக அவர்கள் விடுதலைசெய்யப்பட்டனர்.
மீண்டும் அவ்வதிகாரிகளை சிறையில் அடைப்பதற்கு சட்டமா அதிபர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.
அது தொடர்பிலான வழக்கு எதிர்வரும் 14 ஆம் திகதி விசாரணைக்கு வரவுள்ளது.
நாம் அந்த அதிகாரிகளுக்கு ஆதரவு தெரிவித்து எதிர்வரும் சனிக்கிழமை பி. ப. 2 மணிக்கு ஆர்ப்பாட்டம் செய்யவுள்ளோம்.
மத்திய வங்கி மோசடி விவகாரம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தம்மை இனங்காட்டிக்கொள்வதற்கு நாணப்பட வேண்டிய விடயமாக மாறியுள்ளது.
அரசதலைவருக்கும், தலைமைஅமைச்சருக்கும் இடையே இதனால் பனிப்போர் ஆரம்பித்துள்ளது.
மத்தியவங்கிபிணைமுறிமோசடிக்குபிரதமர் ரணில் விக்ர மசிங்க தலைமை தாங்கினார் என்பது முழு நாட்டுக்கும் தெரிந்த விடயம்-என்றார். (ற-31)

## வாகன விபத்தில் இருவர் உயிரிழப்பு

கொழும்பு,ஜீன் 9
தெஹிவளையில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்தனர். இந்த விபத்து நேற்று முன்தினம் இடம்பெற்றது எனப்பொலிஸார்தெரிவித்தனர். மோட்டார்சைக்கிளில் தொழுகைக்காகப் பள்ளிக்குசென்றுதிரும்பும் போதேஇந்தவிபத்துஇடம் பெற்றதுஎனத்தெரிவிக்கப்பட்டது. விபத்தில் தெஹிவளையைச்சேர்ந்த21வயதுடைய இளைஞனும் மற்றும் ரோட் பிரதேசத்தைச் சேர்ந்த 13 வயது சிறுவனுமேஉயிரிழந்தனர்.
மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ந.ரி4)

## மீன்பிடிக்க சென்றவர் கடலில் மாயம்

கொழும்பு,ஜீன் 9
ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்டமீனவர்ஒருவர்கடலில் வீழ்ந்துகாணாமற்போயுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. மீன்பிடி யில் ஈடுபட்டுவிட்டு கரைக்கு திரும்பிக் கொண்டிருந்த படகில் இருந்தஒருவர்கடல்அலையில் சிக்கி கடலில்வீழ்ந்தார் எனக் கூறப்பட்டது. பண்டாரவத்தை, பேருவளை பிரதேசத்தைச்சேர்ந்த38வயதுடையஒருவரேஇவ்வாறு காணாமற்போயுள்ளார்.
காணாமற் போயுள்ள மீனவரைதேடும்பணியைபேருவளை பொலிஸார் மற்றும் கடற்படையினர் முன்னெடுத்தனர். (ந.ரி4)

## சைக்கிள் சின்னத்தினரால் மகரகமவில் குழப்பநிலை

கொழும்பு, ஜீன் 9
மஹரகம நகர சபையை கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் சைக்கிள் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிக்கொண்ட சுயாதீன குழு பிரதிநிதித்துவப்படுத்திய ஆறு பேர் பதவி விலகி அந்தப்பதவிகளுக்குசிறிலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் பதவியேற்றனர். அதற்கு ஜே.வி.பி. மற்றும் ஐ.தே.கட்சி.யினர் எதிர்ப்புத் தெரிவித்ததால் மஹரகம நகர சபையில் நேற்று அமைதியின்மை ஏற்பட்டது.
கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சுயேச்சைக் குழுவில் போட்டியிட்டு மஹரகமை நகர சபைக்குத் தெரிவுசெய்யப்பட்ட ஆறு உறுப்பினர்களுக்குப் பதிலாக சிறி லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் ஆறு பேர் நேற்று சத்தியப்பிரமணம் செய்துகொண்டனர். முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் முன்னிலையிலேயே அவர்கள் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.
அவர்களின் சத்தியப்பிரமாணத்துக்கு ஏனைய நகர சபை உறுப்பினர்கள் சிலர் நேற்று எதிர்ப்புத் தெரிவித்ததால் நகர சபையில் அமளிதுமளி ஏற்பட்டது.
அதையடுத்து மஹரகம நகர சபை கூட்டத்தொடரை நகர சபைத் தலைவர் ஒத்திவைத்தார். அந்தப் பதவி ஏற்பு தொடர்பில் நீதித்துறை ஆலோசனையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவித்துள்ளார். உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு சிறிலங்கா பொதுஜன பெரமுன தாக்கல் செய்த வேட்புமனு நிராகரிக்கப்பட்டது.
அதைத் தொடர்ந்து சைக்கிள்சின்னத்தில் சுயேச்சைக் குழு 2 இல் போட்டியிட்ட அணிக்கு சிறிலங்கா பொதுஜன பெரமுன ஆதரவளிப்பதற்குத் தீர்மானித்தது. சுயேச்சைக்குழு தேர்தலில் நாற்பத்து நான்காயிரத்து 783 வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியது. அந்த அணிக்கு 25 ஆசனங்களும் கிடைக்கப் பெற்றிருந்தன.
தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட ஆறு பெண் உறுப்பினர்கள் பதவி விலகினர்.
அதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே சிறி லங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் ஆறு பேர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர். (ற-61)

## அதிகாரத்துக்கு வருவதற்காக அரசின் மீது பொய் விமர்சனம்

### நீதி அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவிப்பு

கொழும்பு, ஜீன் 9
நீதிபதிகளுக்கு அரச மாளிகையில் இருந்து உத்தரவு பிறப்பித்தயுகத்தைஇல்லாமலாக்கிசுயாதீனநீதிமன்ற கட்டமைப்பை ஏற்படுத்தியுள்ளோம். அதிகாரத்துக்கு வரும் பேராசையில் அரசுக்குஎதிராகதெரிவிக்கப்படும் விமர்சனங்களை மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.
இவ்வாறு நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.
இரத்தினபுரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
நீதி அமைச்சின் வேலைத்திட்டங்களைசுயாதீனமாக மேற்கொள்வதற்கு அரசதலைவரும் தலைமை அமைச்சரும் பூரண ஒத்துழைப்பை வழங்குகின்றனர்.
நீதிமன்ற கட்டமைப்பை சுயாதீனமாக செயற்படுத்தும்எனதுவேலைத்திட்டத்துக்கு அது பெரிய உந்துசக்தியாக இருக்கின்றது. தலைமை நீதியரசர் பல சவால்களுக்கு மத்தியில் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுத்துக்கொண்டு நீதிமன்றக் கட்டமைப்பை முன்னேற்றப் பாதைக்குக் கொண்டுசெல்கின்றார்.
நீதிமன்றத்தைஅரசதலைவர் தான் வழி நடத்துகின்றார் என இன்று யாராலும் தெரிவிக்கமுடியாது. ஏனெனில் கடந்த ஆட்சிக்காலத்தில் அரச மாளிகையில் இருந்துதான் நீதிபதிகளுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டதை எங்களால் காணமுடிந்தது.
ஆனாலும் அந்த நிலமையை இன்று அதிகமானவர்கள் மறந்துள்ளனர்.
அன்றைய நீதிமன்ற நடவடிக்கையின் பயனாகத் தான் பாதாளக் குழுக்கள் தோன்றின. அதேபோன்று மனித படுகொலைகளை செய்யக்கூடிய குழுக்கள் நாட்டுக்குள் உருவாகின.
இவ்வாறான சவால்களுக்கு முகம்கொடுத்தே நீதிமன்றக் கட்டமைப்பை சுயாதீனமாக்க நடவடிக்கை எடுத்தோம்.
அரசின் வேலைத்திட்டங்கள் தொடர்பில் பலரும் பல்வேறு பொய் பரப்புரைகளைச் செய்கின்றனர். இவர்களின் இந்த பொய் பரப்புரைக்கு மக்கள் எடுபடப்போவதில்லை.
ஏனெனில் மக்கள் மிகவும் சிந்தித்தே செயற்படுகின்றனர். அத்துடன் என்ன விமர்சனங்கள்வந்தாலும் சட்டவிரோத செயற்பாடுகளுக்கு எதிரானநடவடிக்கைகளைமேற்கொண்டே ஆகுவோம்-என்றார். (ற-ரி4,31)

## அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவரின் மனு 19க்கு ஒத்திவைப்பு

கொழும்பு,ஜீன் 9
அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஸ்ஸங்க சேனாதிபதி உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனு எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டது.
அந்த மனு புவனேக அலுவிஹார, விஜித் மலல்கொட மற்றும் நலின் பெரேரா ஆகிய மூன்று நீதிபதிகள் குழு முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.
இதன்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
இரகசியப்பொலிஸாரால்தான் கைது செய்யப்படுவதைதடைசெய்துஉத்தரவிடுமாறு கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.
அந்த மனுவில் உள்ளதாவது:
காலி துறைமுகத்தில் மிதக்கும் ஆயுதக் களஞ்சியசாலையை நடத்திச் சென்ற சம்பவத்தில் தன்னை கைது செய்து விளக்கமறியலில் வைப்பதற்கு இரகசியப் பொலிஸார்முயற்சிக்கின்றனர். இந்த ஆயுதக் களஞ்சியசாலையை நடத்திச் செல்வதற்கு அமைச்சரவையின் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்திருந்தது. தனக்குஎதிராக இரகசியப் பொலிஸார் விசாரணைசெய்துள்ளவிதம்தன்னிச்சையானமற்றும்சட்டவிரோதமானமுறையில் இருப்பதாகவும், இதனூடாக தனது அடிப்படை உரிமைகளும் மீறப்பட்டுள்ளன.
அதனால் தன்னைக் கைது செய்வதற்கு தடை விதித்து உத்தரவிடவும். என்றுள்ளது. (ந.ரி4)

நீதிபதிகளுக்கு விடுதி அமைக்க ஒதுக்கப்பட்ட நிலத்தில்

# அத்துமீறி குடியேறியிருந்த 7 குடும்பங்கள் வெளியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ்ப்பாணம் சிறுவர் நீதிமன்றத்துக்கு அருகில் நீதிபதிகள் விடுதி அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தில்அத்துமீறிக்குடியேறியோரில் 7குடும்பங்களை யாழ்ப்பாணம் நீதிமன்றம் வெளியேற்றியது. யாழ்ப்பாணம் சிறுவர் நீதி மன்றின் அருகே நீதிபதிகள் விடுதி அமைப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்தஇரண்டேமுக்கால்ஏக்கர்நிலப்பரப்பில் 7 குடும்பங்கள் தற்போது சட்டவிரோதமாகக் குடியேறியிருந்தனர்.

இவர்களில் சிலர் 1990ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே இந்தப்பகுதியில்வசித்து வந்தனர்.

வேறு இடங்களில் குடியிருப்பு உள்ளவர்களும் வசித்த அதேநேரம் ஏற்கனவே நிலத்தைஅபகரித்திருந்தவர்களிடம்பணத்துக்குக் கொள்வனவு செய்தவர்களும் வசித்து வந்தனர்.

இதன்அடிப்படையில்அவர்களுக்குஎதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. குறித்த குடும்பங்களை அந்தப் பகுதியில் இருந்து வெளியேறுமாறு 2017ஆம்ஆண்டுமார்ச்மாதம் வரையில்சந்தர்ப்பம்வழங்கப்பட்டிருந்தது. இந்தக்காலத்தில். ஒருசிலர்மட்டுமேவெளியேறியிருந்தனர்.

அங்கேவசித்த25குடும்பங்களுக்குயாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தால் நல்லூர்ப் பகுதியில்வீட்டுவசதிஒழுங்கமைக்கப்பட்டு வழங்கப்பட்டது. இவ்வாறு வழங்கப்பட்ட 25 வீட்டு வசதியில் 13 குடும்பங்களும் மேலும்10குடும்பங்களுமாக23குடும்பங்கள் அங்கிருந்து முழுமையாக வெளியேறியிருந்தனர். இந்த நிலையிலேயே கடந்த புதன்கிழமை வழக்கு இடம்பெற்று இங்கே குடியிருந்த குடும்பங்களை உடன் வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டது.

அதன் பிரகாரம் பொலிஸார், நீதிமன்றப் பதிவாளர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோர் நேரில் சென்று 7 குடும்பங்களை உடனடியாகவே வெளியேற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது. (21,105)

## சாரணிய ஆணையாளர்களுக்கு பிரிட்டனில் 11 நாள்கள் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 9


சாரணியமாவட்டஆணையாளர்களுக்கான தலைமைத்துவம், முகாமைத்துவம்மற்றும் பாசறை செயற்திறன் தொடர்பான உயர்தரப் பயிற்சி பிரிட்டனில் எதிர்வரும் 11ஆம் திகதி தொடக்கம்21ஆம்திகதிவரைநடைபெறவுள்ளது. கில் வெல் பார்க் இங்கிலாந்து எனும் தொனிப் பொருளில் நடைபெறுகின்ற உயர் பயிற்சி செயற்பாட்டில் இலங்கையைச் சேர்ந்த 14 பேர் கலந்து கொள்ளவுள்ளனர். இதில்தமிழ்மொழிமூலமாகவடக்குமாகாண உதவிமாகாண ஆணையாளரும்சாரணிய உதவி பயிற்றுநர் தலைவருமான க. துற்ஜெயந்தன் கலந்து கொள்ளவுள்ளார்.

இவர் 2015ஆம் ஆண்டு ஜப்பானில் நடைபெற்ற உயர் பயிற்சியில் கலந்துகொண்டிருந்தார். (4,422)

வடக்கு மாகாணத்துக்குரிய

# கலாசாரம், பண்பாடு பிறழாது அபிவிருத்தி இடம்பெறவேண்டும்

முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஜூன் 9**

**வடக்கு மாகாணத்துக்குரிய கலாசாரம், பண்பாடு, பழக்க வழக்கங்கள் பிறழ்வு அடையாதவாறு எமது அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். கொழும்பு அரசும் அதன் முகவர்களும் எமது ஒவ்வொரு முன்னெடுப்புக்களையும் மிகக் கவனமாக உற்று நோக்கிய வண்ணம் உள்ளனர் போல் தெரிகிறது.**

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்துக்கான சுற்றுலாத் துறைப்பணியகத்தின்ஆரம்பநிகழ்வுகைதடியிலுள்ள முதலமைச்சர் அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

அதில் அவர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

2013இல் வடக்கு மாகாணசபை தனது நிர்வாகப் பொறுப்பை ஏற்ற நாளில் இருந்து வடக்கின்சுற்றுலாத்துறைமேம்படுத்தப்பட வேண்டும்என்ற அவாவில் உரிய முயற்சிகள் பலவற்றை முன்னெடுத்தபோதும் இதற்குரியநியதிச்சட்டம்தயாரித்தல், உரிய அனுமதியைப்பெற்றுக்கொள்ளல்போன்ற பற்பல தடங்கல்களால் இதுவரை காலமும் சுற்றுலாத்துறைப் பணியகம் எம்மால் அமைக்கப்பட முடியாது போயிற்று.

### முட்டுக்கட்டைகள் இனி நீங்கும்

நீண்டகாலப்போருக்குப்பிந்திய வளர்ச்சிப் பாதையில் சுற்றுலாத்துறை மிக முக்கிய பங்கை வகிக்கக்கூடியது. வடக்கில் பல சுற்றுலாமையங்கள்இயற்கைவளங்களுடன் கூடியதாக அமைந்துள்ளபோதும் அவற்றைச் சீரமைப்புச் செய்வதற்கும் சுற்றுலா மையங்களாக மாற்றி அமைப்பதற்கும் இதுவரை காலமும் இருந்து வந்த முட்டுக்கட்டைகள் இனித் தீர்க்கப்படுவன. கடந்த நான்கு ஆண்டுகளாகச் சுற்றுலாத் துறையின் அபிவிருத்திக்கு முழுமையான பங்களிப்புக்களைஎம்மால்வழங்கமுடியாமல் போன போதும் இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சுற்றுலா மையங்கள் இனங்காணப்பட்டு அவை சீரமைக்கப்பட்டுள்ளன. அவற்றிலும்சிலகுறைபாடுகள் எம்மால்அவதானிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக வன்னேரிக்குளம் பகுதியில் பறவைகள் சரணாலயம் ஒன்று சீரமைப்புச் செய்யப்பட்டுசுற்றுலாப்பயணிகளின்பாவனைக்காகத் தயார் நிலையில் உள்ளபோதும் இந்தப்பகுதிக்குச்செல்லும் முறிகண்டியில்இருந்துவன்னேரிக்குளம்வரையான பாதைகுன்றும்குழிகளுமாகக்காணப்படுவதால் இதன் பயன்பாடு பூச்சிய நிலையிலேயே உள் ளது. சுற்றுலா மையங்கள் சீரமைப்புச்செய்யப்படும்போது இலகுவில் அந்த இடத்தைச்சென்றடையக்கூடிய வழிவகைகளையும் நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். வேறு முக்கிய கட்டமைப்புக்களையும் நாம் அமைக்க வேண்டும்.

### மக்களை மையப்படுத்த வேண்டும்

வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சுற்றுலா அபிவிருத்திப் பணிகள் அனைத்தும் இந்தப் பகுதி மக்களின் நன்மைகளையும்வாழ்வாதாரமுன்னேற்றங்களையும் அடிப்படையாகக் கொண்டவையாக இருக்க வேண்டும்.

வடக்கு மாகாணசபை முன்னெடுக்கின்ற முன்னேற்றகரமான செயற்பாடுகளில் கொழும்பு அரசும் இடைச்செருகல்களை ஏற்படுத்திஎமதுதிட்டங்களைத்தாம்வளைத்துப் போட கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கின்றது.

இவ்வாறான நிலைகளின்போது எமது பாரம்பரியங்களையும் மொழியையும் கலை, கலாசாரத்தையும்கணக்கில்எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். உங்கள் முன்னெடுப்புக்கள் அனைத்தும் பெறுமதிமிக்கதாகவும் தூர நோக்குடையதாகவும் கபட நோக்கம் கொண்ட உள்நுழைவுகளைப் புறந்தள்ளக்கூடிய வகையிலும் அமைந்திருக்க வேண்டும் என்பதை மனதில் இருத்தி நீங்கள் செயற்பட வேண்டும் என்று வினயமாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

### அழுத்தம் தர பலர் வரிசையில்

நீங்கள் உங்கள் சுற்றுலாத்துறைப் பணிகளை முன்னெடுக்கும்போது உங்களுக்கு பலவிதமான அழுத்தங்களையும் இடர்பாடுகளையும் தருவதற்கு வனத்துறை, நில அளவைத்திணைக்களம், கனியவளத் திணைக்களம், கடலோரப்பாதுகாப்புச் சபை, வனவிலங்குப் பாதுகாப்புத் துறை எனப்பலதுறைகள் தயார் நிலையில் இருக்கின்றன. இந்தத் திணைக்களங்கள், அமைப்புக்களின் உள்நுழைவுகள் இன்றி எமது முன்னெடுப்புக்கள் சீரிய பாதையில் கொண்டுசெல்லப்பட வேண்டும்.

சுற்றுலாத்துறை விரிவாக்கத்தின்போது இயற்கை சார்ந்த சுற்றுலா மையங்களை விருத்தி செய்வதுடன் எமது பகுதிகளில் காணப்படக்கூடிய பனை மற்றும் தென்னைகளில் இருந்து பெறக்கூடிய பொருள்கள், கடல் வளங்களில் இருந்து உற்பத்தி செய்யப்படும் உணவு வகைகள் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தலாம். பனை வளங்களில் இருந்து தயாரிக்கப்படும் அழகிய கைவண்ணப்பொருள்கள் மற்றும் வடக்கில் கலை நயத்தை எடுத்தியம்பக் கூடியஓவியங்கள், அலங்காரங்கள்போன்றவையும்விற்பனைக்காகச்சேர்த்துக்கொள்ளப்படலாம். சுற்றுலா மையங்களின் பாதுகாப்புக்கள் தொடர்பிலும் நாம் கூடுதலான கவனங்கள் எடுக்க வேண்டும். சுற்றுலாத் துறைவிரிவாக்கம்செய்யப்படும்அதேதருணத்தில் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்புக்களும் உறுதிப்படுத்தப்படல்வேண்டும்.

### மீன் கொட்டிய செய்தியால்தான் தென்னிலங்கையினர் வருகையா?

வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணக்குடாநாட்டுப்பகுதி மூன்று பக்கம் கடலால் சூழப்பட்டுள்ளதுடன் நிறைந்த கடல் உணவு வளங்களைக் கொண்ட பிரதேசம். இந்த வளங்கள் எமது மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்துக்கே பயன்பட வேண்டும். ஓரிரு வாரங்களுக்கு முன்னர் ஆழியவளைப்பகுதியில் கரைவலைத் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் ஒருவருக்கு 20 ஆயிரம் கிலோவுக்கும் அதிகமான பாரை மீன்கள் கிடைக்கப்பெற்றன.

அதனால் ஒரே இரவில் அந்த மீனவர் கோடீஸ்வரராகமாறிவிட்டார்என்றுபத்திரிகைகளில் தகவல்கள் வெளிவந்தன. அவ்வாறு வந்து ஒரு வாரம் கடக்க முன்னரே அந்தப் பகுதியில் சிங்கள மீனவர்களின் ஆக்கிரமிப்பு இடம்பெற்றது என்று அறிகின்றேன். அவர்களுடன் எமது மீனவர்களும் பொதுமக்களும் அரசியற் தலைவர்களும் வாக்குவாதத்தில் ஈடுபட்டு தகராறு நிலை ஏற்பட்டுள்ளது.

### பலமுனைத் தாக்குதல்

எமதுஒவ்வொருஅசைவுக்கும்பிறர்தரப்பில் இருந்து பல முனைத் தாக்குதல்கள் பொருளாதார ரீதியாகவும், தொழில் முயற்சி வடிவிலும்வந்து கொண்டிருப்பதாக நாம் உணர்கின்றோம்.

எமது சமூக, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் ஆகிய அனைத்தையும் சீரழிக்க சிலர் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கின்றார்கள் என்றே கொள்ள வேண்டியுள்ளது.

இந்த விடயங்கள் பற்றி இந்தச் சபையில் நான்கூறுவதன்நோக்கம்உங்கள்அதிகார வரம்புக்குட்பட்டசெயற்பாடுகளைமுன்னெடுக்கின்ற போது ஏற்படக் கூடிய இடர்களையும்மற்றும்தடைகளையும்நீங்கள்அறிந்து கொள்ள வேண்டும் என்பதாலேயே - என்றார். (4)

# உழவு இயந்திரங்களைக் கொள்வனவு செய்தோரில் 3 மாவட்டங்களின் விவசாயிகள் பணம் செலுத்தவில்லை

பாதிப்பு என்று சக விவசாயிகள் கவலை

யாழ்ப்பாணம், ஜூன் 9

வவுனியா மாவட்டத்தில் கமநல சேவை நிலையங்களில்மானியவிலையில்பொருள்களைப்பெற்றவர்கள்அதற்கானபணத்தைச் செலுத்தாததால்ஏனையவிவசாயிகள்பாதிப்படைகின்றனர் என்று குற்றஞ் சாட்டப்படுகிறது.

போருக்குப்பின்னர்விவசாயஊக்குவிப்பின் கீழ் பல மாவட்டங்களிலும் 50 வீத மானிய அடிப்படையில்இருசக்கரஉழவுஇயந்திரங்கள்வழங்கப்பட்டன. இதில்வவுனியாமாவட்டத்தில்மட்டும்இருகட்டங்களாக180பயனாளிகளுக்கு இரு சக்கர உழவு இயந்திரங்கள் 2012ஆம்ஆண்டில்வழங்கப்பட்டன. அவற்றைப் பெற்றவர்கள் மாதாந்தம் 6 ஆயிரத்து 250 ரூபா வீதம் 2015 ஆம் ஆட்டுவரை மாதாந்தம் செலுத்தி 2015ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்துடன் கடனை முழுமைப்படுத்தியிருக்க வேண்டும். இருப்பினும் 180 விவசாயிகளில் 27 பேர் மட்டுமே குறித்த பணத்தை முழுமையாக செலுத்தி முடித்துள்ள னர். இதனால் அடுத்த கட்ட விநியோகத்துக்கானஏற்பாடுஇடம்பெறும்நிலையில் பணத்தைச்செலுத்தி முடிக்காத மாவட்டங்களுக்கான மரனியம்நிறுத்தப்படுவதாகவிவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

"வடக்கின் 5 மாவட்டங்களுக்கும் குறித்த மானியம் வழங்கப்பட்டது. இரண்டு மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் மட்டுமே அவற்றைமுழுமையாகசெலுத்திமுடித்துள்ளனர். ஏனைய 3 மாவட்டங்களின் விவசாயிகளும்அதைச்செலுத்தாததால்அடுத்தசுற்றுமானியத்தை வழங்க மறுப்புத் தெரிவிக்கப்படுகின்றது.

கடனைச்செலுத்தியஇரண்டுமாவட்டங்களில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் கடனைச் செலுத்தி முடித்துள்ளனர்" என்று மாவட்ட கமநலசேவைத்திணைக்கள அதிகாரிதெரிவித்தார். (4-105)

## முல்லையில் பல மருந்தகங்கள் உரிய முறையில் இயங்கவில்லை

### மாறுவேடத்தில் சென்று அவதானித்தேன் என்கிறார் வடக்கு சுகாதார அமைச்சர்

முல்லைத்தீவு, ஜூன் 8

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 7க்கும் மேற்பட்ட மருந்தகங்களில் சோதனை நடத்தியபோது எந்த ஒரு மருந்தகமும் சரியான அனுமதிப்பத்திரத்தைக் கொண்டிருக்கவில்லை. சரியானதொழில் சார்ந்த மருந்தாளர்கள் அங்கு இருக்கவில்லை. ஆனால் இயங்கிக்கொண்டிருக்கின்றன. மருத்துவத்துறையுடன் சம்பந்தப்படாதவர்கள் மருந்தகங்களில் காணப்படுகின்றார்கள். ஒரு சில மருந்தகங்கள் மருந்துச் சிட்டை இல்லாமலே தன்னுடன் வந்த ஊழியர்களுக்குமருந்தை விற்றிருக்கின்றார்கள். இவற்றுக்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறுவடக்குமாகாண சுகாதாரஅமைச்சர்மருத்துவர்ஜீ.குணசீலன்தெரிவித்தார். முல்லைத்தீவுமாவட்ட மருத்துவமனை, மாவட்டத்தில் இயங்கும் மருந்தகங்களின் நிலைமை தொடர்பில் அவர் மாறுவேடத்தில்நேற்றுச்சென்று அவதானித்ததாகவும் அதன்போது இவை கண்டறியப்பட்டன என்றும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவுபொது மருத்துவமனையின்வெளிநோயாளர் பிரிவு மாதாந்த சிகிச்சைபகுதி உள்ளிட்ட பகுதிகளில் நோயாளர்கள் என்ன பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்? சுகாதாரத் துறை ஊழியர்களின் சேவைஎவ்வாறுஇருக்கின்றது? போன்ற விடயங்களைக்கவனிக்கவேண்டும் என்பதற்காக சாதாரண நோயாளி போன்று உத்தியோகபூர்வமற்ற விதத்தில் சென்றிருந்தேன். என்னை ஒரு அமைச்சராகக் காட்டிக்கொள்ளாமல் அங்கிருந்து மக்களுக்கான சேவைஎவ்வாறுவழங்கப்படுகின்றது என்பதைநான் அவதானித்தேன். இவ்வாறுசென்றதுஅங்குபணி செய்கின்ற ஊழியர்களை அவமானப்படுத்துவதற்காகவோ அல்லது தவறுகளைக் கண்டுபிடிப்பதற்காகவோமட்டுமன்றிமாவட்ட மருத்துவமனையில்நோயாளர்கள் எவ்வாறு சேவைகளைப் பெற்றுக்கொள்கின்றார்கள்? சேவைகள் சரியாக வழங்கப்படுகின்றனவா? என்பன பற்றி அறியவே. உத்தியோகபூர்வ பயணத்தின்போது பெரும்பாலான குறைகள் அங்கு பார்க்கப்படுவதில்லை.

அங்கு பணிகளை அவதானித்துத் தேவையான அறிவுறுத்தல்களைப் பின்னர் பணியாளர்களுக்கு வழங்கினேன்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருக்கின்ற எந்த மருந்தகங்களும்சரியானமுறையிலான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாமலும் மருத்துவரின் ஆலோசனைசீட்டுஅல்லதுமருந்து சீட்டு இல்லாமல் பொதுமக்களுக்கு மருந்து வநியோகிப்பது போன்ற முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றையும்பரிசோதித்தபோதே மருந்தகங்களின் குறைபாடுகள் தெரிய வந்தன.

நோய்தாக்குகின்றமருந்துகள் சம்பந்தமாக அதன் பக்கவிளைவுகள் அறிந்து சரியாக வழங்கவேண்டிய மருந்துவகைகள்பலசரக்கு கடையில்விற்பதுபோன்று விற்கின்றனர். ஒரு மதுபான சாலைக்கு அனுமதி பெறவேண்டும் என்றால் அரசதலைவர் வரைக்கும் செல்லவேண்டிய இறுக்கமான கட்டுப்பாடுகள் அரச திணைக்கழ கங்க ளில் இருக்கும்போதுஉயிர்காக்கும் மருந்துகள் விற்கப்படுகின்ற மருந்தகங்கள் சரியான அனுமதியில்லாமல் ஆரம்பித்துமருந்தகம்நடத்துவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது. - என்றார். (4,ரி3)

உடை உள்ளிட்ட பலவற்றையும்

# வெளிநாட்டிலிருந்து வருவோர் வடக்கிலேயே வாங்கவேண்டும்

### புலம்பெயர்வாளர்களிடம் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஜூன் 9**

**ஈழத்துக்குத் திரும்பி வந்து செல்லும் புலம்பெயர் மக்கள் அன்பளிப்புக்கான உடைகளை, பொருள்களைகொழும்பில்கொள்வனவுசெய்யாது வடக்கிலேயேவந்துகொள்வனவுசெய்யுங்கள். இது உள்ளூர்உற்பத்தியாளர்களுக்குநீங்கள்செய்யும்பெரும்உதவியாக அமையும்.**

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.ஜெயசேகரம் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாண வணிகர் கழகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றநிகழ்வில்அவர் மேலும்தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பெருந்தொகையானபுலம்பெயர்ந்தமக்கள் சித்திரை மாதம் முதல் புரட்டாதி மாதம்வரை தங்கள் விடுமுறைக்காகவும், கோயில் திருவிழாக்களுக்காகவும், வேறு பல வைபவங்களுக்காகவும் வடக்கு மாகாணத்துக்கு - தமது சொந்தஇடங்களுக்குவந்து செல்கின்றனர்.

இந்த மக்கள் இலங்கை விமானநிலையத்திலிருந்து தங்கள் இடங்களுக்கு வருவதற்கானவாகனவசதிகள், தங்குவதற்கான விடுதி வசதிகள் (கோட்டல்), உள்ளூர் போக்குவரத்துக்கான வாகனங்கள், தங்களுக்குத் தேவையானஉணவுப்பொருள்கள் உட்பட உடைகள், ஆபரணங்கள், உள்ளூர் உற்பத்திகள் போன்றவைகளை எமது பகுதிகளில் எமதுவர்த்தகர்களிடம்பெற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம். இதன் மூலமாக புலம்பெயர்ந்த எமது உறவுகள்பயன்பெறுவதுடன்எமதுமக்களுக்குத் தொழில்வாய்ப்பு அளிப்பதுடன், அவர்களை பொருளாதாரமுறையில்மேம்படுத்துவதற்கும்போரால்பாதிக்கப்பட்டு சின்னாபின்னமாகிய எமது பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கும் இது ஒரு வாய்ப்பாக அமையும்.

எனவே புலம்பெயர்ந்த எமது உறவுகள் இந்த இடத்தில் கவனமெடுத்து செயற்படுவீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம்-என்றார். (4,114)

வவுனியா, சாவகச்சேரியில்

## அதிசிறப்பு விபத்து சிகிச்சைப் பிரிவு

யாழ்ப்பாணம், ஜூன் 9

வவுனியா பொது மருத்துவமனை ,சாவகச்கேசரி ஆதார மருத்துவமனைஆகியவற்றில்அதிசிறப்புவிபத்துச்சிகிச்சைப் பிரிவு அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றுவடக்குமாகாண சுகாதார அமைச்சுதெரிவித்துள்ளது.

இது பற்றி அந்த அமைச்சு மேலும் தெரிவித்ததாவது;

விபத்துக்கள் நடைபெறும் போது சிகிச்சைகள் உடனடியாக வழங்கப்பட்டால்முடிந்தளவு உயிர்ச்சேதத்தைத் தவிர்த்துக் கொள்ள முடியும். மருத்துவமனைகளில் இதற்குரிய வளங்கள்முழுமைப் படுத்தப்பட்டால் விபத்துக்கான சிகிச்சையை உடனடியாக வழங்க முடியும். விபத்து ஏற்பட்டு குறித்த நபர் ஒரு மருத்துவ மனையில் இருந்து இன்னொரு மருத்துவமனைக்கு மாற்றப்படும் போது உயிர்ச் சேதம் ஏற்படுவது அதிகம்.

ஆகவே இதனைக்கருத்தில் கொண்டு மாகாணக்குறித்தொதுக்கப்பட்ட நிதியில் மருத்துவமனைகளில் உள்ள விபத்துச் சிகிச்சைப் பிரிவுகள் படிப்படியாகத் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றது. நடப்பு வருடத்தில் வவுனியா மற்றும் சாவகச்சேரி மருத்துவமனைகளில் அதி சிறப்பு விபத்துச் சிகிச்சைப் பிரிவு ஆரம்பிப்பதற்கான வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நிதி கிடைக்கும் காலத்துக்கு ஏற்ப வேலைகள் படிப்படியாக முன்னெடுக்கப்படும்என்று தெரிவிக்கப்பட்டது. (21,7)

கால்நடைகளைக் கடத்தியவர்

## பொலிஸாரைக் கண்டதும் படகுடன் திரும்பி ஓட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ்ப்பாணம்அனலைதீவிலிருந்துவவுனியாவுக்குஇறைச்சிக்காககடத்தப்படவிருந்தபசுமாடுகள்அங்குள்ளஇளைஞர்களின் முயற்சியால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா வீரபுரத்தைச் சேர்ந்த ஒருவர், 15க்கும் மேற்பட்ட பசுமாடுகளையும் 5க்கும் மேற்பட்ட காளை மாடுகளையும் வாங்கி உரிய அனுமதிப்பத்திரம் இல்லாமல் நேற்றுமுன்தினம்காலை அனலைதீவு துறைமுகத்திலிருந்து படகு மூலமாக ஊர்காவற்றுறைகண்ணகைஅம்மன்துறைமுகத்தை நோக்கிக்கொண்டு செல்லவிருந்தார்.

குறித்தமாடுகளைப்பொதுமக்களிடம்வாங்கியவர் அனலைதீவைப் பூர்வீகமாக கொண்டவர் என்பதோடு வவுனியா வீரபுரத்தில் வசித்துவருகிறார். தான் மாட்டுப் பண்ணை ஒன்று வைத்திருப்பதாகவும்அதற்காகவேமாடுகளைவாங்கிச்செல்வதாகவும் குறிப்பிட்டார்.

அவர் மாடுகளுடன் படகில் பயணிக்கும் விடயம் பொலிஸாருக்குக் கூறப்பட்டதும் அவரைக் கைது செய்யப் பொலிஸார் துறைமுகத்தில் தயாராக நின்றுள்ளனர். அதனைக் கண்ட குறித்த நபர் படகை மீண்டும் அனலைதீவுக்குக் கொண்டு சென்றுகால்நடைகளைஇறக்கிவிட்டுத்தப்பிச்சென்றுவிட்டார் என்றும் அதனால் பொலிஸார் எவரையும் கைது செய்யவில்லை என்றும்தெரிவிக்கப்பட்டது. (4,8)

# அரச ஊழியர்களை அச்சுறுத்தும் இராணுவம்

### முதலமைச்சர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 9

வடமராட்சி கிழக்குக் கடற்கரைப் பகுதியில்பெரும்பான்மையினத்தவரைக் குடியேற்றி அவர்களுக்கு உதவியாக இராணுவமும் செயற்பட்டு, எங்கள் அரச ஊழியர்களை நேரடியாகவும்மறைமுகமாகவும் அச்சுறுத்துகின்றனர். இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வடக்குமாகாண அலுவலகதிறப்பு விழா யாழ்ப்பாணம் சுண்டுக்குளி தேசிய வீடமைப்பு அபிவிருத்திச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில்உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

**மக்களின் ஆதரவைப் பெற இராணுவம் கடும் பிரயத்தனம்**

வடக்கு மாகாணத்தில் சுமார் ஒன்றரை இலட்சம் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர். அவர்கள் வடக்கு மாகாண மக்களின் வாழ்வாதாரத்துக்குக் குந்தகம் விளைவிக்கின்றனர்.

எமது மக்களின் விவசாய நிலங்கள், தனிப்பட்ட மற்றும் அரச கட்டடங்கள், தோட்டம் துரவுகள், பண்ணைகள், உணவகங்கள்மற்றும் சிற்றூண்டி என்று சகல வளங்களையும் ஆக்கிரமித்துக்கொண்டு, போர்முடிந்து 9 வருடங்கள்கடந்துவிட்ட நிலையிலும்கூட இந்த மண்ணைவிட்டுவெளியேறாமல்இருக்கின்றனர். பொதுமக்களுடன்அவர்களின் இயல்பு வாழ்க்கையிலும் கலந்து கொள்வதனூடாகப் பொது மக்களின் ஆதரவையும் பெற முயற்சிக்கின்றனர்.

இராணுவத் தளபதி சேனநாயக்க சம்பந்தப்பட்டுள்ளார் என்ற விஷயத்தை அறிந்திருக்காத காரணத்தால்தான் முதல்நாள் நடந்த மாநகர மர நடுகை விழாவில் பங்குபற்றினேன்.

**இராணுவத்தினர் மீது கடுங்கோபத்தில் மக்கள்**

இராணுவத்தினரிடமிருக்கும் பயம் 9 வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும்மக்கள்மனதைவிட்டு வெளியேறவில்லை. அவர்களின் வாழ்வாதாரங்களை, தம்வசம் வைத்துள்ள இராணுவம் மீது மக்கள் கடும் கோபத்துடனேயுள்ளனர். பொதுமக்களின்நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள மாட்டோமென்று இராணுவத்தினர் கூறினாலும் அதனை அவர்கள் கடைப்பிடிப்பதில்லை. இராணுவம்இந்தபகுதிகளில் தொடர்ந்தும் தங்கியிருப்பது பயங்கரவாத நடவடிக்கை எனப் பெயரிடப்படலாம்.


**சமாதானத்தைச் சீர்குலைக்கும்**

போர் முடிந்த பின்னர் பொதுமக்களின் வாழ்க்கை சாதாரண நிலைமைக்குத் திரும்புமென்று எதிர்பார்க்கப்பட்டபோதிலும், இராணுவத்தினரின் தலையீடுகள் மக்களின் வாழ்க்கையில் தொடர்ந்து கொண்டிருப்பதால், சிலநேரம்அது சமாதானத்தை சீர் குலைப்பதாக அமையும். இந்தநிலையில், ஏற்றுமதிபற்றிஎப்படிச்சிந்திக்கமுடியும்? வேறு நாடுகளில் ஏற்றுமதி தொடர்பில் நடைமுறையிலிருக்கும் முறைமைகள் வேறுவிதமானவை. ஆனால் இலங்கையில் அந்த விஷயத்தில் அரசு முந்திரிக்கொட்டைபோலவேசெயல்படுகின்றது. அரசியல்தீர்வொன்றைஎட்டாமல், வெளிநாட்டுச் சந்தையில் உள்ளூர்உற்பத்திகளுக்குஇடம்பிடிப்பது என்பது சாத்தியமா?

**ஆவணங்கள் முடக்கம்**

தனியார் நிறுவனத்துடன் இணைந்து மரக்கறி, பழவகை இரண்டும்ஏற்றுமதிசெய்வதற்காக வன்னியில் சகல விதமான எற்பாடுகளும் பூர்த்தியடைந்து ஒரு வாரம் பூர்த்தியான நிலையிலும் இதனை முதலீடு செய்பவர் சிறுபான்மை இனத்தவர் என்ற காரணத்தால் அந்த ஆவணங்கள் முடக்கப்பட்டுள்ளன-என்றார். (4)

# ட்ரம்ப் - அபே திடீர் சந்திப்பு!



வொஷிங்டன், ஜூன் 9
அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பை இன்று அல்லது நாளை ஜப்பான் அதிபர் சின்சோ அபே சந்திக்கவுள்ளார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் - வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் இடையிலான சந்திப்பு சிங்கப்பூரில் எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தச் சந்திப்புத் தொடர்பில் கொரியத் தீபகற்பத்தில் அமைவு பெற்றுள்ள நாடுகளான தென்கொரியா - ஜப்பான் ஆகியன அதீத அக்கறையுடன் செயற்படுகின்றன. இந்தச் சந்திப்பு நடைபெறுவதற்கு மூலகாரணமாக இருந்த தென்கொரியா தொடர்ந்து தனது வலுவான நகர்வுகளை வெளிப்படுத்தி வருகிறது. ஜப்பானும் தனது சுய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதமாகத் தற்போது செயற்பட்டு வருகிறது.

வடகொரியா தனது எதிரி நாடுகளில் ஒன்றாக ஜப்பானை வெளிப்படையாக அறிவித்திருந்தது. கடந்த வருடம் ஜப்பானின் வான் பரப்புக்கு மேலாக தனது ஏவுகணைச் சோதனைகளையும் நடத்தியது. அத்துடன் ஜப்பான் தொடர்பான தகவல்களை அறிவதற்காக 1980களில் சுமார் 20 ஜப்பானியர்களை வடகொரியா கடத்தி ஜப்பான் தொடர்பான பெரும்பாலான புரிதல்களைப் பெற்றுள்ளது. இதனால் இராணுவ பலத்தில் அமெரிக்காவையே நம்பியிருக்கும் ஜப்பான், வடகொரியாவுடன் அமெரிக்கா நெருக்கமானால் அது தனக்குப் பெரும் ஆபத்து என்று கருதுகிறது. இந்தப் பின்னணியிலேயே தமது சுய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் ஜப்பானின் அதிபர் அபே ட்ரம்ப்பைச் சந்திக்கவுள்ளார் என்கின்றனர் அவதானிகள். (ம)



## கிம் – ஜி ஜின் பிங் சந்திக்க வாய்ப்பு

வொஷிங்டன், ஜூன் 9
அமெரிக்க அதிபர் ட்ரம்பைச் சந்திக்க முன்னர் சீன அதிபர் ஜி ஜின் பிங்கை வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் சந்திக்க வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது.

ட்ரம்பை கிம் ஜோங் உன் சந்திப்பதன் பின்னணியில் சீனாவும் உள்ளது. வடகொரியாவின் பெரும் பலமும் தற்போது சீனாவேதான். அமெரிக்க அதிபரைச் சந்திப்பது தொடர்பான அறிவிப்பை சீன அதிபருடன் கலந்தாலோசித்த பின்னரேயே கிம் ஜோங் உன் விடுத்திருந்தார். கடந்த சில வாரங்களில் மட்டும் இரண்டு தடவைகள் நேரிலும் பல தடவைகள் தொலைபேசி வாயிலாகவும் ஜின் பிங் - கிம் ஜோங் உன் இடையிலான கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இந்தப் பின்னணியில் எதிர்வரும் 12ஆம் திகதி ட்ரம்ப்பைச் சந்திக்க முன்னர் சீன அதிபரை கிம் ஜோங் உன் சந்திக்க வாய்ப்புள்ளது என்று பன்னாட்டு உடகங்கள் செய்தி வெளியிட்டன.

கொரியத் தீபகற்பத்தில் தென்கொரியாவிலும், ஜப்பானிலும் அமெரிக்கா தனது இராணுவ வல்லமையைப் பலப்படுத்தியுள்ளது. இது சீனாவுக்குப் பேராபத்து என்றே கருதப்படுகிறது. இதனால் குறித்த இரண்டு நாடுகளில் இருந்தும் இராணுவக் குறைப்பை மேற்கொள்ள அமெரிக்கா முன்வர வேண்டும்என்றுவடகொரியாவை வைத்துசீனாவலியுறுத்தும்என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## கிம்முடன் பேச்சு சுமூகமாக நடந்தால் அவரை அமெரிக்காவுக்கு அழைப்பேன்

*அதிபர் ட்ரம்ப் வெளிப்படை*



வொஷிங்டன், ஜூன் 9
வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னுடனான சந்திப்பு சுமூகமாக நடைபெற்றால் அவரை அமெரிக்காவுக்கு அழைப்பேன் என்று தெரிவித்தார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.

வொஷிங்டனின் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னுடன் சிங்கப்பூரில் நடக்கவுள்ள சந்திப்பு வடகொரியாவிற்கு புதிய எதிர்காலத்தின் தொடக்கத்தைப் பிரதிபலிக்கும். உண்மையைச் சொல்லப் போனால் உலகுக்கு பிரகாசமான புதிய எதிர்காலம். இந்த சந்திப்பு சுமூகமாக முடிந்தால் அடுத்த 5 நாள்களுக்குள் கிம் ஜோங் உன்னை அமெரிக்காவுக்கு வருமாறு அழைப்பு விடுப்பேன்" என்று ட்ரம்ப் மேலும் குறிப்பிட்டார். (ம)



ஜோர்டானில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட வரி அதிகரிப்புச் சட்டத்தைக் கண்டித்து அங்கு மிகப்பெரும் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் இந்த ஒளிப்படத்தை வெளியிட்டது. (ம)

## தலிபான் அமைப்பை போர் நிறுத்தத்துக்கு அழைத்தார் அஸ்ரப்

காபூல், ஜூன் 9
ரமழான் நோன்பை முன்னிட்டு தற்காலிக போர் நிறுத்தத்துக்கு வருமாறு தலிபான் அமைப்புக்கு அழைப்பு விடுத்தார் ஆப்கானிஸ்தான் அதிபர் அஸ்ரப் கானி.

ரமழான் கொண்டாடப்படும் தினத்துக்கு முன்னதாக 5 நாள்கள் தலிபான்களுக்கு எதிராக நடைபெற்றுவரும் உள்நாட்டு போர் நிறுத்தப்படுகிறது. இந்தப் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க தலிபான்களை அழைக்கிறேன். மேலும், வன்முறை மற்றும் போரினால் மக்களின் மனதை வெல்ல முடியாது. மாறாக பயங்கரவாத செயல்களில் ஈடுபடுவது மக்களிடம் இருந்து தலிபான்களை இன்னும் அந்நியப்படுத்தவே செய்யும் என்பதை தலிபான் அமைப்பினர் புரிந்துகொள்ள வேண்டும். அதற்கு, இந்த தற்காலிக போர் நிறுத்தம் அவர்களுக்கு சிறந்த வாய்ப்பாகும் என்ற கானி குறிப்பிட்டார்.

ஆனால், இந்தப் போர் நிறுத்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டதா? இல்லையா? என்பது பற்றி தலிபான் ஆயுததாரிகளிடம் இருந்து எந்தத் தகவலும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## பியுகோ வெடிப்பால் உயிரிழப்பு 110 ஆனது



கவுதமாலா நாட்டில் உள்ள உலகின் மிகவும் ஆபத்தான எரிமலைகளில் ஒன்றாகக் கருதப்படும் பியுகோ எரிமலை தனது உறக்க நிலையைக் கலைத்து தற்போது வெடித்து வருகிறது. இதுவரை 110 பேர் இந்த எரிமலை வெடிப்பால் உயிரிழந்தனர்.

எரிமலைவெடிக்கப்போவதை கவுதமாலா அரசு சரிவரக் கண்காணிக்கத் தவறியதால் அந்த நாட்டின் தேசிய பேரிடர் துறை அமைச்சரைப் பதவி விலக வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன. அவருக்கு எதிராக விசாரணைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவை குறிப்பிட்டன.

பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் பியுகோவின் தாண்டவத்தை ஒளிப்படக் கோர்வையாக வெளியிட்டுள்ளது. எரிமலைச் சீற்றத்தின் அபாயத் தன்மையை துல்லியமாக வெளிப்படுத்தும் வகையில் அந்தப் படங்கள் அமைந்துள்ளன. (ம)

பழைமை வாய்ந்த ஏழு தலைமுறைகளாக செய்து வரும்
ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



01. ஆண்/பெண் வசியம்
02. பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்யமுடியும்.
03. வியாபார முன்னேற்றம்.
04. வீட்டில் ஒற்றுமை உண்டாக
05. போலியானவர்களிடம் ஏமாந்து விட்டீர்களா ?

ரகசியம் பேணப்படும்

ஒருமுறை எம்மை வந்து சந்தித்துப் பாருங்கள் !!

Note: (உங்களால் நேரில் வரமுடியாவிட்டால் பதிவு தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றொங்கசாமி காளியம்மா
மாத்தளை - கண்டி வீதி, அம்பத்தன்ன.
077 327 2302/ 076 466 4153

## 8ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 10 . 10 . 1938 — இறப்பு 08 . 06 . 2010

### சுந்தரம் விநாயகமூர்த்தி

(ஓய்வு பெற்ற ஆசிரியர் - யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

திதி: அபரபக்க ஏகாதசி

கல்லும் உடையாமல் சிலையும் சிதறாமல்
எங்களை செதுக்கிய சிற்பி அல்லவா நீங்கள்

கலட்டிப் பிள்ளையாரின் துணை இருந்தும்
பல காலம் எம்மோடு வாழாது
கருணை உள்ளம் கொண்ட நீர்
கற்பக விநாயகனைச் சென்றடைந்தீர்

மாசற்ற மனையாளின் துணை வேண்டுமென்று
மூவிரண்டு வருடத்தால்
உம் அருகில் அழைத்தீரோ

குத்து விளக்காக விளங்கிய உங்களை குடும்பத்தவர் நாம்
பிரிந்து தவிக்கின்றோம்.

விநாயகமூர்த்தி வாத்தியார் வீதி,
மீசாலை வடக்கு, மீசாலை.

குடும்பத்தினர்.

(CS 17309) (14.17)

### வீடு விற்பனைக்கு

வட்டு கிழக்கு சித்தன்கேணியில் வட்டு இந்துக் கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள வீடு 3 பரப்பு 3 குளி விற்பனைக்குண்டு.

077 548 3478

(CS/16897) (11)

### PERSONAL CLASS

தரம் 01 தொடக்கம் 5வரையான வகுப்புகளுக்கு சகல பாடங்களும் தங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு: 077 674 8371
(பாடசாலை ஆசிரியர்)

(CS 17316) (14.17)

### இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர் இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

U.S.A. பாம்
குளப்பிட்டி வீதி. ஆனைக்கோட்டை.
077 868 9500

(CS 17280)(15/17)

### வேலையாள் தேவை

ஆண், பெண் இருபாலாரிடம் இருந்து வேலையாள்கள் தேவை.
நேரில் வரவும்

லலிதா ஜுவல்லறி
75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 222 2863

### வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை.

- Technical Officer (With 2yrs experience)
- Technical Assistant (With 1yr experience)
- Technical Trainee

தொடர்புகளுக்கு: 075 918 3940
shaganaconstruction@hotmail.com
8.30 am - 5.00 pm தொடர்பு கொள்ளவும்.

### தேவை

1. வவுனியாவில் திருமணசேவை நிலையம் நடத்துவதற்கு சிறிய கடை அல்லது வீட்டில் ஓர் அறை அடிப்படை வசதிகளுடன் தேவை.
பணம் பேசித்தீர்மானிக்கப்படும்.
2. எல்லா மதம், இனம், வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் செய்து கொடுக்கப்படும்.

நல்லூர்க் கந்தன் திருமணசேவை
இல.303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
077 973 3183 / 021 221 6071

### பெண் வேலையாள்கள் தேவை

Flowers Shop ஒன்றிற்கு பெண் பிள்ளைகள் தேவை. வயது எல்லை 35 இற்கு உட்பட்டவர்கள்.

077 400 5023

### யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவுச் சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்திச் சங்கம்

எமது சங்கத்தின் 57 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் 10.06.2018 ஞாயிற்றுக் கிழமை போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சி கல்லூரி மண்டபத்தில் காலை 9.30 மணியளவில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| செ.பேரின்பநாதன் | தி.பஞ்சலிங்கநாதன் | சி.பாக்கியலிங்கம் |

(CS 17318) (14.17)

### அறிவித்தல்

கமக்கார அமைப்புக்களால் பிடிக்கப்பட்டு உடையார் கட்டு கமநலசேவை நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட R.T குறியுடைய செங்காரி நிற பசு, 7109 1197 0208 காதுதோடு குறியுடைய சிவப்பு நிற பசு மற்றும் பு.க குறியுள்ள மாவெள்ளை நிற பசு என்பவற்றின் உரிமையாளர்கள் 07 நாள்களுக்குள் தகுந்த ஆதாரங்களுடன் பிடிகூலி, கட்டாக் காலியாக விடப்படல் பணம் மற்றும் பராமரிப்பு பணம் போன்றவற்றை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்

தொடர்புகளுக்கு: 021 206 1907

நிறைவேற்றுசெயலாளர்,
கமநலசேவை குழு, உடையார்கட்டு.

(cs.14559) (13.17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
### ஐயாத்துரை சண்முகராசா
(சண்கோ போட்டோ)



பிறப்பு 15.09.1951 — இறப்பு 21.05.2017

திதி: தசமி 09.06.2018

அன்பான அப்பாவே ! பாசத்தின் திருவுருவே
ஆண்டு ஒன்று ஓடி மறைந்திட்டாலும்
உம்பிரிவின் துயரமது ஆறாது ஒருபோதும்
பாசமாய் வளர்தெம்மைத் தாங்கி நின்றீர்
இனி எப்போ காண்போமென ஏங்குகின்றோம்
உங்களது ஆத்மா சாந்தி பெற அருள்வேண்டி
என்றென்றும் அரன்பாதம் துதிக்கின்றோம்

டச்சுறோட்,
உடுவில்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(CS 17294) (14.17)

## மரணஅறிவித்தல்

### நாகலிங்கம் சுப்ரமணியம்



மண்ணில் : 25.09.1941
விண்ணில் : 04.06.2018

17/2, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் 43/49, கொழும்பு 13 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சுப்ரமணியம் 04.06.2018 திங்கட் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மு.நாகலிங்கம் - நாகம்மா தம்பதிகளின் மூத்த புதல்வரும் காலஞ்சென்றவர்களான அந்தோனி ரெபஸ்தி பூரண மரியாள் தம்பதிகளின் மருமகனும் சிசிலியாவின் அன்புக் கணவரும் அன்டனி பயஸ், அக்ருயீனா மில்றட், அனோபெலா, பயஸ், ரமேஷ், தர்ஷினி, தினேஷ், மரிய கிறிஸ்பின் ஆகியோரின் தந்தையும் மகேஸ்வரி, வசந்தா, காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் செல்வராஜா, வேலாயுதம், ராஜகுலேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மோனிகா, தவஞானராஜா, புவிராசா, சின்னராசா, தனு, இரதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 17/2, மத்தியூஸ் வீதி இல்லத்திலிருந்து இன்று (09.06.2018) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுத்த பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

17/2, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(CS 17312) (14.17)

தகவல்:
குடும்பத்தினர்.

077 823 6318/ 077 724 0989

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## 2018 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

01. கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி :- 18.06.2018 – நண்பகல் 12.00 மணி வரை
02. கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 25.06.2018 மு.ப 10.00 மணி வரை.
03. கேள்வி திறக்கப்படும் திகதி :- 25.06.2018 மு.ப 11.00 மணி
04. குத்தகைக் காலம் :- 01.07.2018 - 31.12.2018
05. கேள்வித் தொகையின் 2/3 பகுதியை செலுத்தி ஒப்பந்தம் செய்ய வேண்டிய இறுதித்திகதி :- 29.06.2018

### 2018 ஆம் ஆண்டு கடைகளுக்கான குத்தகை அட்டவணை


| இல | குத்தகை விபரம் (01.07.2018 – 31.12.2018) | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (இதர வரிகள் தவிர) | கேள்விவைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (இதர வரிகள் தவிர) (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 01 | கருவாட்டுக் கடை - இல-01 | 37125.00 | 371.25 | 1000.00 |
| 02 | ஆட்டிறைச்சி கடை - இல-01 | 265000.00 | 2650.00 | 1000.00 |
| 03. | கோழி இறைச்சிக்கடை - இல-02 | 671000.00 | 6710.00 | 1000.00 |

குறிப்பு:- இந்நகராட்சிமன்றத்தின் இறைச்சி, கருவாட்டுக் கடைகளிலிருந்து 1Km சுற்று வட்டாரத்திற்குள் தனியார் எவரும் இறைச்சி மற்றும் கருவாடு விற்பனை நிலையம் அமைக்க அனுமதிக்கப் படமாட்டாது. கறுப்புப் பட்டியலில் உள்ளவர்கள் கேள்வி கோரலில் பங்குபற்ற முடியாது. மேலதிக தகவல்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.
09.06.2018

திருமதி.இ.சிவமங்கை,
தவிசாளர்,
நகராட்சி மன்றம், சாவகச்சேரி.

(in.6982) (13.17)



# வரணி – சிட்டிவேரம் கண்ண
# தேர்த்திருவிழா சிறப்பி

## ஆலய வரலாறு

ஈழத்திருநாட்டின்சிரசுஎனவிளங்கும்யாழ்ப்பாணத்தில்நீண்டுயர்ந்தபனை,தென்னை,நெல்வயல்கள்,கனிகள் தோட்டங்கள் என வளம் பல கொண்ட தென்மராட்சிப் பிரதேசத்தில் கொடிகாமத்திலிருந்து பருத்தித்துறை செல்லும் பிரதான வீதியில் ஏறத்தாள 05 கிலோ மீற்றர் தூரத்தில் வரணி எனும் பழமை பேணும் பழம்பெரும் கிராமத்தில் சோலைகள், வாவிகள் சூழ்ந்து காணப்படும் இடத்தில் வீதியின் மேற்குப் புறமாக இந்தச் சுட்டிபுரம் ஆலயம் அமைந்துள்ளது. முற்காலத்தில் இப்பகுதியில் சித்தர்கள் பலர் வாழ்ந்து வேதித்த இடமாதலால் இந்த இடம் சிட்டிவேரம் எனப் பெயர்பெற்றது. சிட்டி+வேரம் என்பதே காலக் கிரமத்தில் மருவி சுட்டிபுரம் என வந்ததென அறியப்படுகின்றது. இந்த ஆலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம், தலவிருட்சம் என்பன ஒருங்கே அமையப்பெற்ற சிறப்பைத் தருகின்றது. மூர்த்தி. சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் தலம் : வரணி சிட்டிவேரம் (சுட்டிபுரம்) தீர்த்தம்: தும்புருவில் தல விருட்சம்: பாலை முன்னொரு காலத்தில் தும்புரு எனும் முனிவர் இத்தீர்த்தத்தில் நீராடி அம்பாளை பூசித்ததாகவும் அதனாலேயே இப்பெயர் ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது. மேலும் பல சித்தர்களும் யோகிகளும் இத் தீர்த்தத்தில் நீராடி அம்பாளை வழிபட்டதாகக் கூறப்படுகின்றது. இத்தீர்த்தத்தில் வெண்தாமரை, செந்தாமரை நீலோற்பலம், செங்கழுநீர் போன்றவற்றையும் பல மூலிகை அம்சங்களும் உள்ளன. ஈழத்திலே கண்ணகி வழிபாட்டுக்கு தனித்துவமான இடம் உண்டு. இவ்வழி பாடு தென்னிந்தியாவில் இருந்தே இலங்கைக்கு வந்ததென வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. கண்ணகி பாண்டிய மன்னனிடம் நீதி கேட்டு சிலம்பை உடைத்து உண்மையை நிலைநாட்டி தாம் கொண்ட சினத்தால் மதுரையை எரித்து, சினம் தணிந்து, கடல் கடந்து இலங்கைக்கு வந்ததாகவும், இங்கு 10 இடங்களில் கோயில் கொண்டதாகவும் அவ்வாறாக கோயில் கொண்ட ஐந்தாவது இடமே சுட்டிபுரம் எனவும் கூறப்படுகின்றது. இந்த ஆலயத்தில் புராதன காலம் தொடக்கம் கோவலன் கண்ணகி கதைபடிக்கப்பட்டு வருகின்றது. இதன் காப்புச் செய்யுள் கேட்கும்போது வடமராட்சி கிழக்கு குடாரப்பு எனும் கிராமத்தைச் சேர்ந்த கந்தர் வெற்றிவேல் என்பவரால் எழுதப்பட்ட ஏடாக கொள்ளப்படுகிறது. இன்னும் பல சிறப்புக்களும் அற்புதங்களும் வாய்ந்த இவ்வாலயத்தில் கண்ணகித் தாயார் வீற்றிருந்து அருளாட்சி செய்கின்றார். நாமும் கண்ணகித் தாயை வழிபாடு செய்து இஷ்டசித்திகளைப் பெற்று உய்திபெறுவோமாக.

**ஆலய பரிபாலன சபை**

## ஆசியுரை

வரலாற்றுச் சிறப்பு மிக்க வரணி அருள்மிகு சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் தேவஸ்தான தேர் சிச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். ஈழத்தில் கண்ணகி வழிபாட்டில் தலமாக சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலயம் தொன்று தொட்டு விளங்குகின்றது. திருவி வளர்ச்சியும் ஒருங்கே அமைந்த பெருமைக்குரியது. இவ்வாலயத்தில் பன்னிரு நாள்கள் அ விழாக்கள் நடைபெற்று பதின்மூன்றாவது நாளான இன்று தேர்த்திருவிழாவும் தொடர்ந்து ப தோற்சவமும் இடம்பெறும். யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் பல்லாயிர அடியார்கள் வருகை தருவதும், தத்தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவதும் அம்மன் பெரும் பக்தியை வெளிக்காட்டி நிற்கின்றது இவ்வாலயம்.

ஈழவள நாட்டில் முதன்முறையாக தென்னிந்திய இசைமேதை டாக்டர் சீர்காழி கோவிந்தராஜன் "சுட்டிபுரம் வாழும் சிவசுந்தரியே கண்ணகியே கட்டியுந்தன் கால் பிடித்தேன் கருணைக் கண் பாடல் பாடி அம்பிகையை மெய்மறக்கச் செய்த மகிமை என்றுமே எம் எல்லோர் அடி மனத்திலும் சோலை நடுவே சோபித்திருக்கும் சோதியாய் ஒளிர்ந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் அம் துக்கு இவ்வாசிச் செய்தியை வழங்குவதில் பேருவகையடை கின்றேன்.

அம்பிகை அருள் அனைவருக்கும் கிட்டட்டும்!

மஹோற்சவங்களில் சிறப்பாகக் கொண்டாடப்படும் தேர்த்திருவிழாப் பொலிவு காண்பது பெரு அம்பிகை மெய்யடியார்கள் அனைவரும் அன்னையின் ரதோற்சவத்தினை கண்ணாரக் கண்டு அம்பாளின் திருவருளைப் பெற்று உய்வீர்கள் என நல்லாசி கூறி அமைகின்றேன்.

"லோகா ஸமஸ்தா சுகினோ பவந்து"

**சிட்டிவேரம் கண்ணகை அ**


**VK IT Solution**



#08, Point Pedro Road,
Kodikamam Junction.
P.N: 021 227 1400
M.N: 077 406 0010
F.B: VKITSOLUTIONS
Gmail: vkit2015@gmail.com

Dish TV, பிளாஸ்ரிக் கதிரை, மெத்தை, கட்டில் கோயிற் பொருள்கள், அலங்காரப் பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

வீ.ரீ.மொடேர்ண்ஸ் மார்ட்

**V.T Moderns Mart**

No.280, Point pedro Road,
Kodikamam.
Reg No – TN/DS/PS/0473
Prop.K.K.V.Hithen
– 077 315 1454



**கிருஷ்ணா கூல்பார்**



பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.

**கஜமுகன் களஞ்சியம்**



பருத்துறை வீதி,
கொடிகாமம்.

**Si**

**ஜெயகிருஸ்ணா பல்பொருள் வாணிபம்**



ஏ-9 வீதி, கொடிகாமம்.
தொ.பே: 076 888 34 99

**சிறி வெற்றிலைக்கடை**

கோயில் அபிஷேகப் பொருள்கள் மற்றும்
வாசனை திரவியங்கள்,
வாழைப்பழம், வெற்றிலை
பாக்கு ஆகியன மொத்த
மாகவும் சில்லறை
யாகவும் பெற்றுக்
கொள்ளலாம்.



மாக்கற் உட்புறம்,
கொடிகாமம்.
077 278 4730

**Sun View Sunmax**

Mobile Phone Accessories,
Phone Repairing,
Photo copy & DVD
Movies CD



Point Pedro Road, Kodikamam.
Chavakachcheri
T.P: 077 757 4685 / Fax: 021 205 0302
Sunview290@yahoo.com
Sunview290

**அம்பாள் ஐஸ்கிறீம்**



பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.
T.P: 077 348 4322



# ணைகை அம்மன் தேவஸ்தான

# பிதழ் – 09.06.2018

அலங்கார உற்சவம்
28.05.2018 முதல்
10.06.2018 வரை

தான தேர்த்திருவிழாவுக்கு அருளா
ழிபாட்டில் மிகவும் முக்கியம் பெற்ற
து. திருவிழாச் சிறப்பும். கலைகளது
நாள்கள் அலங்கார உற்சவத் திரு
டர்ந்து பதின்நான்காம் நாள் தீர்த்
பல்லாயிரக் கணக்கான அம்பிகை
அம்மன் பால் அவர்கள் கொண்ட

ிந்தராஜன் அவர்கள் வருகை தந்து
ணக் கண்ணால் பாருமம்மா" எனப்
னத்திலும் ஆழமாகப் பதிந்துள்ளது.
ங்கும் அம்பிகையின் இரதோற்சவத்

ன்பது பெரும்பேறாகும். ஆகையால்
ரக்கண்டு. மனமார வழிபாடுசெய்து

**தலைவர்,**
**ணைகை அம்மன் தேவஸ்தானம்.**

## ஆசிச் செய்தி

"மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுதுசெய்வித்தல்
கண்ணினாலவர் நல்விழாப் பொலிவு கண்டர்தல்
உண்மை யாமெனினுகர்முன் வருகென வுரைப்பார்"

மண்ணினிற்பிறந்தார் பெறும் பயன் அண்ணலாரது விழாக்களை மனவுறுதியோடுநடத்துதல் தரிசித்தல் ஆகும்" விதிப்படி உற்சவங்களை செய்பவர்களுக்கும் செய்விப்பவர்களுக்கும் பாவம் நீங்கும் ஞானம் உண்டாகும்.

ஆலயங்களில் உற்சவங்கள் செய்யப்படுவது சிவபெருமானின் பஞ்சகிருத்தியங்களை உணர்த்தும் பொருட்டே ஆகும். அதாவது ஆன்மாக்களது பக்குவத்தன்மைக்கேற்ப மலங்களை நீக்கி முத்திகொடுத்தற் பொருட்டேயாகும். பஞ்சகிருத்தியங்களாவன சிருஷ்டி. திதி. சங்காரம். திரோபவம். அனுக்கிரகம் எனும் ஐந்துமாகும். உற்சவ காலத்தில் செய்யப்படும் ஒவ்வொரு கிரியையும் சிருஷ்டி முதலான ஐந்தொழிலையும் குறிப்பதாகும். இரதோற்சவமானது சங்காரத்தினைக் குறிப்பதாகும். சங்காரமாவது ஆன்மாக்களின் சஞ்சித கன்மங்களை பக்குவப்படுத்தல் என்று பொருள்படும்.

சங்காரத்தினை உணர்த்தும் தேர்த்திருவிழாவில் இறைவன் அண்டசராசரங்களை எல்லாம் தேராக்கி ஆன்மாக்களைப் பற்றியுள்ள மலங்களை எல்லாம் நீக்குதற் பொருட்டு அதன்மீது அமர்ந்து வீதிவலம் வருகின்ற காட்சி ஒப்பற்றதிருக்காட்சி ஆகும். பசுபதிஆகிய இறைவன் சூரிய. சந்திரர்களை உருள்களாகவும். நான்கு வேதங்களைகுதிரைகளாகவும். மேருவை வில்லாகவும். விஷ்ணுவை அம்பாகவும். அக்கினியை அவ் அம்பின் கூர்மையாகவும் கொண்டு எழுந்தருளி பிரம்மாவாகிய சாரதி பிரணவமாகிய ச்வுக்குக்கொண்டு செலுத்தத் திரிபுரத்தசுரர்களை தமது திருப்புன்முறுவலால் எரித்தருளினார். திரிபுரசங்கார உண்மைக்காட்சியை உணர்த்தி ஆணவம். கன்மம். மாயை எனும் மும்மலங்களையும் கெடுத்தற்காக செய்யப்படுவதே இரதோற்சவமாகும்.

**ஸ்ரீசக்தி கிரியா குருமணி**
**ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இ. குமாரசுவாமிக் குருக்கள்**

**தேர்த்திருவிழா**
**இன்று (09.06.2018)**
**சனிக்கிழமை**

**தேரில் எழுந்தருளல்**
**மு.ப 10.30 மணி**

**தீர்த்த உற்சவம்**
**10.06.2018 (ஞாயிறு)**
**மு.ப. 10.00 மணி**

---

**Siva Super Market**





பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.
T.P: 021 205 0249

---

**ஸ்ரீ கருணா மல்ரி சொப்**
(பத்திரிகை முகவர்)
மத்திய கல்லூரி முன்பாக,
வரணி
T.P: 077 077 3504





---

**மணியம் களஞ்சியம்**
**பல்பொருள் வாணிபம்**





கண்டி வீதி,
கொடிகாமம்.

---

**வதனி ஜுவலறி**
Kandy Road,
Chavakachcheri.





Kandy Road,
Kodikamam.
Tel: 021 227 1300
Mob: 077 800 2724

---



**நிலா உணவகம்**



உரிமையாளர்: கண்ணன்
(பிரதேச சபை உறுப்பினர்)
மத்திய கல்லூரி முன்பாக, வரணி.
T.P: 077 116 7552

---

**ஷேத்ரபாலகா**
புத்தகச் சோலை



சகல விதமான பாடசாலை
உபகரணப் பொருள்கள்
புத்தக வகைகள் மற்றும்
அழகுசாதனப் பொருள்கள்
என்பன மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்
கொள்ளலாம்.

கண்டிவீதி, கொடிகாமம்.
T.P: 077 220 8366
Kandy Road, Kodikamam.
Email: s.niruban77@gmail.com

---





ஒரிஜினல் தங்க நகைகளை பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்
Since 1978
நடராசா கஜந்தன்
**நியூ மைதிலி ஜுவலர்ஸ்**



காலத்தை வெல்லும் கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால் மேலும்
உங்கள் புன்னகைஒளிரும் விரையுங்கள்
நியூ மைதிலிக்கு



38,40, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
T.P: 021 221 7878 Fax:021 2217877
newmaithily40@gmail.com
New Maithily Jewellers 0094212217878


ES
Printers
குறைந்த விலையில் உங்களுடைய
சகல அச்சக வேலைகளையும்
செய்து பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்...
BATTLE NORTH
ES Printers
AR Rodny
18
மணியம் கபே
Maniyam Cafe
பனர் பிரிண்ட்
(Banner),
35/=
பனர் பிரிண்ட் (Banner),
வியாபார மற்றும்
ஏனைய நிறுவனங்களுக்கான
பெயர் பலகைகள் (Name Board),
மக் பிரிண்ட், ரீ-சேட், புத்தகங்கள்,
கையேடு (Handbills),
நோட்டிஸ் (Notice) மற்றும்
அனைத்து ஓவ்செற்,
டிஜிற்றல் அச்சக வேலைகள்
சகல நிறுவனங்களுக்குமான
பட்டியலேடு ( Bill Book)
காபன் பிரதி மற்றும் காபன்
பிரதி அற்ற, வர்ண மற்றும்
கறுப்பு வெள்ளை நிறத்தில்,
விரும்பிய அளவுகளில்
குறித்த நேரத்தில்
குறைந்த விலையில்
தரமாக செய்துதரப்படும்.
GVS
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
கரடிப் போக்குச் சந்தி, ஏ-9 வீதி,
கிளிநொச்சி.
நவீன சந்தை, முதலாம் மாடி, சாவகச்சேரி.
021 222 7432
021 492 7454 / 021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com
www.esprinters.com

ம. அருள்குமரன்

# நாம் எதையும் சாதிக்க வல்லவர்கள்

கல்வி கரையிலது. கிடைத்தற்கரிய அரும்பெருஞ் செல்வம். உய்த்துணர்ந்து அறிவால் பகுத்தறிந்து பருகிடும் அமிர்தம். சமூக விடுதலை மொழியும் ஆயுதம். அறிவார்ந்த விழுமியங்களை செப்பனிடும் ஞானம்.


**உயர் திருநிலை**

அந்தவகையிலே கல்வி எனும் உயர் திருநிலையை மூலதனம் செய்வதிலும், அதன் பயன்களை சேமித்து தன்னிகரில்லா உயர்நிலை அடைவதிலும் தமிழர்கள் முதன்னிலையானவர்களாக விளங்குகின்றனர். இன விடுதலையை கண்டுகொள்வதில் கல்வி அறிவு என்ற 'காப்பரண்' தனை கட்டமைத்து சமூக பொருளாதார, கலாசார விழுமியங்கள் மற்றும் பண்பாட்டு இயக்கத்தின் தனித்துவ மூலக்கூறுகள் என்பவற்றை காத்திருக்கின்றனர். 'பலமற்ற மூளையில் நாம் எதையுமே செய்ய இயலாது. அதனால் நாம் அதைப் பலப்படுத்த வேண்டும்.' என்ற விவேகானந்தரின் அறிவுரைக் கூற்று மொழிவையும் உறுதியாய் நிலைப்படுத்தி பயணம் கொள்கின்றனர்.

**'பொறி' எனும் இயலின் கண்டடைவு**

ஆம், மிக நீண்ட காலங்களின் வீழ்கையுள் முயற்சியின் வழி கண்டெடுக்கப்பட்ட முத்துக்களாக தமிழர் தாயக நிழலில் இருந்து எழுந்த சொத்துக்களாக, முதல் தொகுதிப் பொறியியல் பட்டதாரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்திலிருந்து வெளியேறியுள்ளனர். பல்கலைக்கழக வரலாற்றின் அடிப்படைகளில் கண்டுகொள்ளப்பட்ட மாற்றத்தின் புதிய திருப்பு முனையாக இவர்களின் வருகை முகிழ்ந்திருக்கிறது. இதுவரை காலமும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்து பொறியியல் பீடத்துக்குத் தெரிவு செய்யப்படுகின்ற மாணவர்கள் பேராதனைப் பல்கலைக் கழகம், மொரட்டுவ பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் மற்றும் ருகுண பல்கலைக்கழகம் போன்றவற்றை நாடிச் சென்று தமது பட்டக் கற்கை நெறியை தொடர வேண்டிய தேவையும் கட்டாயமும் இருந்து வந்துள்ளதை இவ்விடம் ஞாபகம் கொள்ள வேண்டும்.

தற்போது இடம்பெற்று வருகின்ற யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 33 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவில் 33 பட்டதாரி மாணவர்கள் 'பொறியியல் விஞ்ஞானமாணி' பட்டம் பெற்று பொறியியலாளர்களாக வெளியேறியுள்ளமை மகிழ்வு.




## அளவற்ற வலிமையோடு வெளிவரும் பொறியியல் பீட பட்டதாரிகளை வாழ்த்துவோம்




இவ்விதம் முதன்முறையாக நாட்டின் பல பாகங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தமிழர் தாயகத்தில் அமைவு கொண்ட பல்கலைக்கழகத்திலிருந்து பொறியியலாளர்களாக வெளியேறியுள்ளமை வரலாற்று அடைவு.

**முயற்சியின் நாயகன் பேராசிரியர் அ. துரைராஜா**

இந்தச் சந்தர்ப்பத்திலே பொறியியல் துறையில் உலகம் போற்றி மகிழ்கின்ற 'துரை விதியை' அறிமுகம் தந்த மாமனிதர் பேராசிரியர் அ. துரைராஜாவின் கனவு மெய்ப்பட்டுள்ளது. பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தில் இருந்து யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு பணி மாற்றம் பெற்று வந்த போது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் பொறியியல் பீடமொன்றை நிறுவ வேண்டும் என அவர் கொண்டிருந்த தீராத அவா 30 வருட காலத்தின் பின்பு நிறைவேறியிருக்கிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தை அமைப்பது தொடர்பான முயற்சி 1979 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. பல்கலைக்கழக மூதவையில் சமர்ப்பிக்கப் பட்ட திட்ட முன் மொழிவுகள் மூதவையிலும், பல்கலைக்கழகப் பேரவையிலும் அங்கீகரிக்கப்பட்டன. திட்ட முன்மொழிவுகள் தொடர்பான சாத்தியப்பாடுகளை ஆராய்வதற்கு குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் பரிந்துரைகளை 1988 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஏற்றுக்கொண்டது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீடமொன்றை அமைப்பதற்கு அனுமதியை வழங்கியது. குறிப்பாக பொறியியல் பீட வளாகத்தை கிளிநொச்சியில் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 1991/1992 கல்வி ஆண்டில் பொறியியல் பீடத்துக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன.

ஆனாலும் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக அந்த முயற்சிகள் எவையும் செயலுருவம் பெறவில்லை. அதன் பின்பாக பல சந்தர்ப்பங்களில் பொறியியல் பீடத்தை யாழ்ப்பாணத்தில் அமைப்பது தொடர்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அதனை செயல் வடிவம் பெறச் செய்வதில் காலதாமதங்கள் ஏற்பட்டன.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் பீடம்**

இருந்தபோதிலும் 2010 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தைக் கிளிநொச்சியில் அமைப்பது தொடர்பில் ஆலோசனைகளையும், தீர்மானங்களையும் மேற்கொள்வதற்கு பேராசிரியர் க. கந்தசாமி தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அவர்களின் பரிந்துரைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. முதற்கட்டமாக 'குடிசார் பொறியியல், இலத்திரனியல் பொறியியல், கணினிப் பொறியியல்' சார் துறைகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. தொடர்ந்து 2011ஆம் ஆண்டு பங்குனி மாதம் 29 ஆம் திகதி பொறியியல் பீடத்துக்கான நிரந்தர கட்டடங்கள் அமைக்கப்படும் வரை கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள விவசாய பீடத்துடன் தற்காலிக கட்டட அமைவை மேற்கொண்டு இயங்குவதற்குரிய பரிந்துரை பல்கலைக்கழக மூதவையிடம் முன்மொழியப்பட்டது.

பொறியியல் பீடத்தை அமைப்பதற்கான அமைச்சரவை முன்மொழிவு 2012ஆம் ஆண்டு மார்கழி மாதம் 5 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டு, 2013ஆம் ஆண்டு தை மாதம் 4 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது. அவ்வாண்டே மாணவர்களை உள்ளீர்ப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

முதல் தொகுதியில் 47 மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உள்வாங்கப்பட்டனர். முதலாவது பீடாதிபதியாக பேராசிரியர் அ. அற்புதராஜா பதிவியேற்றார். இந்த ஆரம்பங்களின் தொடர்நிலை முழுமை பெற்றுள்ளது.

தலைசிறந்த தமிழ்தாயின் குருபீடமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் பீடம் தலை நிமிர்ந்து மிடுக்குடன் கல்வி ஒளி வீசுகிறது.

அறிவின் விழி திறந்து சேவையின் கனிகள் நயந்து பயணம் கொள்ள ஆயத்தமாகின்ற முதல் தொகுதிப் பொறியியல் பீட பட்டதாரிகள் தாய் மண்ணுக்கும், மக்களுக்கும் கடமை செய்ய முன்வர வேண்டும். அவர்களை வாழ்த்தி வரவேற்போம்.

**"கடலைக் கடக்கும் இரும்பு போன்ற மன உறுதியும், மலைகளையே துளைத்துச் செல்லும் வலிமைகொள் தோள்களுமே நமக்குத் தேவை. வலிமை தான் வாழ்வு. பலவீனமே மரணம். மிகப்பெரிய இந்த உண்மையை உணர்ந்து கொள்வோம்"**

### லிஸ்பன் தந்த மணிவிளக்கே!

நீலிக்கண்ணீர் தனில் நெஞ்சங் குளிர்ந்து அவன்தான்
நடமாடும் தெய்வமென்று நம்பும் உலகில்
போலிகளின் வெளிமயக்கில் ஏமாந்து உதட்டின்
புன்னகையாம் மழை நனைந்து பட்டுத் தெளிவர்
நாலிரண்டு எண்குணத்தால் உலக முய்ய
நலம் கோடி புரிந்தீரையா மக்களுக்காய்!
நூலிழையில் விசுவாசம் தளரா மனித
நேயத்தில் லிஸ்பன்தந்த மணி விளக்கே

-மு. சிங்கராயர்



**நாளை**

**10.06.2018**

ஞாயிற்றுக்கிழமை

**வைகாசி 27**

திதி: ஏகாதசி மு.ப.08.39வரை
நட்சத்திரம்: அச்சுவினி மு.இ. 07.59 வரை
சுபநேரம்: 08.52 – 10.22 வரை
ராகுகாலம்:04.22 – 05.52 வரை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர் தாயகத்தின் மீட்சிக்கு விரைந்து நடவடிக்கை எடுங்கள்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஒருங்கிணைந்த திட்டமிட்ட அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு, அரச தலைவர் சிறப்புச் செயலணி அமைக்கப்பட்டுள்ளது. போரில் பாதிக்கப்பட்டு, பின்தங்கிய மாகாணங்கள் என்ற அடிப்படையில் வடக்கு கிழக்கை நோக்கி, ஏனைய மாகாணங்களை விட இங்கு சிறப்புக் கவனம் செலுத்துங்கள் என்ற தமிழ் அரசியல் தலைமைகளின் 9 ஆண்டுகாலக் கோரிக்கைக்கு இப்போதுதான் செயல்வடிவம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

தமிழர்களின் தேசியப் பிரச்சினையான இனப் பிரச்சினைக்குத் தீர்வைத் தரவேண்டிய முயற்சிகள், இறுதிக் கட்டப் போரின் போது நடந்தேறிய மனிதப்படுகொலைக்கு நீதி வழங்கவேண்டிய விவகாரங்கள், முட்டுச் சந்தில் மோதி நிற்கின்ற நிலையில், அபிவிருத்திக்கான செயலணி அமைக்கப்பட்டமை சந்தேகங்களையும் எழுப்பாமலில்லை. அவை ஒருபுறம் இருந்தாலும், ஏனைய மாகாணங்களைவிடப் பின்தங்கிய நிலையிலிருந்து, அந்த 7 மாகாணங்களுடனும் போட்டியிடவேண்டிய சூழலில், வடக்கு கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி பற்றிக் கவனம் செலுத்தியவேண்டியது அவசியமே.

முக்கியமான அமைச்சர்கள், அந்த அமைச்சுக்களின் செயலர்கள், முப்படையினர், வடக்கு கிழக்கு மாகாணங்களின் ஆளுநர்கள், முதலமைச்சர்கள், தலைமைச் செயலர்கள் ஆகியோர் செயலணியின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். வடக்கு கிழக்கு மாகாண மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களோ, மாவட்டச்செயலர்களோ, ஏன் ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களோ இந்தச் செயலணிக்குள் உள்ளீர்க்கப் படவில்லை.

மாகாணத்தைப் புறமொதுக்கி, கொழும்பு அரசு தானே திட்டங்களைத்தயாரித்து நடைமுறைப்படுத்துகின்றது என்ற குற்றச்சாட்டை இல்லாமல் செய்ய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கலாம்.

வடக்கு கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கு சிறப்புச் செயலணி நியமிக்கப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வழங்கிய வாக்குறுதி அரசிதழ் அறிவிப்பாக வருவதற்கே 14 மாதங்கள் சென்றது. கடந்த 9 ஆண்டுகளில் இந்த மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்ட பெரிய அபிவிருத்தித் திட்டங்களை இந்தச் செயலணி மீளாய்வு செய்யவுள்ளது. அதன் பின்னரே, மாகாணங்களின் அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்படவுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் பதவிக் காலம் 2019ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்துடன் நிறைவுக்கு வந்துவிடும். எஞ்சியிருப்பது 18 மாதங்கள்தான். அதன் பின்னர் ஆட்சிக்கு வரும் தலைவர் இந்தச் செயலணியைத்தொடர்வதற்கு அனுமதிப்பாரா? இல்லையா என்பது தெரியாது. இந்தச் செயலணி நடந்து முடிந்த அபிவிருத்தித் திட்டங்களை மீளாய்வு செய்து, புதிய அபிவிருத்தித் திட்டங்களை அடையாளப்படுத்தி, இவற்றை நடைமுறைப்படுத்தும்போது ஏற்படும் இடர்களைக் களைந்து எஞ்சிய 18 மாதங்களுக்குள் செய்து முடிக்கவேண்டும்.

இந்தச் செயலணியின் முன்னால் எழுந்து நிற்கின்ற பிரதான சவால் இதுதான். முன்னைய அபிவிருத்தித் திட்டங்களை மீளாய்வு செய்கின்ற சமநேரத்தில், புதிய அபிவிருத்தித்திட்டங்களைஅடையாளப்படுத்துவதும், நிதிமூலங்களைக்கண்டறிவதும்நடைபெற்றாகவேண்டும்.

பெயருக்காக அமைக்கப்பட்ட செயலணியாக இல்லாமல், தமிழர்களின்வாக்குகளால் ஆட்சிபீடமேறிய அரசு, ஆகக் குறைந்தது இதையாவது உருப்படியாகச் செய்து முடிக்கவேண்டும் என்பதே அவா!

# வடக்கை காப்பாற்றுவது எம்மவரின் தலையாய கடமை

சேரலாதன்

வடக்கு மாகாணத்தில் தொடர்ந்து இடம் பெறுகின்ற சிங்களவர்களின் ஆக்கிர மிப்பைத் தடுத்து நிறுத்துவற்கு மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட செயலணி ஒன்று அமைக்கப் பட்டதை வரவேற்க வேண்டும்.

வடக்கின் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் எல்லைக் கிராமங்கள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால் தமிழர்களிடமிருந்து நழுவிப் போய்க் கொண்டிருக்கின்றன. அரசு மற்றும் படையினரின் முழு ஒத்துழைப்புடன் இந்தக் குடியேற்றங்கள் இடம் பெறுவதால் இவற்றைத் தடுத்து நிறுத்துவது இயலாத காரியமாக மாறி விட்டது. இது குறித்து தமிழ் மக்களின் பிரதிநிதிகள் பல தடவைகள் எடுத்துக் கூறிய போதிலும், பயனெதுவும் கிடைக்கவில்லை. தற்போது காலம் கடத்தாது செயலணியொன்றை அமைத்து தமிழ் அரசியல்வாதிகள் சிங்களக் குடியேற்றங்கள் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதற்கு எதிராகச் செயற்படுவதற்குக் கிளம்பியுள்ளமை வரவேற்கத் தக்கது.

### தமிழர் பகுதிகளில் அவர்களது இருப்பை நலிவுபடுத்தும் திட்டம்

தமிழர்களின் நிலங்களை அபகரித்து விட்டால் அவர்களின் இருப்பை இல்லாது செய்து விட முடியுமென்பது பேரினவாதிகளின் கபட நோக்கமாகும். கிழக்கு மாகாணத்தில் இதைத்தான் அவர்கள் செய்தார்கள். இதன் காரணமாக தமிழர்களின் தாயக பூமியெனப் பெருமையுடன் அழைக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தில் இன்று தமிழர்கள் அல்லாதவர்களின் கால்கள் அதிகளவில் நடமாடுவதைக் காண முடிகின்றது. தமிழர்கள் சிறுபான்மையினர் என்ற அடைமொழிக்குள் அடங்கிப்போய் விட்டனர். கிழக்கு மாகாண சபையின் ஆட்சியைப் பிடிப்பதற்குக் கூடத் தமிழர்களால் முடியவில்லை. இவ்வாறானதொரு நிலையை வடக்கிலும் ஏற்படுத்துவதே பேரினவாதிகளின் திட்டமாகும்.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் தேவையான காணிகள் உள்ள நிலையில் தமிழர்கள் செறிந்து வாழ்கின்ற வடக்கிலும், கிழக்கிலும் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றமை இனவாதத்தின் தீவிரத்தை எடுத்துக் காட்டுகின்றது.

சிங்களக் குடியேற்றங்களால் முல்லைத்தீவு மாவட்டமே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அந்த மாவட்டத்தின் சில எல்லைக் கிராமங்களில் தமிழர்கள் வாழ்ந்ததற்கான அடையாளத்தைக் கூடத் தற்போது காண முடியவில்லை. அவை முற்றிலும் சிங்களக் குடியிருப்புக்களாகவே மாறிவிட்டன. இன்றும் முன்னைய பாணியில் நில ஆக்கிரமிப்பு இடம் பெறுவதைக்காண முடிகின்றது.

### ஒட்டுமொத்த வடக்கு மாகாணமும் வறண்ட பிரதேசமாகும்

வடக்கு மாகாணம் வறட்சியான கால நிலையைக் கொண்டதொரு பிரதேசமாகும். இங்கு மலைகளோ ஆறுகளோ காணப்படுவதில்லை. மழைதான் ஒரேயொரு நீர் ஆதாரமாகக் காணப்படுகின்றது. மழை பொய்த்தால் எல்லாமே பொய்த்து விடும். குடிப்பதற்கு நீர் கூடக் கிடைக்காது போய் விடும். விவசாயமும் மழையை நம்பித்தான் இடம்பெற்று வருகின்றது. இந்த நிலையில் மகாவலி அதிகாரசபைச் சட்டத்தைப் பயன்படுத்தி மகாவலி அதிகாரசபை வடக்கில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. வறண்டு போய்க் கிடக்கும் வடக்குக்கு மகாவலி நீரைத் திசை திருப்பி செழிப்பை ஏற்படுத்த முடியாத மகாவலி அதிகார சபை, சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவதில் வரிந்து கட்டிக் கொண்டு செயற்படுவது ஏன் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

தமிழ் மக்கள் வடக்கையும் இழந்து விட்டால் அவர்களது எதிர்காலம் பல்வேறு விதத்திலும் சூனியமாகிவிடும். இனப்பரம்பலில் ஏற்படப்போகும் மாற்றங்கள் மிக மோசமான விளைவுகளை அவர்களுக்கு ஏற்படுத்திவிடும். ஆகவே தமிழ்த் தலைமைகள் வழக்கம் போன்று இந்த விடயத்திலும் மெத்தனமாக இருந்துவிட்டால், தமிழர்களின் சந்ததியினர் அவர்களை ஒருபோதுமே மன்னிக்க மாட்டார்கள்.

### தமிழ்த் தலைமைகள் முக்கிய கவனம் செலுத்திச் செயற்பட வேண்டியது இன்றைய அவசிய தேவை

பிரதி சபாநாயகர் பதவி சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கா? அல்லது ஐக்கிய தேசியக்கட்சிக்கா? என்பதில் அக்கறை காட்டுகின்ற தமிழ்த் தலைமைகள், தாம் சார்ந்த மக்களின் விடயத்தில் பாராமுகமாக இருக்க முடியாது. செயலணி ஒன்றை அமைத்து விட்டால் எல்லாமே முடிந்து விடுமென நாம் நிம்மதியாக இருக்க முடியாது. அந்தச் செயலணியின் எதிர்காலச் செயற்பாடுகளைப் பொறுத்தே வடக்கின் எதிர்காலம் அமையுமென்பதைக் கூறத் தேவையில்லை.

மாகாண சபையினர், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரையும் திரட்டி சிங்களக் குடியேற்றங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் செயலணியினர் உடனடியாகக் கவனம் செலுத்துதல் வேண்டும். மக்களின் ஜனநாயக வழியிலான போராட்டங்களுக்கு பல்வேறு தரப்புக்களிலிருந்தும் ஆதரவு கிடைக்கவே செய்யும். இலங்கை அரசின் இரட்டை வேடத்தையும் இதன் மூலமாக வெளிப்படுத்த முடியும்.

முக்கியமாகத் தமிழர்கள் கட்சி பேதமின்றி அனைவரும் இணைந்து போராட வேண்டிய நிலையை ஏற்படுத்துதல் அவசியமானது. ஆகவே, அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை ஏற்பாடு செய்து அதில் ஆக்கபூர்வமான தீர்மானங்களை மேற்கொண்டு செயற்படுதல் பயன் தரக்கூடியது. குறிப்பாக மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டி ஜனநாயக வழியிலான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

வடக்கைக் காப்பாற்ற வேண்டியது இங்குள்ள அனைவரதும் தலையாய கடமையாகும்.



இந்துமதி





# இருள் சூழ்ந்த நிலையில் தமிழ் மக்களது எதிர்காலம்

நாட்டின் இன்றைய அரசியல் நடப்புக்களைப் பார்க்கும்போது தமிழர்களின் எதிர்காலம் தொடர்பான கவலைகள் அதிகரித்துள்ளன. நல்லாட்சி அரசு எனக் கூறப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி-சிறிலங்கா சுதந்திரக்கட்சி இணைந்த கூட்டு அரசு நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதற்குத் தவறிவிட்டது. குறிப்பாகத் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பாக அரசினால் எந்தத் தீர்வையும் முன்வைக்க முடியவில்லை.

இனப்பிரச்சினையை இந்த நாட்டின் சாபக்கேடு என்றுதான் கூற வேண்டும். நாட்டின் சகல பிரச்சினைகளுக்கும் இதுவே பிரதான காரணமாக அமைந்துவிட்டது. தமிழ் மக்கள் இனப் பிரச்சைனைக்குத் தீர்வு காணப்படல் வேண்டுமென நாடு சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர்.
ஆனால் இன்று வரை அதற்குத் தீர்வு காணப்படவில்லை. இதற்கு மாறாக அதுமென்மேலும் தீவிரமடைவதையே காண முடிகின்றது. இதைவிட ஏராளமான வேறு பிரச்சினைகளுக்கும் தமிழ்மக்கள் முகம் கொடுத்து வருகின்றனர்.

**தென்பகுதி மீனவர்களது அத்துமீறிய வருகையால் தமிழ்ப் பிரதேச மீனவர்களது வாழ்க்கை கேள்விக்குறியே**

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால் தமிழர் பிரதேசங்கள் தினமும் பறிபோவதைக் காண முடிகின்றது. அரச காணிகளில் மட்டுமல்லாது தமிழர்களின் பூர்வீக நிலங்களும் இந்தக் குடியேற்றங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அரசின் ஆதரவு இதற்கு இருப்பதால், இதைத் தடுத்து நிறுத்துவதற்கு முடியவில்லை. வடபகுதியில் அத்துமீறி நுழைந்துள்ள தென்பகுதி மீனவர்கள் இங்குள்ள மீனவர்களின் வாழ்வாதாரத்தைச் சுரண்டும் வகையில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.
படையினரின் ஆதரவு இவர்களுக்கு இருப்பதால் இவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு எவராலும் முடியவில்லை. நூற்றுக்கணக்கான படகுகளில் வந்த அந்த ஆயிரக்கணக்கான தென்பகுதி மீனவர்கள், வடகடலை ஆக்கிரமித்துள்ளமை இனமோதல்களுக்கு வழிவகுக்குமென எச்சரிக்கையையும் விடுக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்திலேயே தென்பகுதி மீனவர்களின் அத்துமீறலைத் தடுத்திருந்தால், இன்று இந்த நிலை ஏற்பட்டிருக்க மாட்டாது. அரசின் அலட்சியமான போக்குத் தொடருமானால், வடபகுதி மீனவர்கள் மேலும் துயரங்களுக்கு ஆளாகவே செய்வார்கள்.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால் தமிழர் பிரதேசங்கள் தினமும் பறிபோவதைக் காண முடிகின்றது. அரச காணிகளில் மட்டுமல்லாது தமிழர்களின் பூர்வீக நிலங்களும் இந்தக் குடியேற்றங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அரசின் ஆதரவு இதற்கு இருப்பதால், இதைத் தடுத்து நிறுத்துவதற்கு முடியவில்லை. வடபகுதியில் அத்துமீறி நுழைந்துள்ள தென்பகுதி மீனவர்கள் இங்குள்ள மீனவர்களின் வாழ்வாதாரத்தைச் சுரண்டும் வகையில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

**போர்ப் பாதிப்பில் இருந்து தமிழ்மக்கள் இன்னமும் விடுபடவில்லை**

போர் காரணமாக பல ஆயிரக் கணக்கான தமிழ்ப் பெண்கள் தமது கணவன்மாரை இழந்து விதவைகளாகி விட்டனர். இவர்களே தமது குடும்பங்களைத் தலைமை தாங்கி நடத்த வேண்டிய நிலையில் உள்ளனர். பொருளாதாரக் கஷ்டம் ஒருபுறமிருக்க, சமுதாயத்தில் பாதுகாப்பு இல்லாததொரு நிலையில் இவர்கள் வாழ்கின்றனர். தம்மையும் பாதுகாத்துக்கொண்டு, தமது குடும்பங்களையும் பராமரிக்க வேண்டிய மிகப் பெரிய பொறுப்பை இவர்கள் சுமந்துள்ளனர். அரசு வழங்குகின்ற உதவிகள் இவர்களுக்குப் போதுமானதாகத் தெரியவில்லை. இவர்களின் நிலை தொடர்பாகக்கள ஆய்வு செய்து போதிய உதவிகளை வழங்க வேண்டியது அரசின் தலையாய கடமையாகும்.

அரசினால் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமுதாயத்துடன் இணைந்து வாழ்கின்ற முன்னாள் போராளிகள் தொடர்பாக அதிக அக்கறை காட்டுவது அரசின் பிரதான கடமையாகும்.
இவர்களில் பலர் அங்கங்களை இழந்த நிலையில் அவல வாழ்வு வாழ்ந்து வருகின்றனர். ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது முன்னாள் போராளிகள் பல்வேறு வகையிலும் துன்பங்களை எதிர்கொண்டு வருகின்றமை தெளிவாகத் தெரிகின்றது.
தொழில் வாய்ப்பின்மை, சமுதாயமும், அரசும் இன்னமும் இவர்களைச் சந்தேகக் கண் கொண்டு பார்க்கின்றமை, போதிய வருமானம் இல்லாமை ஆகியவை இவற்றுள் பிரதானமானவைகளாகும். இவற்றைப் போக்குவதற்கு அரசு உடனடிக் கவனத்தைச் செலுத்த வேண்டும்.

நீண்டகாலமாக இடம்பெற்ற போர், தமிழர்களின் பொருளாதாரத்தை முற்றாகவே சீரழித்து விட்டது. ஒரு காலத்தில் வளமான பொருளாதா்ரக் கட்டமைப்பைக் கொண்டிருந்தவர்கள், இன்று சகலதுக்கும் அரசிடம் கையேற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். போர் ஓய்ந்து ஒன்பது ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையிலும் இவற்றுக்குத் தீர்வு காணப்படவில்லை.

**சிங்கள கடும்போக்காளர்கள் தரப்பைத் திருப்திப்படுத்த முயலும் அரசு**

தற்போது அரச தலைவர் தெரிவித்துள்ள கருத்துக்கள் அவரது இயலாத தன்மையை எடுத்தக்காட்டி விட்டது. நிறைவேற்று அதிகாரங்கள் பலவற்றைப் அவர் கொண்டிருந்தும், அவற்றைப் பயன்படுத்துவதற்குத் திராணியில்லாத நிலையில் அவர் உள்ளதையும் தெளிவாக்கிவிட்டது. இவருக்கு வாக்களித்து அரச தலைவர் பதவியில் அமரவைத்த தமிழர்கள், பெரும் ஏமாற்றத்தை எதிர்கொண்டு வருகின்றனர். இவர்களின் பிரச்சினைகள் எவற்றுக்கும் அரச தலைவரால் தீர்வு காண முடியவில்லை. இதற்கு ஏதேதோ காரணங்களை அவர் கூறி வருகின்றார். தற்போதைய அரசியல் நிலவரங்களைப் பார்க்கும்போது மகிந்த தரப்பினர் அடுத்து ஆட்சியமைப்பதற்கான வாய்ப்புக்கள் பெருகி வருகின்றன. 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை இல்லாமற் செய்து விட்டு, மகிந்த அடுத்த அரச தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் குதிக்கவுள்ளதாக ஒரு தகவல் தெரிவிக்கின்றது. அதற்கான வாய்ப்பு தற்போது பிரகாசமாகவும் உள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலர் மகிந்தவுடன் இணைந்து கொள்வதற்கான வாய்ப்பு அதிகமுள்ளதால், இது சாத்தியமாவதற்கும் வாய்ப்பு உள்ளது.

எல்லாவற்றையும் தொகுத்துப் பார்க்கும் போது தமிழர்களின் எதிர்காலம் கவலைகள் நிறைந்ததாகவே அமையப்போவதை உணர முடிகின்றது. ■

## ஆசிரியருக்கான கடிதம்

### வலி. தென் மேற்கு பிரதேசசபையின் முன்னுதாரணம் பாராட்டுக்குரியது

பழைய பொருள்கள் வாங்குபவர்கள் என்று எமது ஊர் ஊராக, ஒழுங்கை தெருக்கள் எல்லாம் அடிக்கடி திரியும் வியாபாரிகள், மற்றும் ஒவ்வொரு மின்கம்பம்-தொலைத்தொடர்புக் கம்பங்களிலும் ஒழுங்காக விளம்பரத்தைக் கட்டி மக்களின் சேமிப்பைப்பிடுங்கி அவர்களைக்கடனாளிகளாக்கும் நுண்கடன் நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் விதமாக, அண்மையில் வலி.தென் மேற்கு பிரதேச சபை, அத்தகைய தரப்பினர் தம்மிடம் முறையாக வியாபார உரிம அனுமதி பெற்றிருக்க வேண்டுமென, கட்டுப்பாடு விதித்திருப்பதாக 30.05.2018 திகதிய உதயன் பத்திரிகை மூலம் அறிய முடிந்தமை மிக்க மகிழ்ச்சி தருகிறது.
பழம்பொருள்கள் வாங்குவோர் என எல்லா இடங்களிலும் எப்போதும் திரியும் இந்த வியாபாரிகளால் பல்வேறு சமூகச் சீர்கேடுகள் இடம்பெறும் சாத்தியங்கள் மிக அதிகம். இது விடயத்தில் வலி.தென் மேற்கு பிரதேச சபையின் தீர்மானம் பாராட்டப்பட வேண்டியது அவசியம். அதன் முன்னுதாரணம் எமது ஏனைய பிரதேச சபைகளாலும் பின்பற்றப்பட வேண்டியது இன்றைய தேவை.

*சி.சாங்கரலிங்கம்*
*மானிப்பாய்*

### சமய ஆசாரங்கள் பேணப்படல் சிறப்பு

கடந்த 9.04.2018 நிறைவுப் பங்குனித்திங்களன்று மட்டுவில் அம்மன் கோவிலுக்குச் சென்றிருந்தேன். பார்த்த இடமெல்லாம் பொங்கல் பக்திமயம்தான். நாமும் ஓரிடத்தில் பொங்குவதற்கு வசதி கிடைத்தது. எமது பொங்கல் இடத்தின் அருகே ஒரு குடும்பத்தைச் சேர்ந்தோர் பொங்கிக் கொண்டிருந்தனர். பொங்கல், கறிவகை என சிறப்பாக நடைபெற்றது. குடும்பத் தலைவரே பிரதான பாகம் எடுத்துக்கொண்டு இயங்கிக் கொண்டிருந்தார். வாய்நிறைய வெற்றிலை போட்டுக்கொண்டே கருமமாற்றினார். இடையிடையே ஆள்களுடன் கதைத்துச் சிரிப்பு வேறு. ஒரு தடவை போட்ட வெற்றிலை முடிந்ததும், ஐந்து நிமிட இடைவெளியில் அடுத்த தடவை மீண்டும் வெற்றிலையை அதக்கிக் கொண்டார். மரக்கறி வெட்டுதல், பால்புளிதல் முதல் பலவேலைகளையும் வெற்றிலை வாயுடன் அவரே செய்தார். இவரது வெற்றிலை எச்சில் பொங்கலிலோ, காய்கறிகளிலோ வீழ்ந்திருக்கும். எச்சிற்படுத்திய பொங்கல் கறிவகைகளைப் படைத்தார்கள். தெய்வம் ஏற்றிருக்குமா? அதுமட்டுமல்ல, பொங்கல் இடத்தில் பல பெண்கள், தலைமுடியை நாகரீகமாக விரித்து விட்டபடி நின்று வேலைகள் செய்தனர். தலைமயிர் பொங்கலிலோ, கறிகளிலோ, சேருவதற்கு சந்தர்ப்பம் அதிகம், தலைமயிர் வீழ்ந்துள்ள படையலை அம்பாள் ஏற்பாளா?
"ஆண்கள் மேலாடையின்றி உள்ளே செல்க" என்ற அறிவித்தல் கோவில்களில் காணப்படுகின்றன. "பெண்கள் தலைவிரி கோலத்துடன் உள்செல்லவேண்டாம்" என்று ஏன் அறிவித்தல் இடமுடியாது?
இவ்வாறான நிலையில் இப்படியாக நாம் தெரியாமல் செய்யும் தவறுகளை குருக்கள்மார், ஆலய நிர்வாகத்தினர் அடியார்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டும். ஆசாரங்கள் பேணப்பட வேண்டும்.

*க.சுப்பிரமணியம் , கொக்குவில்*



# பெருந்தன்மை வேண்டும்

உழவன் வளர்த்த எருது ஒன்று, மாட்டுக் கொட்டடியில் வைக்கோல் போர் அருகே படுத்து அயர்ந்து உறங்கிக்கொண்டிருந்தது.

அந்த வழியாக ஓடிவந்த எலி ஒன்று எருதைக் கவனிக்காமல் அந்த எருதின் மேலேயே விழுந்து விட்டது.

திடுக்கிட்டு விழித்த எருது தன் மேல் விழுந்தது யார் என்று பார்ப்பதற்காக சுற்றும்முற்றும் பார்த்தது. தூரத்தில் பயந்த படியே எலி ஒன்று நிற்பதைப் பார்த்தது. "எலியே! எல்லாம் உன்னோட வேலை தானா? உன்னை" என்றபடி கோபத்தில் பற்களை நற நறத்தது.

எலி அதனிடம் "எருது அண்ணா! நீங்கள்வயதில் பெரியவர், என்னை மன்னியுங்கள். நான் வேண்டுமென்றே உங்கள் மீது விழவில்லை. எதிர்பாராமல் உங்கள் மீது தவறி விழுந்து விட்டேன்"என்றது. இப்போது எருது மேலும் கோபமானது. "நீ விழுந்தது மட்டுமல்லாமல் நடிக்க வேறு செய்கிறாயா?" என்று கத்தியது.

எலி மீண்டும் "எருது அண்ணா, நான் உண்மையைத் தான் சொல்கிறேன். நிச்சயமாக நடிக்கவில்லை. எதிர்பாராமல் நடந்து விட்டது. பெரியவர் நீங்கள் பெருந்தன்மையோடு என்னை மன்னிக்க வேண்டும்"என்று கேட்டது.

"அடேய்... விட்டா பேசிக்கிட்டே போறே. உன்னை.."என்ற படி விருட்டென்று எழுந்தது எழுது. இனியும் நியாயம் பேச முடியாது என்று புரிந்துகொண்ட எலி, அங்கிருந்து ஓடத் தொடங்கியது. எருது விடாமல் துரத்தத் தொடங்கியது. எலி ஓடிச்சென்று சுவர் ஓரமாக இருந்த வளை ஒன்றிற்குள் புகுந்துகொண்டது. எருது வளையின் அருகே வந்தது. மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்கியது. வளையை முகர்ந்து பார்த்தது."எலியே, உன்னை நான் கொல்லாமல் விடமாட்டேன். என்னிடமிருந்து உன்னால் தப்பிக்கவே முடியாது"என்றபடி தன் கொம்பால் குத்திக் கிளறப் பார்த்தது. வலிமையான சுவராக இருந்ததால் எருதால் எதையுமே செய்யமுடியவில்லை. எருது சோர்ந்து போய்விட்டது. அதனால் அருகிலேயே படுத்துக்கொண்டது."எவ்வளவு நேரம் உள்ளேயே இருப்பாய். வெளியில் வந்து தானே ஆக வேண்டும்"என் மூர்க்கத்துடன் பேசியது. சற்று நேரத்தில் அயர்ந்து தூங்கிவிட்டது. வளைக்குள் இருந்து வெளியே வந்தது எலி. மெதுவாக எருதின் அருகே வந்தது. எருதின் காதைக் கடித்துவிட்டு மீண்டும் வளைக்குள் சென்று ஒளிந்துகொண்டது.

எருது திருக்கிட்டு எழுந்தது. காதுவலித்தது. "அடேய்"என்று மறுபடியும் அலறியது. எலி உள்ளே இருந்தபடியே பேசியது."எருதே!நான் தெரியாமல் விழுந்துவிட்டேன் என்று உண்மையைச் சொன்னதுமே நீ பெருந்தன்மையுடன் என்னை மன்னித்திருக்க வேண்டும். ஆனால் நீயோ என்னைக் கொல்வேன் என்று விரட்டிக்கொண்டே வந்தாய். அதன் காரணமாகவே இப்போது நான் உன்னை அவமானப்படுத்தினேன்"என்றது.

எருதுக்குத் தனது தவறுஇப்போது புரிந்தது. பெருந்தன்மையால் அல்ல, இயலாமையால் அங்கிருந்து கிளம்பிச் சென்றது.



# வெள்ளாட்டு ஊர்வலம்

இற்றைக்கு சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இது யாழ்ப்பாணத்தில் நடந்தது. 1697ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் ஒல்லாந்தரின் ஆட்சியில் இருந்தது. அந்தக் காலத்தில் கண்டியிலிருந்த மன்னன் தனக்கு நல்லதொரு வெள்ளாடு வேண்டுமென்று கேட்டிருந்தான். சிறந்த வெள்ளாடுகள் அப்பொழுது யாழ்ப்பாணத்தில்தான்இருந்தன. ஒல்லாந்தரும் கண்டி மன்னனை மகிழ்விக்க யாழ்ப்பாணத்தில் சிறந்த ஒரு வெள்ளாட்டை வாங்கி ஒரு சிறு அடைப்புச் செய்து அதற்குள் விட்டு வைத்திருந்தனர். அதன் கொம்புகளிலும் கால்களிலும் வெள்ளிச் சலங்கைகள் தொங்கின. ஆட்டைக் கட்டியிருந்த கயிறு கூட பச்சை வெல்வெட் துணியினால் சுற்றப்பட்டு அலங்கரிக்கப்பெற்றிருந்தது. நல்லூரிலிருந்து அந்த ஆட்டைக் கொழும்புத்துறைக்குக் கொண்டுபோய் தோணியில் ஏற்றும்வரை ஒரு அலங்கார ஊர்வலம் நடத்தப்பட்டது. மூன்று பெரிய ஒல்லாந்த உத்தியோகத்தர்கள் முன்னே செல்ல ஒரு ஒல்லாந்தப் படை அணி வகுத்துச் சென்றது. 13 பீரங்கிக் குண்டுகள் தீர்க்கப்பட்டன. படைவீரர் மும்முறைதுவக்கு வெடித்தார்கள். வழி நெடுகப் பறை மேளம் முழக்கப்பட்டது.



பிற்காலத்தில் பத்திரகாளி கோவிலுக்கு பலிகொடுக்கக் கொண்டு சென்ற பல ஆண்டுக் கடாக்களுக்கும் இப்படியான ஊர்வலங்கள் நடத்தப்பட்டதைப் பலர் அறிவார்கள்.

# வௌவாலின் அபூர்வ சக்தி




உலகிலுள்ள பாலூட்டி விலங்குகள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துப் பார்த்தால் அவற்றில் பத்தில் ஒன்று, வௌவால்களாகத்தானிருக்கும். அப்படியானால் எத்தனை கோடி வௌவால்கள் உலகில் இருக்க வேண்டும்.

வௌவால்களுக்குப் பகலில் கண் தெரிவதில்லை என்று சொல்வார்கள். இவற்றுக்கு பார்வைப்புலன் அவ்வளவு முக்கியமல்ல. நல்ல இருள் சூழ்ந்த நேரத்திலும், இவை தமது பாதையில் குறுக்கிடும் மிகமிக மெல்லிய கம்பிகளைக்கூட முட்டி மோதாமல் விலக்கிப் பறக்கின்றன. கேளா ஒலிகளின் மீளதிர்வை உணர முடிவதால்தான் வௌவால்களினால் இது முடிகிறது.

## ஆண்பால், பெண்பால் இருபால்களுக்கும் பொதுவான பொதுப்பால் சொல்கள்

| | |
|---|---|
| 1.அறிவாளி | 2.விஞ்ஞானி |
| 3.மருத்துவர் | 4.விகடகவி |
| 5.நீதிபதி | 6.அதிபர் |
| 7.வழக்காளி | 8.எதிராளி |
| 9.குழந்தை | 10.பாவி |
| 11.குற்றவாளி | 12.புத்திசாலி |
| 13.மந்திரி | 14.புலவர் |
| 15.நோயாளி | 16.முட்டாள் |
| 17.உலோபி. | 18.மாணவர் |
| 19.சோம்பேறி | 20.வியாபாரி |
| 21.துரோகி | 22.அநாதை |
| 23.அகதி | 24.பிள்ளை |
| 25.தலைவர் | 26.மனிதர் |
| 27.உபகாரி | 28.ஞானி |
| 29.ஏழை | 30.அஞ்ஞானி |
| 31.கடவுள் | 32.ஒருவர் |
| 33.துறவி | 34.கணக்காளர் |
| 35.அரசதலைவர் | 36.தைரியசாலி |
| 37.பொருளாளர் | 38.ஊமை |
| 39.மாற்றுத்திறனாளி | 40.விவேகி |
| 41.அறிவிலி | 42.பரோபகாரி, |
| 43.வெகுளி | |
| 44.தற்குறி (படிப்பறிவில்லாதவர்) | |



# டார்வின்

## விஞ்ஞானி மட்டுமல்ல உணவுப் பிரியரும்கூட

பரிணாமக் கொள்கையை முதலில் கண்டுபிடித்தவர் விஞ்ஞானி டார்வின். இவர் ஒரு விசித்திர மனிதர். எதை எடுத்தாலும் ஆராய்ச்சி செய்து பார்ப்பார். விசித்திரமான மிருகங்கள் பறவைகளைப் பார்த்தால், அவற்றின் ருசி எப்படி இருக்குமென்பதை அறிய ஆவல் கொள்வார். அவற்றைச் சமைத்துப் புசித்துப் பார்ப்பார். இவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இருந்தபோது "கோர் முட்க்ளப்" என்ற சங்கத்தின் உறுப்பினராக இருந்தார். அச்சங்க உறுப்பினர்கள் வாரம் ஒருமுறை கூடுவர். அப்போது உணவுத் தெரிவு அட்டையில் இடம்பெறாத மிருகங்கள் பறவைகளைச் சமைத்துச் சாப்பிடுவர். டார்வின் ஒருமுறை ஒரு பழுப்புநிற ஆந்தை ஒன்றை அடித்துச் சாப்பிட்டார். அது உணவுகள் மீதிருந்த அவரது ஆர்வத்தையே கெடுத்துவிட்டது. ஒருமுறை இவர் பீகிளுக்குப் பயணமானார். அப்போது ஆர்மடில்லோ என்ற தென் அமெரிக்க விலங்கு ஒன்றைச் சாப்பிட்டுப் பார்த்தார். எலி, அணில் போன்ற கொறிக்கும் விலங்குகளில் ஒன்றான அகோடிஸ் என்பதைச் சுவைத்துச் சாப்பிட்டார். அதன் சுவைகளை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை என்று வெகுவாகப் பாராட்டினார். தென் அமெரிக்காவில் படகோனியாவில் அதிவேகமாக ஓடக்கூடிய சிறுத்தையை வேட்டையாடிச் சாப்பிட்டார். அங்குள்ள ரியா பறவையின் சுவை அவருக்குப் பிடித்திருந்தது. அதில், தான் சாப்பிட்டது போக மீதி இருந்த பகுதிகளை லண்டன் மிருகக்காட்சிச் சாலைக்கு அனுப்பி வைத்தார். அந்தப் பறவைக்கு ரியா "டார்வினி" என்று அவரது பெயரே சூட்டப்பட்டது. கலபகோஸ் என்ற இடத்தில் உடும்புகளையும், இராச்சத ஆமைகளையும் சாப்பிட்டு மகிழ்ந்தார். ஆமையின் சுவை அவருக்குப் பிடித்துப் போகவே 48ஆமைகளைப்பிடித்து பிகிளிலிருந்து திரும்பிச் செல்லும் பயணத்தில் சாப்பிட்டார். இப்படி ஒரு விசித்திரமான அதிசய தீனிக்கார விஞ்ஞானியை இதுவரை இந்த உலகம் பார்த்ததே இல்லை.





வர்ணம் தீட்டுவோம்



# விஜய் அன்ரனிக்கு வில்லனாக அர்ஜீன்

காளி படத்தை தொடர்ந்து விஜய் அன்ரனி தற்போது கணேசா இயக்கத்தில்'திமிருபிடிச்சவன்' என்றபடத்தில்நடித்துவருகிறார். இந்தப் படத்தைத் தொடர்ந்து அடுத்ததாக 'கொலைகாரன்' என்ற படத்தில் நடிக்கவிருக்கிறார். நடிகர் அர்ஜுன் இந்த படத்தில் வில்லன் கதாபாத்திரத்தில்நடிக்க இருப்பதாகத்தகவல்வெளியாகி இருக்கிறது.




இரக்கம் காட்டுறவனுக்கு இன்னொரு பேரு,
**இளிச்சவாயன்**

அடுத்தவங்க மேல அக்கறை காட்டுறவனுக்கு இன்னொரு பேரு, **அதிகப்பிரசங்கி**

தெரியாதவங்களுக்கு கூட மரியாதை தர்றவனுக்குப் பேரு,
**முட்டாள்**

அடுத்தவங்க சொல்றத நம்பி அவங்களுக்கு உதவி செய்யறவனுக்குப் பேரு,
**பொழைக்கத்தெரியாதவன்**

மக்கள் நல்லதுக்காக குரல் கொடுப்பவனெல்லாம்,
**வேலைவெட்டி இல்லாதவன்**

# ஒவ்வோர் அணிக்கும் பாடல்



**சென்னை சுப்பர் கிங்ஸ்:**
ராமன் ஆண்டாலும் ராவணன் ஆண்டாலும் எனக்கொரு கவலையில்லை... நான்தான்டா ஐபிஎல் ராஜா, தூக்குங்கடா வெள்ளியில கூஜா... வருஷா வருஷம் பைனல் போவோம், வந்து விசில போட்டுக்கடா.....

**மும்பை இந்தியன்ஸ்:**
பாட்சா பாரு.... பாட்சா பாரு... தொடை நடுங்கும் பாட்சா பாரு... பத்து டீமு சேர்த்து அடிச்சும் பால் வடியும் முகத்த பாரு... இவனுங்க பேருக்குள்ள இண்டியன்ஸ் இருக்கு உத்து பாருடா...

**கொல்கத்தா நைட் ரைடர்ஸ்:**
'பிட்ச தெரிஞ்சிக்கிட்டாங்க, பிச்சு உதறிட்டாங்க... கண் மணி என் கண்மணி...
நாளும் ஓடிடுச்சு பாலும் தேய்ஞ்சிடுச்சு கண்மணி என் கண்மணி... நேத்து நாங்க மன்னர், இப்போ ஆக மாட்டோம் வின்னர்...

**ராஜஸ்தான் ரோயல்ஸ்:** '
மரத்த வச்சவன் தண்ணி ஊத்துவான்... ஓ ஷில்பா கலங்காதே... டிராவிட் இல்லாட்டி விளங்காதே...

**சன் ரைசர்ஸ் ஹைதராபாத்:**
வெற்றி நிச்சயம், இது வேத சத்தியம், கோப்பை வெல்வதே, நாங்கள் கொண்ட லட்சியம், சென்னையை பைனலில் சென்று பார்த்தோம், அசந்தால் மேட்சில் தோத்துபுட்டோம்...

**டெல்லி டேர் டெவில்ஸ்:**
ராஜா என்பார் மந்திரி என்பார் ராஜ்ஜியம் இல்லை ஜெயிக்க... ஒரு பேட்ஸ்மேனும் இல்லை அடிக்க... ஒரு வின்னும் இல்லை, ஒரு ரண்ணும் இல்லை'

**ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர்:** '
விடுகதையா இந்த டோர்னமென்ட்... சம்பளம் ஆகுமா செட்டில்மென்ட்... அடிக்க முடியாத மக்கலமும், ஆல் அவுட் ஆகும் டீம் ரயிலும், ஏன் என்று கேட்க நாதியில்லை, கோக்லி இருந்தும் நீதியில்லை....






**மேடம்:** திட்டமிட்டு செயல்படுவது அவசியம். பிறரது விமர்சனத்தை பொருட்படுத்த வேண்டாம். தொழிலில் நிலுவைப் பணி நிறைவேற்றுவது நல்லது.

**இடபம்:** பரந்த மனப்பான்மையுடன் செயல்படுவீர்கள். நல்லவர்களின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும்.

**மிதுனம்:** உறவினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தாமதமான பணியை புதிய உத்தியால் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி ஏற்படும்.

**கடகம்:** நற்செயலுக்கான பாராட்டு வந்து சேரும். மனதில் உற்சாகம் மேலோங்கும். தொழில், வியாபாரம் செழிக்க புதிய யுக்தி பயன்படுத்துவீர்கள். மிதமான பணவரவு கிடைக்கும்.

**சிங்கம்:** பணி நிறைவேற பொறுமை அவசியம். தொழிலில் உள்ள குறைகளை பிறரிடம் விவாதிக்க வேண்டாம். உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும்.

**கன்னி:** பிறர் பாராட்டும் வகையில் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சியால் கூடுதல் பணவரவு கிடைக்கும். வீடு, வாகனத்தில் நவீன மாற்றம் செய்வீர்கள்.

**துலாம்:** குடும்ப பிரச்னைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். தொழிலில் கடின உழைப்பு தேவைப்படும். சீரான பணவரவு கிடைக்கும். பணவரவு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** நேர்த்தியுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் அளப்பரிய வளர்ச்சி ஏற்படும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும்.

**தனுசு:** எவரிடமும் தற்பெருமை எண்ணத்துடன் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உருவாகிற இடையூறை தாமதமின்றி சரிசெய்வது நல்லது.

**மகரம்:** இஷ்ட தெய்வ வழிபாட்டால் நன்மை காண்பீர்கள். வெகுநாள் மனதில் இருந்த சஞ்சலம் தீரும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்..

**கும்பம்:** அவமதித்தவர் அன்பு பாராட்டுகிற நிலை உருவாகும். தொழில், வியாபார வளர்ச்சியால் புதிய சாதனை படைப்பீர்கள். ஆதாயம் பன்மடங்கு உயரும்.

**மீனம்:** நண்பரின் செயலை குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத குறுக்கீடு வரலாம். பொறுமையுடன் செயல்படுவதால் சிரமம் விலகும்.

# சுடோக்கு

என் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 7 | | | 4 | |
| | 2 | 8 | | 6 | 3 | | | |
| | | | | | | 8 | 3 | |
| 8 | | | 6 | | 4 | | | |
| | | 5 | 1 | | 7 | 6 | | |
| | | | 5 | | 2 | | | 8 |
| | 5 | 3 | | | | | | |
| | | | 4 | 5 | | 7 | 1 | |
| | 7 | | | 1 | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | 7 | 2 | 8 | 9 | 5 | 3 | 1 |
| 5 | 3 | 2 | 7 | 1 | 6 | 8 | 4 | 9 |
| 8 | 1 | 9 | 5 | 3 | 4 | 7 | 2 | 6 |
| 1 | 7 | 4 | 6 | 9 | 2 | 3 | 5 | 8 |
| 6 | 9 | 3 | 8 | 7 | 5 | 4 | 1 | 2 |
| 2 | 5 | 8 | 1 | 4 | 3 | 6 | 9 | 7 |
| 3 | 2 | 6 | 9 | 5 | 8 | 1 | 7 | 4 |
| 7 | 8 | 5 | 4 | 2 | 1 | 9 | 6 | 3 |
| 9 | 4 | 1 | 3 | 6 | 7 | 2 | 8 | 5 |

நேற்றைய விடை

பாத்து தம்பி மூளை சூடாகி
கசிஞ்சு காது வழியா
வந்திடப் போகுது..





முடியை நீளமா வளத்துக்கிட்டு
ஆணா பெண்ணான்னு தெரியாம
குழப்பி மண்டையை காய விட்டது
பத்தாம

இப்போ முன்னே எது பின்னே எதுன்னு
கண்டுபிடிக்கிறதுக்குள்ள
நாக்கு தள்ளுதுடா...!!



**வந்தியத்தேவன்@kalasal**
தந்தைக்கும் மகனுக்குமான இடைவெளியையும் சேர்ததே நிரப்பிவிடுகிறது, பேரனுக்கும் தாத்தாவுக்குமான உறவு!

# ‘எல்.ஜி ஜ.பி.எஸ்’ அல்ட்ரா ‘எச்.டி 4கே’ தொலைக்காட்சி சந்தைக்கு அறிமுகம்

## அதியுச்ச இரசனை அனுபவத்தை கொண்டுள்ளது

அதியுச்ச இரசனை அனுபவத்தை பார்வையாளருக்கு வழங்கும், ‘எல்.ஜி ஜ.பி.எஸ்’ அல்ட்ரா ‘எச்.டி 4கே’ தொலைக்காட்சியை அபான்ஸ் சந்தைக்கு அறிமுகம் செய்துள்ளது.

இந்த புதிய அறிமுகம் குறித்து கருத்துரைத்துள்ள அபான்ஸ்,

“ 4கே ரெசலூசன் கொண்ட 43 அங்குலம் முதல் 79 அங்குலங்கள் வரையான ‘எல்.ஜி ஜ.பி.எஸ்’ அல்ட்ரா ‘எச்.டி 4கே’ தொலைக்காட்சிகளை சந்தையில் பெற்றுக்கொள்ள முடியும். இது 8.3 மில்லியன் பிக்கசல் அளவை கொண்டுள்ளதோடு, ‘புல் எச்.டி’ தரத்தை விடவும் ஒளியமைப்பு 4 மடங்கு அதிக மென்மையாக காணப்படுகிறது. ‘எல்.ஜி’ விசேடமாக உற்பத்தி செய்து கொண்டுள்ள கிரிஸ்டல் தெளிவைக் உறுதிசெய்யும் ‘ஜ.பி.எஸ்’ 4கே குவான்ரம் டிஸ்பிளே’ ஒன்றை இதில் காண முடியும். அதேபோன்று இது கொண்டுள்ள கிடைமட்ட பிக்சல் சரிசெய்யப்பட்டுள்ளதால் 45 பாகை கோணத்திலிருந்து பார்த்தாலும் நேரடிக் காட்சிகளை எந்தவித வேறுபாடுமின்றி பார்க்க முடிகிறது.

‘எல்.ஜி ஜ.பி.எஸ்’ அல்ட்ரா ‘எச்.டி 4கே’ தொலைக்காட்சியில் புதிய அறிமுகமாக ‘தின் கியூ ஏ.ஜ பிளாற்போம்’ இனைச் சுட்டிக்காட்ட முடியும். இதன்போது இரசனைக்கும் உங்கள் தெரிவிக்கும் ஏற்ற வகையில், அப்ஸ் மற்றும் ஏனைய செட்டிங்ஸ் இனை மிக

“ தொலைக்காட்சி, பார்வையாளர்களை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு மிகத் தெளிவான ஒளியமைப்பு மற்றும் தரத்தை கொண்டிருக்க வேண்டியது முக்கிய அம்சமாகும். அந்தவகையிலே அபான்ஸ் அறிமுகம் செய்துள்ள ‘எல்.ஜி ஜ.பி.எஸ்’ அல்ட்ரா ‘எச்.டி 4கே’ தொலைக்காட்சி சிறந்த அனுபவத்தை முழுமையாக பெற்றுத் தருகின்ற மாதிரியாக அமைந்துள்ளது. வேறு எந்தவொரு தொலைக்காட்சியுடனும் ஒப்பிட முடியாத கவர்ந்திழுக்கும் கண்கவர் ஒளியமைப்புடன் நவீனமயப்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் இந்த தொலைக் காட்சியில் காணப்படுகிறது.




இலகுவாகப் பயன்படுத்த முடியும். ‘வெப் ஓ.எஸ் 3.0’ ஊடாக போதுமானளவு ஒன்லைன் வசதியைப் பயன்படுத்தி காட்சிகளைப் பார்ப்பதற்குரிய வாய்ப்புகள் உள்ளன. ‘யூரியூப்’, ‘நெற்பிளிக்ஸ்’, ‘குலு’, ‘அமேசன் பிறைம்’ உள்ளிட்ட இணையத்தள உள்ளீடுகள் பலவற்றுக்கு ‘எல்.ஜி’ இல் மாத்திரம் காணக்கூடிய ‘மெஜிக் ரிமோர்ட் கண்ட்ரோல்’ ஊடாக மிக இலகுவாக உள்நுழைவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

‘எல்.ஜி ஜ.பி.எஸ்’ அல்ட்ரா ‘எச்.டி 4கே’ தொலைக்காட்சி பல ‘எச்.டி.ஆர்’ அமைப்புகளில் செயற்படுகின்றது. இவற்றின் ஊடே வர்ணங்கள் நேர்த்தியான முறையிலும், மிகச்சிறந்த பிரகாசத்துடன் பெற்றுக்கொள்ள முடியும். ஒளி, ஒலி மூலமான அனுபவம் பார்வையாளருக்கு உகந்ததாக அமையும். அருகாமையில் உள்ள அபான்ஸ் காட்சியறைக்கு சென்று ‘எல்.ஜி ஜ.பி.எஸ்’ அல்ட்ரா ‘எச்.டி 4கே’ தொலைக்காட்சியின் அதிவிசேடத்துவமான சிறப்பம்சத்தை உணருங்கள்.” - என்றுள்ளது. (ஓ)


# இணைய வங்கிச் சேவையை நவீனமயப்படுத்தியது செலான் வங்கி

## சுங்கத் திணைக்களத்துக்குரிய கொடுப்பனவு கட்டமைப்பு அறிமுகம்

சிறந்த் டிஜிற்றல் வங்கியியல் தீர்வுகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கி, தனது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் செலான் வங்கி இணைய வங்கிச் சேவை வசதிகளை மேம்படுத்தியுள்ளது.

தனிநபர் மற்றும் கூட்டாண்மை வாடிக்கையாளர்கள் இலங்கை சுங்கத்துடன் இலகுவான முறையில் இணையத்தினூடாக கொடுப்பனவு செயற்பாடுகளை மேற்கொள்வதற்குரிய கட்டமைப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இதனூடே பாரம்பரிய கொடுப்பனவு நடைமுறையை வங்கி மாற்றியமைத்துள்ளதுடன் தனது வாடிக்கையாளர்களுக்கு தன்னியக்கமான, உடனடியாக பதிவேற்றம் செய்யப்படும் இணையக் கொடுப்பனவுத் தீர்வுக் கிடைக்கப் பெற்றுள்ளது.



புதிய கட்டமைப்பினூடாக இலங்கை சுங்கத்துக்கு செலுத்தப்படும் கட்டணங்களுக்கு கையாளல் கட்டணமாக ரூபாய் 50 மட்டுமே அறவிடப்படுகிறது. பாரம்பரியமாக அறவிடப்படுகின்ற காசாளார் ஆணைக் கட்டணமான ரூபாய் 250 இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

‘லங்கா கிளியர்’ இன் ‘லங்கா பே’ இணையக் கொடுப்பனவு கட்டமைப்பினூடாக இது வலுவூட்டப்படுவதுடன் செலான் வங்கியின் இணைய வங்கிச் சேவையூடாக கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்களில் அது இலங்கை சுங்கத்தின் வங்கிக் கணக்கில் ‘லங்கா பே’ இன் ‘சி.ஈ.எவ்.ரி.எஸ்’ கட்டமைப்பினூடாக நேரடியாக வைப்புச் செய்யப்படுகிறது. இது செலவு குறைந்த உயர் பாதுகாப்பான இலத்திரனியல் கொடுப்பனவு வலையமைப்பாக விளங்குவதுடன், ஒப்பற்ற வங்கி அனுபவத்தை தனது வாடிக்கையாளர்களுக்கு சௌகரியமான முறையில் வழங்குவதற்குரிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இந்த திட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள செலான் வங்கியின் செயற்பாடுகளுக்கான பதில் பொது முகாமையாளர் மலிக் விக்ரம நாயக்க,

“எமது தனிநபர் மற்றும் கூட்டாண்மை வாடிக்கையாளர்கள், கிளை நிலையம் ஒன்றுக்குச் செல்லாமல் சௌகரியமான முறையில் தமது கொடுக்கல் வாங்கல்களை தாமே மேற்கொள்வதனை வலுவூட்டும் வகையிலான தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்யும் திட்டத்தின் ஒரு அங்கமாக இந்த நடவடிக்கை அமைந்துள்ளது.

இந்தக் கொடுப்பனவுத் தீர்வை அறிமுகம் செய்வதற்கு முன்பாக, தனியார் வங்கிகளில் கணக்கை பேணியிருந்த ஏற்றுமதியாளர்கள் அல்லது இறக்குமதியாளர்கள் சிரமமான படிமுறையையே பின்பற்ற வேண்டியிருந்தது. தமது வங்கியிலிருந்து காசாளர் கட்டளையை பெற்று, அதனை இரு அரச வங்கிகளுக்கு கொண்டு சென்று மற்றுமொரு கொடுப்பனவு ஆணையை இலங்கை சுங்கத்துக்காக பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை காணப்பட்டது.

செலான் வங்கி நவீன பாதுகாப்பு மெருகேற்றங்களை பதிவு செய்துள்ளது. அதனூடாக மேற்கொள்ளப்படும் சகல டிஜிற்றல் கொடுக்கல் வாங்கல்களிலும் உயர் பாதுகாப்பு மற்றும் தங்கியிருக்கக்கூடிய தன்மை போன்றன உறுதி செய்யப்படுகின்றன. டிஜிற்றல் மயப்படுத்தல் செயன்முறைக்கமைய நவீன தொழில்நுட்பங்களை செலான் வங்கி அறிமுகம் செய்து வருவதுடன், அதனூடாக பாரம்பரிய கொடுக்கல் வாங்கல் முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி வங்கியியல் துறையில் மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது.” - என்றார். (ஓ)


COLOMBO STOCK EXCHANGE CSE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 0212221455

8/6/2018 www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | -8.70 | 6,354.92 | 6,363.62 |
| S&P SL20 | -17.83 | 3,539.93 | 3,557.76 |
| வியாபாரப்புரள்வு | | 326,173,920 | 545,704,770 |
| உள்நாடு:- கொள்வனவு | | 253,647,312 | 419,313,408 |
| விற்பனை | | 266,109,008 | 304,999,264 |
| வெளிநாடு:-கொள்வனவு | | 72,526,616 | 126,391,384 |
| விற்பனை | | 60,064,920 | 240,705,520.00 |




| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| சேவ்ரோன் லூப்பிரிக்கன் | LLUB.N | 77.00 | 556,904 | 41,818,354 |
| சம்பத் வங்கி | SAMP.N | 317.00 | 115,767 | 36,754,052 |
| டோக்கியோ சிமெண்ட் | TKYO.N | 38.50 | 716,416 | 27,210,005 |
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.N | 156.50 | 142,458 | 22,353,190 |
| அக்ஸஸ் இஞ்சினியறிங் | AEL.N | 16.80 | 1,260,001 | 21,219,399 |
| கார்கில்ஸ் சிலோன் | CARG.N | 200.00 | 105,502 | 21,100,190 |
| கொமர்சியல் வங்கி | COMB.N | 128.00 | 160,744 | 17,858,829 |
| லயன் பிரெவெரி சிலோன் | LION.N | 580.00 | 24,741 | 14,233,496 |
| டி எப் சி சி வங்கி | DFCC.N | 112.50 | 112,757 | 12,683,488 |
| நேஷனல் டெவலப்மென்ட் வங்கி | NDB.N | 135.00 | 58,682 | 7,921,856 |

பங்குலாம் அறிவித்தல்

சிற்றிசன் டெவலப்மென்ட பைனான்ஸ் ரூபா 5.00

ODEL ரூபா 0.26

செங்கடகல பைனான்ஸ் ரூபா 0.95

Call 0777 822 014 / 0777 105 205

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 298 |
| பரிமாற்றத்தில் | 228 |
| விலை உழைப்பு | 10.7 |
| புத்தகப்பெறுமதி | 1.3 |
| பங்குலாப விளைவு | 3 |

## குடாநாட்டு...

னேஸ்வர னுடன் இணைந்து செயற்பட இராணுவம் எப்போதும் தயாராகவே உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இராணுவத்தின் மனித நேயத் திட்டங்களுக்கான நாடளாவிய இணைப்பாளரான தான் யாழ்ப்பாண மாவட்டக் கட்டளைத் தளபதியை நேற்று வெள்ளிக்கிழமை வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார் என்று இணைப்பாளர் ஏ.செல்வா அனுப்பிவைத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படைத் தரப்பினரின் உதவியுடனேயே தமிழர் பிரதேசங்களில் நில ஆக்கிரமிப்புகள் இடம்பெறுகின்றது என்று யாழ்ப்பாணத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற பொது நிகழ்ச்சி ஒன்றில் வைத்து வட மாகாண முதலமைச்சர் ஓய்வு நிலை நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் நேரடியாகக் குற்றம் சுமத்தி இருந்தார். இராணுவம் தொடர்பாக நீண்ட ஒரு குற்றப் பத்திரத்தையும் வாசித்திருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கும் வகையில், இராணுவம் தொடர்பான எதிர்மறை எண்ணங்களைத் தமிழ் அரசியல்வாதிகள் கை விடல் வேண்டும் என்று கட்டளைத் தளபதி கோரினார் என அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளை தமிழ் அரசியல்வாதிகள் அரசியல் நோக்கங்களுக்காக முன்வைப்பது அழகு அல்ல. விக்னேஸ்வரன் ஐயாவை நாம் மதிக்கின்றோம். அவருடன் சேர்ந்து செயற்பட எப்போதும் த்யாராகவே உள்ளோம். ஆயினும் அவரைப் போன்ற கனவான்களும் உண்மைகளைத் தீர விசாரித்து அறியாமல் அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளை சுமத்துவது கவலை தருகின்றது" என்றும் இராணுவத் தளபதி கூறினார் என அந்தச் செய்திக் குறிப்பு மேலும் தெரிவித்தது.

"தமிழர் பிரதேசங்களில் தமிழ் மக்களின் நியாயமான விருப்பங்களுக்கு எதிராக இராணுவம் ஒருபோதும் செயற்படாது. மேலும் தமிழர் பிரதேசங்களில் மனித நேயச் செயற்பாடுகளை நாம் முன்னெடுத்து வருவதற்குப் பின்னால் வேறு விதமான எந்த உள்நோக்கங்களும் கிடையாது என்பதை தமிழ் அரசியல்வாதிகளுக்கும், தமிழ் மக்களுக்கும் இத்தருணத்தில் சொல்லி வைக்கின்றேன்" என்று இராணுவத் தளபதி மேலும் கூறினார் எனவும் அந்தக் குறிப்புத் தெரிவிக்கிறது.

(உ-21)

**வாடகைக்குண்டு**

திருநெல்வேலியில் வீடும்.
அறைகளும் வாடகைக்குண்டு.
**077 586 2975/076 998 0837**

(CS 17303) (04.17)

**விற்பனைக்கு**

சனல் ஆடுகளும், வெள்ளாடுகளும் மற்றைய ஆடுகளும் கன்றுடன் கூடிய மாடும் விற்பனைக்கு உண்டு. **- 0771016407**

**தவறவிடப்பட்டது** பலாலி வீதி, உரும்பிராய், மருதனார்மடம் வழி பாதையில் அனீஸ் மொஹமட் என்பவருடைய NIC லைசன்ஸ் மற்றும் ஆவணங்கள் உள்ளடங்கிய பேர்ஸ் தவறவிடப்பட்டது. கண்டெடுப்பவர்கள் தொடர்புகொள்க. **077 032 5889, 0777 444 225**

**பெயர் மாற்ற அறிவித்தல்**

இல.08, மகேந்திரபுரம் கொழும்புத்துறை யாழ்ப்பாணத்தில் வசிக்கும் **மரியா அல்போன்ஸ் லிகோரி** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **அல்பிறட்** என மாற்றம் செய்ய உள்ளதால் இலங்கை ஜனநாயகக் குடியரசு மக்களுக்கு அறியத்தருவதுடன் இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் **சி. அல்பிறட்** என கையொப்பமிடுவேன் என்பதை அறியத்தருகின்றேன்.

(உ. 17305) (13.17)

**சி. அல்பிறட்**

**தேவை**

ஊர்ச்சேவல் 1Kg 650,
ஊர்ப்பேடு 1Kg 500 படி
வான்கோழி 1Kg 550 க்கு
கொள்வனவு செய்யப்படும்.
**தாசன் பாம் - 077 312 7498**

**வேலையாள்கள் தேவை**

பிரபல்ய நிறுவனங்களின் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கு
- பணம் வசூலிப்பவர்
- அலுவலக பணியாளர்
- பொருள்களை ஏற்றி இறக்குபவர்
- சாரதி

போன்றவர்கள் தேவைப்படுகின்றனர்.

**முகாமையாளர் 133, பலாலி வீதி, கந்தர்மடம்.**
**077 300 0299 natheradistributors@gmail.com**

(CS 17319) (4.17)

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 813
சீட்டிழுப்பு திகதி 2018.06.07 வியாழக்கிழமை
I 32 40 62 65
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 41,674,552/-
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 08.06.2018 | வெற்றி வாரம் 2309 | வர்ணம் சிவப்பு
விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 09 22 28 35
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 24, 50, 428/=
2018.06.10 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

கோடிபதி சனிதா
சீட்டிழுப்பு வாரம்: 299
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2018.06.08
அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 82,747,293/-
O 05 36 44 74
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 275
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2018.06.08
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 72,074,245/-
வெற்றி இலக்கங்கள்
21 30 63 70 Y
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



பிறப்பு 10.07.1928 இறப்பு 10.05.2018

### அமரர் கந்தையா தர்மலிங்கம்

(பிரான்பற்று, பண்டத்தரிப்பு)
09.06.2018

கடந்த (10.05.2018) வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் கந்தையா தர்மலிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (09.06.2018) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்வில் தாங்களும் தங்கள் குடும்பமும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் அன்னாரின் மரணச் செய்தி அறிந்து நேரடியாகச் சமுகமளித்தவர்களுக்கும் தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

077 020 4756, 077 444 5314, குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 03 11 1936



இறப்பு 08 06 2018

### அம்பலவாணர் நடராஜா

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் நடராஜா நேற்று (08.06.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கரந்தன் வீதி,**
**நீர்வேலி தெற்கு, நீர்வேலி.**

(CS 17320/15/17)

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 890 5133**

## ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம் அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலய சீட்டிழுப்பு முடிவுகள்

1ஆம் பரிசு : 2079
2ஆம் பரிசு : 1627
3ஆம் பரிசு : 3115
ஆறுதல் பரிசு : 610, 669, 353, 4284, 75, 1084, 2116, 2995, 1265, 1217

**தொடர்பு - 077 076 0511, 077 113 4496**

## VACANCIES


பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.

- Room Attendants
- Receptionists
- Waiters
- வயதெல்லை - 19 - 30

The Thinnai
Rest Relax Reunite

Please Send Your CV's To
hr@thethinnai.com or by post The Thinnai Hotel
86, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 021 203 0400

## மரண அறிவித்தல்



### முருகேசு தயாபரன்

**(உரிமையாளர், பொன்சேகா ஒயில் ஸ்ரோர்ஸ்)**

யாழ்ப்பாணம், நல்லூரைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, மெசஞ்ஜர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த முருகேசு தயாபரன் அவர்கள் 07.06.2018 வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற முருகேசு பூரணம் தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற கந்தையா(சிவசாமி) நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற லோகநாயகி அவர்களின் அன்புக்கணவரும் லோஜினி(லண்டன்), சௌமியா, வாசுகி(லண்டன்), ஐஸ்வரியா ஆகியோரின் பாசமிகு தகப்பனும் தயாகரன், ராகுலன், நவக்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற தில்லைநாயகி, காலஞ்சென்ற சிவலிங்கம், சிவானந்தம், நித்தியலட்சுமி, கலைமகள், பரமகுரு, நடேசன், சத்தியபாமா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் நல்லநாதன், காலஞ்சென்ற கனகசபை, நல்லகுருநாதன், காலஞ்சென்ற சற்குணராஜா, புஸ்பராணி, நிரைஞ்சனா, சிவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் கௌரி(உமா), விஜி(கெங்கா), சாந்தினி, சரவணகுமார்(கண்ணன்), திருமகள், ராஜலிங்கம், கிருத்திகா, சதிஸ், நித்தியா, கார்த்திக் ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவாதரன், சிந்துயா, கரிதரன், சௌமிதரன், ஆரணி ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் வகின், யசுகின், மிர்சா, யனுஸ்கா, லக்சின் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார். அன்னாரது பூதவுடல் 09.06.2018 இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் மாலை 7.00 மணிவரை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 10.06.2018 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பொரளை இந்து மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் : மகள்மார், மருமகன்மார்.**
**தொ.பே : 0777 434041, 0114 862447**

# உடல் பருமனை குறைக்கும் யோகா



பொதுவாக உடல் எடையை குறைக்க உணவுக் கட்டுப்பாட்டுடன் தினமும் யோகாப்பயிற்சிகளை செய்து வருவது பக்க விளைவுகள் இல்லாத, அதிகப் பணச் செலவு இல்லாத ஒரு சிறந்த வழியாக உள்ளது.

உடல் எடையைக் குறைக்க ஆசனங்களுள் சூரிய நமஸ்காரம் சிறந்த பயிற்சி ஆகும். பிராணாயாமத்தில் சூரிய நாடியை நன்கு இயங்கச் செய்து (வலது நாசியில் மூச்சை அதிகமாக இயங்கச் செய்து) தேவையற்ற கொழுப்பைக் கரைத்து, உடலை லேசாக்கி சுறுசுறுப்புடன் செயல்படச் செய்கிறது.

ஹைபோதாலமஸில் உள்ள உணவு மையம், திருப்தி மையம் கட்டுப்பாடுடன் செயல்பட சிரசாசனம், சர்வாங்காசனம் போன்ற ஆசனப்பயிற்சிகளும், நாடி சோதனா போன்ற பிராணாயாம பயிற்சிகளும் தியானமும் உதவுகிறது.

தைராய்டு கோளாறினால் வரும் உடல் பருமனை குறைக்க சர்வாங்காசனம், ஹலாசனம், சிவலிங்காசனம் போன்ற ஆசனப்பயிற்சிகள் உதவுகின்றன.

மருந்து, மாத்திரைகளினால் உடலில் உண்டான கழிவுகளை அகற்ற பிராணாயாமமும், கிரியா பயிற்சிகளும் பயன்படுகின்றன.

## இது புதுசு



ஆண்களுக்கான காலணி வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

# கண்களைப் பாதுகாக்கும் இயற்கை வழிமுறைகள்



எமது கண்களை அழகாகவும் ஆரோக்கியமாகவும் வைத்துக் கொள்ள வீட்டில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டே எளிமையான வழிமுறைகளை பின்பற்றலாம். வீட்டிலிருந்தே கண்களைப் பாதுகாக்கும் எளிமையான இயற்கை வழிமுறைகளைப் பார்க்கலாம்.

1. அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரை, வெள்ளரிக்காய்தான் கண்களுக்கு சிறந்த மருத்துவம். கண்களை மூடிக்கொண்டு, நறுக்கிய வெள்ளரிக்காயை கண்களின் மேல் வைத்துக்கொள்ள வேண்டும். இதன்மூலம் கருவளையம் நீங்கி, கண்கள் புத்துணர்ச்சியாக இருக்கும்.
2. வெள்ளரிக்காய் பாதி, உருளைக்கிழங்கு பாதி மஞ்சள் தூள் சிறிதளவு, ஒரு எலுமிச்சை எடுத்துக்கொள்ளவும். வெள்ளரிக்காயையும் உருளைக்கிழங்கையும் துருவிக்கொள்ளவும். அதனுடன் சிறிதளவு மஞ்சள் தூள், எலுமிச்சை சாற்றை கலந்துகொள்ளவும். பின்னர், கண்களின் மேல் ஒரு கொட்டன் துணியை வைத்துக்கொண்டு அதன்மேல் இந்தக் கலவையை பூசிக்கொள்ளவும். 15 நிமிடங்கள் வைத்திருந்து கண்களைக் கழுவவும். (இவை, நேரடியாகக் கண்களின் மேல் படக்கூடாது). இவ்வாறு பயன்படுத்துவதால், கண்கள் புத்துணர்ச்சியுடன் இருக்கும்.
3. ஸ்டிராபெர்ரி பழத்தை மெல்லியதாக ஸ்லைஸ் செய்து, கண்களின் மேல் நேரடியாக வைத்துக்கொள்ளவும். இது, கருமையை நீக்கி, புத்துணர்ச்சியை அளிக்கும்.
4. கொட்டன் பந்துகளை எடுத்து, அவற்றைக் குளிர்ந்த பாலில் நனைத்து, கண்களைச் சுத்தப்படுத்த வேண்டும். இதன் மூலம் கண்களில் உள்ள அழுக்கை நீக்கலாம்.
5. ரோஸ் வாட்டரை காட்டனில் நனைத்து கண்களை துடைத்து வந்தால், கண்களுக்குப் பொலிவு கிடைக்கும். புத்துணர்ச்சி யுடன் இருக்கும்.
6. ஒரு கடிண்டி சோம்பை ஒரு கப் தண்ணீரில் நன்றாகக் கொதிக்க வைக்கவும். அந்தத் தண்ணீரால் முகத்தைக் கழுவி வந்தால், கண்களின் சோர்வு நீங்கும்.

## நீதிமன்றில்...

13 வயதுச் சிறுமி ஒருத்திக்குச் சட்டத்துக்குப் புறம்பாகக் கருக்கலைப்புச் செய்தார் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் இருந்த பெண்ணே நீதிமன்றத்தில் அமர்வு நேரத்தில் புகை பிடித்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். கருக்கலைப்புக் குற்றத்துக்காக கைது செய்யப்பட்ட அவர் நேற்று மன்றில் முற்படுத்தப்பட்டிருந்தார். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்ற பதில் நீதிவான் உத்தரவிட்டார். அதன்படி அந்தப் பெண் நீதிமன்றிலுள்ள தற்காலிக கைதிகள் தடுப்பு அறையில் தடுத்து வைக்கப்பட்டார். நீதிமன்றில் ஏனைய வழக்குகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன.

திடீரென கைதிகள் கூண்டிலிருந்து புகை வெளிக்கிளம்பத் தொடங்கியது. அங்கு நின்றவர்கள் பரபரப்பாகினர். பொலிஸார் அந்தக் கூண்டை எட்டிப் பார்த்தபோது அங்கு சந்தேகநபரான பெண் அமர்ந்திருந்து பீடி புகைத்தவாறு இருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அது நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. மன்றின் உத்தரவுப்படி அந்தப் பெண் கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து 5 பீடிகளும் தீப்பெட்டியும் பெண் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

அவருக்கு எதிராக மற்றொரு வழக்குப் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அந்தக் குற்றச்சாட்டிலும் அவரை எதிர்வரும் 11ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவு பிறப்பித்தது.

(உ-4,9)

## ஆலயங்களில்...

பின்னணியில் சாதிய முரண்பாடே இருந்தது என்று சமூக வலைத்தளங்களில் தாறுமாறாக் கருத்துக்கள் பகிரப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் நேற்றுக் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள சைவ மகா சபையின் தலைமையகத்தில் அதன் பொதுச்செயலாளர் ப.நந்தகுமார் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதில் சைவத் திருச்சபையினர், சைவ மகாசபையினர், மதத்தலைவர்கள் கலந்துகொண்டு கருத்துக்களைப் பகிர்ந்தனர்.

ஆலயங்களில் காணப்படும் சாதிப் பாகுபாட்டைக் கட்டுப்படுத்த எந்த அமைப்புகளும் எந்தவொரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. எந்த ஒரு ஆலயத்திலும் வழிபட வருபவர்களைப் பிறப்பினை அடிப்படையாகக் கொண்டு தடுக்கக் கூடாது. அவ்வாறான ஆலயங்களை ஒட்டுமொத்தமாக அனைவரும் ஒன்றிணைந்து புறக்கணிக்க வேண்டும். அவற்றின் மீது சட்ட நடவடிக்கைகயையும் எடுக்கவேண்டும்.

சைவ சமயத்தார் பலரும் மதம் மாறிச் செல்வதற்கு முக்கியமான காரணம் இந்தச் சாதிப் பாகுபாடுதான். சாதி பார்ப்பதனால்தான் பலரும் ஆலயங்களை அணுகுவதைத் தவிர்க்கின்றனர் இதனை இல்லாமலாக்க நாம் அனைவரும் ஒன்றித்து செயற்படவேண்டும் என்று கலந்துரையாடலில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டது.

(உ-21,114)

## போராட்டக்...

யாழ்ப்பாணம், ஜூன் 9

கடற்றொழில்நீரியல்வளத்திணைக்களத்தின் முன்பாக நடைபெற்ற போராட்டத்தின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும், தமிழ்த்தேசியமக்கள்முன்னணியினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இதனால் போராட்டத்தில் சிறு சலசலப்பும் ஏற்பட்டது.

இவர்களின் சச்சரவைப் பார்த்துக் கோபமான ஒருவர், “கடலட்டை பிடிப்பவர்கள் அமைத்த வாடிகளைப் பிடுங்குவதற்கு எந்த அரசியல்வாதிகள் தயாராக இருக்கின்றீர்கள்? இப்போதே அங்கு போவோம். யார் வருகின்றீர்கள்?” என்று கேள்வி எழுப்ப, மோதிக் கொண்ட அரசியல்வாதிகள் ‘கப்சிப்பாகினர்’.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில், கடற்றொழில்நீரியல்வளத்திணைக்களத்தை முற்றுகையிடும் போராட்டம் நேற்று நடத்தப்பட்டது.

காலை 7.15மணிக்கு ஆரம்பமான போராட்டத்தில், காலை 8.30 மணியளவில் வந்து இணைந்து கொண்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலர் கஜேந்திரன், அங்கு வந்து சிறிது நேரத்தில் ஊடகங்களுக்கு பேட்டி கொடுத்தார்.

“அரசுக்கு முண்டுகொடுப்பவர்கள்” என்று அவர் கூறும்போது, அங்கு நின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர், கஜேந்திரனைப் பார்த்து, “2009ஆம் ஆண்டுக்கு முன்னர் நீங்களும் இதைத்தானே செய்தீர்கள். உங்கள் தம்பி எப்படி வெளியில் வந்தவர் என்று தெரியும்” என்று கூறினார்.

இதனையடுத்து கஜேந்திரனுக்கும், முன்னாள் பிரதேச சபை உறுப்பினருக்கும் இடையில் கடும் வாய்த்தர்க்கம் உருவானது. கைகலப்புக்கான நிலமை வரை சென்றது. ஏனையோரின் தலையீட்டால் அது தடுக்கப்பட்டது.

“போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தோர், போராட்டத்தைக் குழப்பவேண்டாம், உங்கள் அரசியலை வெளியில் வைத்துக் கொள்ளுங்கள். தாளையடி எங்கே இருக்கின்றது என்றே தெரியாதவர்கள் எல்லாம் வந்து இங்கு பேசிக் கொண்டிருக்கின்றனர்” என்று உரத்த குரலில் தெரிவித்தனர். (உ-5,8,26)

## முஸ்லிம்களை...

களின் வாழ்க்கையைச் சிதறுண்ட நிலைக்கு மாற்றியுள்ளன. இந்த மக்களை அவர்கள் வாழ்ந்தசொந்தநிலங்களில்மீளக்குடியமர்த்துவதற்கு அனைத்துத் தரப்புக்களும் தம்மாலான முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றன.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். யாழ்ப்பாணம் பெரிய பள்ளிவாசல் ரம்ழான் நோன்பின் இப்தார் நிகழ்வு, பள்ளிவாசலில் நேற்று மாலை இடம்பெற்றது. நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த நிகழ்வுக்கு என்னை அழைத்தபோது எனது உணவுப் பழக்கவழக்கங்கள் பற்றியும் இன்னோரன்ன விடயங்களைப் பற்றியும் இந்த ஏற்பாட்டாளர்கள் விசாரித்திருந்தார்கள் என்று அறிந்தேன். நான் ஒரு இந்துவாக சைவ சமயக் கோட்பாடுகளுக்கு அமைய சைவ உணவுகளை மட்டும் உண்பவனாக வாழ்கின்றபோதும் எனக்கு அசைவ உணவு பரிமாறப்படுகின்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டு அவர்கள் மத்தியில் உரையாற்றுவதில் எந்தவித தயக்கமும் இல்லை எனத் தெரிவித்திருந்தேன். இந்த இப்தார் கஞ்சி வழங்கும் நிகழ்வில் உங்கள் கஞ்சியை என்னால் அருந்த முடியாதபோதும் அதன் சுவையை நீங்கள் யாவரும் இரசிப்பது எனக்கு மகிழ்வைத் தருகின்றது. அந்தக் கஞ்சியோடு சேர்த்து உங்களால் பகிரப்படும் அன்பையும் என்னால் உணர்ந்துகொள்ள முடிகின்றது.

வடமாகாணத்தின் யாழ்ப்பாணப் பகுதியில் மிகப் பெரும் எண்ணிக்கையிலான முஸ்லிம்கள் வாழ்ந்து வந்தனர். எனினும் 1990ஆம் ஆண்டில் இந்தப் பகுதியில் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் இங்கிருந்து வெளியேற்றப்பட்ட பின்னர் நாட்டின் நாலா பாகங்களிலும் சிதறுண்டு வாழ்ந்து வருகின்றார்கள். இது மனவருத்தத்துக்குரியது.

இவர்களில் குறிப்பிட்ட ஒரு பகுதியினர் கொழும்பிலும் நீர்கொழும்பு போன்ற பகுதிகளிலும் தமது வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்து தற்போது நல்ல நிலைமைகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்று அறிகின்றேன். ஆனால் புத்தளம் பகுதிகளில் குடியேறிய மக்கள் பொருள் பண்டங்களைத் தேடக்கூடிய வாய்ப்பு வசதிகள் குறைவாக உள்ள நிலையில் அடிப்படை வசதிகளுடனான வாழ்க்கையையே தொடர்ந்தும் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்று கூறப்படுகிறது. இது கவலைக்குரியது- என்றார்.

(உ-5,26)

## சுதாகரை...

அமையும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற தேசிய பாதுகாப்பு நிதியம் திருத்தச் சட்டவரைவு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

உரிமைகள் மறுக்கப்பட்டதாலும் ஒடுக்கப்பட்டதாலுமே உரிமைகள் கோரி தமிழ் இளைஞர்கள் போராட்டம் நடத்தினர். அந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் பலர் இன்னமும் அரசியல் காரணங்களுக்காக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஆட்சி மாற்றத்தின் பின்னர் அரச தலைவரால் பல உறுதிமொழிகள் வழங்கப்பட்டன. ஒரேயொரு கைதி மாத்திரமே விடுதலை செய்யப்பட்டுள்ளார். தன்னைக் கொலை செய்ய வந்தவரை விடுவித்துவிட்டதாக அரச தலைவர் அறிவித்தார். அதே வேளை, பண வசதியுடைய அரசியல் கைதிகள் சிலர், சட்டத்தரணிகள் மூலம் வழக்கை உடைத்து விடுதலையாகியுள்ளனர்.

தமிழ் அரசியல் கைதியான ஆனந்த சுதாகரின் பிள்ளைகள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தபோது, சித்திரைப் புதுவருடத்தில் உங்கள் அப்பா உங்களுடன் இருப்பார் என்று அரச தலைவர் மைத்திரி கூறினார். புதுவருடமும் முடிந்துவிட்டது. விடுவிப்பு இல்லை. அரச தலைவர் கூறிய புதுவருடம் எதுவென்று தெரியவில்லை?

தேசிய சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான நிகழ்வில் கலந்துகொள்ள எதிர்வரும் 18ஆம் திகதி ஜனாதிபதி கிளிநொச்சிக்கு வருகை தரவுள்ளார். கிளிநொச்சியில் வாழும் ஆனந்த சுதாகரின் பிள்ளைகளுக்கு வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றிவிட்டு அரச தலைவர் வந்தால் சிறப்பாக இருக்கும் என்றார். (5,31)

## கோத்தபாய...

காப்பு வழங்குவேன் என்று கூறுவது வேடிக்கையாகவுள்ளது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற தேசிய பாதுகாப்பு நிதிய திருத்தச் சட்டவரைவு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் மீண்டும் வரவேண்டும். அவருடன் சண்டையிடவேண்டும், தெற்கு இளைஞர்கள் செத்துமடியவேண்டும், அவர்களை வீரர்களாகக் காட்டி தாம் அரசியல் செய்யவேண்டும் என்பதே கூட்டுஎதிரணியின் வழிபாடாக இருக்கின்றது. தெற்கில் மகிந்த அணிசெய்வதைத்தான் வடக்கில் விக்னேஸ்வரனும் செய்கின்றார்.

பேருவளையில் நடைபெற்ற இப்தார் நிகழ்வொன்றில் பங்கேற்ற முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய, தமது அரசு ஆட்சிக்கு வந்தால் முஸ்லிம் மக்கள் பாதுகாப்பாக வாழ இடமளிக்கப்படும் என்று கூறியிருந்தார். இப்தார் நிகழ்வுகளில் அவர் பங்கேற்பதை எதிர்க்கவில்லை.

முஸ்லிம் மக்களுடனான உறவை வலுப்படுத்துவதற்கு அவர் முயற்சிப்பதையும் பாராட்டுகின்றேன்.

கோத்தபாய பாதுகாப்பு அமைச்சின் செயலராக இருந்த காலத்தில்தான் முஸ்லிம்களுக்கு எதிரான இனவாத அமைப்புகள் உதயமாகின. முஸ்லிம்களுக்கு எதிராகப் பகிரங்கமாகப் பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டது. கூட்டங்களும் நடத்தப்பட்டன. போராட்டங்களை நடத்துவதற்குகூட அனுமதி வழங்கப்பட்டது. இவற்றைத் தடுப்பதற்கு அப்போதைய அரசதலைவரும், பாதுகாப்பு அமைச்சின் செயலரும் நடவடிக்கை எடுக்கவில்லை. மாறாக இனவாத அமைப்புகளுக்கு வலுச் சேர்க்கும் வகையில் கோத்தபாய செயற்பட்டார்.

இறுதியில் அளுத்கமையில் கலவரம் வெடித்தது. அதன் பின்னர் தம்புள்ளையில் பல சம்பவங்கள் அரங்கேறின. இவற்றை த் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காததையிட்டு முஸ்லிம் மக்களிடம் முதலில் கோத்தபாய மன்னிப்பு கோரவேண்டும். அதைச் செய்துவிட்டு மற்றைய விடயங்களைப்பற்றி பேசவேண்டும். கோத்தாவுடன் முஸ்லிம்கள் பயணிக்கக்கூடாது. அவ்வாறு பயணித்தால் மியன்மாரில் நடப்பதுபோல்தான் நடக்கும் என்றார். (உ 5,31)

## கிளிநொச்சி...

கோணேஸ்வரன் நிதர்ஷன் (வயது -19) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். பிற்பகல் 2 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 145 மீற்றர் உயரத்தில் இருந்து விழுந்த நிதர்ஷன் அந்த இடத்திலேயே உயிரிழந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.


### யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் உயர்தர மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல்

யா / கொக்குவில் இந்துக்கல்லூரியின் உயர்தரத்தில் கல்வி பயிலும் 2019, 2020 கல்வியாண்டிற்குரிய அனைத்துத் துறை மாணவர்களின் பெற்றோர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று 10.06.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெறும் அனைத்துப் பெற்றோர்களும் தவறாது கலந்துகொள்ளவும்.

**அதிபர்.**

### சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் 28ஆவது ஆண்டு விழாவும் கௌரவிப்பு விழாவும் பட்டமளிப்பு விழாவும்

**காலம் : இன்று (09.06.2018) சனிக்கிழமை**
**நேரம் : மாலை 5.00 மணி**
**இடம் : நல்லை ஆதீன மண்டபம்**

இவ் ஆண்டு விழாவின் கௌரவிப்பு, பட்டமளிப்பு விழாவில் குடும்ப சமேதரராய் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அனைத்து அந்தணர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தங்கள் நல்வரவை நாடும்**
**நிர்வாக சபையினர்,**
**சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்.**




### கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக கடமையாற்றும்
**அ.மதன்**
அவர்களின் பாசமிகு தந்தையார்

**ஐயாத்துரை அரியரத்தினம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.



தோற்றம் 07.12.1946 மறைவு 05.06.2018

**பிரதேச செயளாளரும் உத்தியோகத்தர்களும்**
**பிரதேச செயலகம், கண்டாவளை.**

(CS 17327/15/18)

### மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினபூபதி யோகநாதன்



பிறப்பு 07.05.1948 இறப்பு 22.05.2018

யாழ். புங்குடுதீவு 7ஆம் வட்டாரம் ஊரதீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும், லண்டனை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினபூபதி யோகநாதன் (22.05.2018) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற யோகநாதனின் அன்புமனைவியும் காலஞ்சென்ற தங்கம்மாவின் (சின்னமணி) பாசமிகுசகோதரியும், துஸ்யந்தினி (கனடா), தனஞ்செயன் (பொறியியலாளர், லண்டன்), துளசிகா (பிரான்ஸ்), ரஜினிகலா (சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தயாளனின் (இலங்கை) பாசமிகு பெரியம்மாவும், ஜெகதீஸ்வரன் (கனடா), சாந்தி (லண்டன்), கேதீஸ்வரன் (பிரான்ஸ்), சுரேஸ்குமார் (பொறியியலாளர், சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகுமாமியாரும், காலஞ்சென்ற செல்வராணி, சுபதினி, காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும், நிக்ஷனா, நிஜானன், லஸ்மிகா, கனிஸ்கா, கஸ்மிகா, ரிஷாலினி, லஸ்வின், அனுரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10/06/2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப 08:30 — 10:30 வரை முகவரி: Kingsmeadow Function Rooms, Jack Goodchild Way 422a Kingston Rd, Kingston upon Thames KT1 3PB, UK. இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**7 ஆம் வட்டாரம், புங்குடுதீவு.**
**076 6531 160**

**தகவல்:**
**தா. தயாளன்**

### மரண அறிவித்தல்



பிறப்பு 24 . 08 . 1931
இறப்பு 05 . 06 . 2018

### இரத்தினம் தங்கராசா

இந்தியாவைப் பிறப்பிடமாகவும் தர்மபுரம் கிளிநொச்சி மற்றும் நீர்கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினம் தங்கராசா 05.06.2018 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் பொன்னாச்சி தம்பதிகளின் புதல்வனும் சம்பூரணத்தின் பாசமிகு கணவரும் செல்வேந்திரன்(கனடா), பரமேஸ்வரி(கனடா), கிருஷ்ணகுமாரி(கனடா), கனகராசா(கணேஸ் - சுவிஸ்), இந்திராணி(கனடா), சிறீதரன்(கனடா), தவமலர்(கனடா), உதயகுமாரி(கொழும்பு), உதயகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராகினி(கனடா), லக்மணதாசன்(கனடா), ஜெகஜேசுராசா(ரவி - கனடா), மனோகரி(சுவிஸ்), இரவீந்திரன்(கனடா), வசந்தி(கனடா), இராஜ்குமார்(கனடா), சந்திரராஜா(வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்), வாசுகி ஆகியோரின் மாமனாரும் அஸ்வியா, அரன், மேனன், தபின், அஸ்வின், ஹரிஷான், ஹரிஸ், லக்ஸிதன், இலக்கியா, மதுமிதா, யாசினி, தீசா, வைஷ்ணவி, வர்ஷா, துகினா, ஹஸ்மிதன், வினோஜினி, ஹிஷாந், முகேஷ், தக் ஷனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.06.2018 ஞாயிற்றுக்கிழமை இல.17, கனல் வீதி, நீர்கொழும்பில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணிக்கு நீர்கொழும்பு பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS 17274) (14,17)

**தகவல்: த.உதயகுமார் (மகன்)**

**077 744 4195/077 777 6429**

## வடமாகாண கரம் தொடரில்

# கொக்குவில் இந்து. கிண்ணம் வென்றது




யாழ்ப்பாணம், ஜூன் 9

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கரம் தொடரில் 17 வயதுப் பெண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் இடம்பெற்ற அமைந்தது.

முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியைப் பிரதிநிதித்துவம் செய்த காவியாவை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த சுரபுஜிதா மோதினார். இதில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை பிரதிநிதித்துவம் செய்த காவியா 25:8 என்ற புள்ளிகளின் அடிப்டையில் வெற்றிபெற்றார்.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியைப் பிரதிநிதித்துவம் செய்த ஜென்சிகாவை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்து எம்.அஜந்தா களமிறங்கினார். கொக்குவில் இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ஜென்சிகா 23:11 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றார்.

முதலிரு செற்களிலும் கிடைத்த வெற்றியை அடுத்து 2:0 என்ற நேர்செற் கணக்கில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது. (ம-23)



## யாழ். மாவட்ட இணை பூப்பந்தில் முதலிடம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

உலகத் தமிழர் பூப்பந்தாட்டப் பேரவையின் தொடரில் ஆண்கள் இரட்டையர் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்து விளையாடிய எல்.ஆர்.றொமில்சன், துசாந்தன் இணை முதலிடம் பிடித்தது.

மன்னார் உள்ளக விளையாட்டரங்கில் கடந்த வாரம் இந்தப் போட்டி இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எல்.ஆர்.றொமில்சன், துசாந்தன் இணையை எதிர்த்து மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்தும் செய்த கே.சீலன், எல்.கிசோக் இணை மோதியது.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 21:11, 21:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றது யாழ்ப்பாண மாவட்ட இணை. (ம-23)

## மைக் ஹசன் பதவி விலகல்




நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகினார் மைக் ஹசன். தனது குடும்பத்துடன் அதிக நேரத்தைச் செலவிட விரும்புவதாலேயே பதவியில் இருந்து விலகுவதாக அவர் அறிவித்தார்.

மைக் ஹசனுக்கு அடுத்த ஆண்டு வரை ஒப்பந்தம் உள்ளது. ஆனால் தனது பதவி முடிவதற்கு 10 மாதங்களுக்கும் அதிகமான அவகாசம் உள்ள நிலையில் அவர் பயிற்றுவிப்பாளர் பதவியில் இருந்து விலகியுள்ளார். அவரது முடிவை நியூசிலாந்து கிரிக்கெட் சபை ஏற்றுக்கொண்டுள்ளது. ஜூலை 31ஆம் திகதியில் இருந்து மைக் ஹசனின் பதவி விலகல் நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் அடுத்த வருடம் உலகக்கிண்ணத் தொடர் நடைபெறவுள்ள நிலையில், ஹசனின் பதவி விலகல் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. (ம)

## அச்சுவேலி தெரேசாள் வலைப்பந்தில் மகுடம்



யாழ்ப்பாணம், ஜூன் 9

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம் தமது நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்திய வலைப்பந்தாட்டத் தொடரில் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலய அணி மோதியது.

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அணி 5:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ம-422)

## கோக்லிக்கு விருது

இந்திய அணியின் தலைவர் கோக்லிக்கு, இந்திய கிரிக்கெட்டின் உயரிய விருது என்று கருதப்படும் பாலி உம்ரிகர் விருது வழங்கப்படவுள்ளது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் வருடாந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்திய கிரிக்கெட்டில் சிறந்து விளங்குபவருக்கு வழங்கப்படும் மிக உயரிய விருது பாலி உம்ரிகர். கடந்த பருவகாலத்துக்கான பாலி உம்ரிகர் விருது கோக்லிக்கு வழங்கப்படவுள்ளது. (ம)

## ஆசிய பல்கலைக் கழகங்களின் தொடரில் யாழ். பல்கலை



யாழ்ப்பாணம். ஜூன் 9

ஆசிய பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான அணிக்கு 3 வீராங்கனைகள் பற்றுபற்றும் கூடைப்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக அணி ஆசிய பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான தொடரில் பங்குபற்றத் தகுதி பெற்றது.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் அண்மையில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி தனது லீக் ஆட்டங்களில் பேராதனைப் பல்கலைக் கழகத்தையும், கொழும்பு பல்கலைக் கழகத்தையும் வீழ்த்தி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

அரையிறுதி ஆட்டத்தில் சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தை 11:06 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வீழ்த்தி இறுதிக்குத் தகுதி பெற்றது. இறுதியாட்டத்தில் கொழும்பு பல்கலைக் கழக அணியை 14:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வீழ்த்தி கிண்ணம் வென்றது. இதையடுத்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியும் கொழும்பு பல்கலைக் கழக அணியும் ஆசிய பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டத் தொடரில் இலங்கை சார்பாக விளையாடவுள்ளன. (ம-422)

# இலங்கை தடுமாற்றம்



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின், நேற்றுமுன்தின இரண்டாம் நாளில் தடுமாற்றம் காட்டியது இலங்கை அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 8 இலக்குகளை இழந்து 414 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக டவ்ரிச் 125 ஓட்டங்களையும், கோப் 44 ஓட்டங்களையும், கோல்டர் 40 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் லகிரு குமார 4 இலக்குகளையும், லக்மல் 2 இலக்குகளையும், கேரத் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி நேற்றுமுன்தின இரண்டாம் நாள் முடிவில் 3 இலக்குகளை இழந்து 31 ஓட்டங்களைப் பெற்றது. சந்திமல் 3 ஓட்டங்களுடனும், சில்வா ஓர் ஓட்டத்துடனும் களத்தில் உள்ளனர். (ம)

# ‘நாக் அவுட்’ கண்டத்தை தவிர்க்குமா மெக்சிக்கோ?

பிரேசில், ஜேர்மனி ஆகிய அணிகளுக்குப் பிறகு கடந்த 6 உலகக் கிண்ணத் தொடர்களிலும் முதல் சுற்றைக் கடந்த ஒரே அணி மெக்சிக்கோ மட்டுமே. எனினும் இந்த 6 தொடர்களில் மெக்சிக்கோ அணி நாக் அவுட் சுற்றுகளைக் கடந்தது இல்லை. அந்த அணி. லீக் சுற்றுகளில் சிறப்பாக விளையாடும் நிலையில் 4ஆவது ஆட்டமான நாக் அவுட்டில் தேர்ச்சி பெற முடியாமல் தவித்து வருகிறது.

வட அமெரிக்கா, மத்திய அமெரிக்கா மற்றும் கரீபியன் கூட்டமைப்புகளில் வலுவானதாக திகழும் மெக்சிக்கோ அணி முதன்முறையாக 1930ஆம் ஆண்டு அறிமுக உலகக் கிண்ணத் தொடரில் களமிறங்கியது. ரஷ்ய தொடர் அந்த அணிக்கு 16ஆவது உலகக் கிண்ணத் தொடராகும். அதிலும் அந்த அணி தொடர்ச்சியாக 7ஆவது முறையாக உலகக் கிண்ணத் தொடரைச் சந்திக்கிறது.

மெக்சிக்கோ அணி 1970 மற்றும் 1986ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடர்களில் காலிறுதிவரை முன்னேற்றம் கண்டிருந்தது. இதுவே அந்த அணியின் ஆகச் சிறந்த அடைவு. ‘நாக் அவுட் சுற்றை தாண்டும் அதிர்ஷ்டம் கிடையாது’ என்ற விமர்சனத்துக்கு இம்முறை மெக்சிக்கோ அணி முடிவு கட்ட முயற்சிக்கக்கூடும். 2014ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரில் மெக்சிக்கோ அணி லீக் சுற்றில் கடினமான பிரிவில் இடம் பிடித்திருந்த போதிலும் கமரூன், குரோசியா. அணிகளை வீழ்த்தி 7 புள்ளிகள் பெற்றது. ஆனால் இதே பிரிவில் இடம்பெற்ற பிரேசில் அணி கோல்கள் வித்தியாசத்தில் மெக்சிக்கோவை பின்னுக்குத் தள்ளி முதலிடம் பிடித்திருந்தது. அந்தத் தொடரில் மெக்சிக்கோ அணியின் வெற்றிக்கு நாக் அவுட் சுற்றில் நெதர்லாந்து தடை போட்டது.



### ஹெர்னாண்டஸும் ஏனைய வீரர்களும்

ரஷ்ய உலகக் கிண்ணத் தொடருக்கான தகுதிச் சுற்றில் பனாமா அணிக்கு எதிரான ஆட்டத்தில் 1:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றதுமே மெக்சிக்கோ தனது இடத்தை உறுதி செய்துவிட்டது. அந்தச் சூழ்நிலையில் மெக்சிக்கோ அணிக்கு 3 ஆட்டங்கள் மீதம் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. தகுதிச் சுற்றில் மெக்சிக்கோ அணி 16 ஆட்டங்களில் விளையாடி ஒன்றில் மட்டுமே தோல்வி கண்டிருந்தது. அந்த அணியின் வெற்றிகளில் ஜாவியர் ஹெர்னாண்டஸ் முக்கிய பங்கு வகித்தார்.

தொழில்முறை ஆட்டங்களில் மன்செஸ்டர் யுனைற்ரெட், ரியல் மட்ரிட், பேயர் வெலர்குசன் ஆகிய கழக அணிகளுக்காக சிறப்பாக விளையாடியுள்ள அவர், கோல்கம்பத்துக்கு நெருக்கமாக சென்று கோல் அடிக்கும் திறன் கொண்டவர்.

எதிரணி வீரரிடம் பந்தை பிடிகொடுக்காமல் கடத்திச் செல்வது, பொக்ஸ் பகுதிக்குள் இடைவெளியை கண்டுபிடிப்பது ஆகியவற்றிலும் உலகத்தரம் வாய்ந்த வீரராக வலம் வருகிறார் ஜாவியர் ஹெர்னாண்டஸ். மன்செஸ்டர் அணியில் அவர், நிமிடத்துக்கு சராசரியாக ஒரு கோல் அடித்துள்ளது இங்கிலீஷ் பிரீமியர் லீக்கில் இன்றளவும் வரலாற்றுச் சாதனையாக உள்ளது.

கோல்கம்பத்துக்கு முன் பாக ஜாவியர் ஹெர்னாண்டஸ் செயல்படும் திறன் குறித்து ஜெர்மனி அணியின் ஜாம்பவானான ருடி வோலர் கூறும்போது, “கோல்கம்பத்துக்கு முன்பாக அவர் ஒவ்வொரு முறையும் வெற்றி கண்டதில்லை. ஆனால் பந்து எந்த இடத்துக்கு வந்து சேரும் என்ற அறிவை கொண்டுள்ளது வியக்கத்தகுந்த விஷயம்” என்றார்.

ஜாவியர் ஹெர்னாண்டஸ் போன்று அணியில் கவனிக்கத் தக்கவராக மாறி உள்ளார் வளர்ந்து வரும் இளம் வீரர் ஹிர்விங் லோஸானோ (வயது 23). வட அமெரிக்கா, மத்திய அமெரிக்கா மற்றும் கரீபியன் கூட்டமைப்பு சம்பியன்ஸ் லீக்கில் கடந்த ஆண்டு தங்கக் காலணி, இளம் வீரர் விருது வென்ற ஹிர்விங் லோஸானோவிடம் இருந்து சிறந்த பங்களிப்பு வெளிப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஜாவியர் ஹெர்னாண்டஸ், ஹிர்விங் லோஸானோ ஆகியோருடன் மிகுவல் லேயன், ரால் ஜிமினெஸ், டிகோ ரேயஸ் ஆகியோரும் நம்பிக்கை அளிக்கும் வீரர்களாக உள்ளனர்.

### மெக்சிக்கோவின் பிரிவு

ரஷ்ய உலகக் கிண்ணத் தொடரில் மெக்சிக்கோ இடம் பிடித்துள்ள எப் பிரிவு மிகவும் கடினமானதாகக் கருதப்படுகிறது. இதே பிரிவில் நடப்புச் சம்பியனான ஜேர்மனி, சுவீடன், தென்கொரியா அணிகள் உள்ளன.

லீக் சுற்றில் மெக்சிக்கோ அணி இரண்டாவது இடத்தைப் பிடிக்கும் பட்சத்தில் நாக் அவுட் சுற்றில் பிரேசில் அணியை எதிர்கொள்ள வேண்டியதிருக்கும். மெக்சிக்கோ அணியின் பயிற்சியாளரான ஜுவான் கார்லோஸ் ஒசோரியோ கூறும்போது, “ஐரோப்பாவின் மிகப்பெரிய லீக்கில் விளையாடிய அனுபவம் கொண்ட வீரர்களின் ஒரு திடமான குழு எங்களிடம் உள்ளது. ரால் ஜிமினெஸ், ஜாவியர் ஹெர்னாண்டஸ், ஹிர்விங் லோஸானோ ஆகியோர் உயர்மட்ட திறனை வெளிப்படுத்தும் பட்சத்தில் எந்த அணிக்கு எதிராகவும் எங்களால் கோல் அடிக்க முடியும்” என்றார்.






## கொக்குவில் இந்து கரம் தொடரில் மகுடம்

யாழ்ப்பாணம், ஜீன் 9

வடமாகாண கல்வி திணைக்களம் நடத்திய வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான கரம் தொடரில் 17 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

கொக்குவில் இந்துக் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து வவுனியா வீரபுரம் மாணிக்கவாசகர் வித்தியாலய அணி மோதியது. இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ம-422)


### வாடகைக்கு

நாள், மாத அடிப்படையில் வீடு வாடகைக்கு விடப்படும். (நல்லூருக்கு அண்மையில்.)

077 170 3741, 077 678 7363

### வெளிவந்து விட்டது

A/L - Physics

22 வகையான புத்தகங்கள்

ஆக்கம்: S.R.ஜெயக்குமார் B.Sc (கொழும்பு)

கிடைக்கும் இடம்: அன்னை புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

222 9881

(ஞாயிறு தினங்களில் முழுநேரம் திறந்திருக்கும்)

### காணி விற்பனைக்கு

கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் எருவன் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில் காணிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 077 5010196





# கொக்குவில் இந்து. கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஜீன் 9

வடமாகாண க்ல்வி திணைக்களம் நடத்திய வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான கரம் தொடரில் 20 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து வவுனியா அல் இக்பால் வித்தியாலய அணி மோதியது. இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ம-422)

## கேலப் இறுதியில்

பிரென்ஞ் பகிரங்கத் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதிக்குத் தகுதிபெற்றார் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளவரான சிமோனா கேலப். கேலப்பை எதிர்த்து முகுருசா மோதினார். 6:1 என்ற செற் கணக்கில் முதலாவது செற்றைக் கைப்பற்றினார் கேலப். இரண்டாவது செற்றிலும் கேலப்பின் ஆதிக்கம் நிலைத்து நீடித்தது. இரண்டாவது செற் 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியதை அடுத்து அவர் 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றார் கேலப். (ம)



# மீண்டும் ஆப்கான்

பங்களாதேஷுக்கு எதிரான ரி-20 தொடரை 3:0 என்ற அடிப்படையில் முழுமையாகக் கைப்பற்றியது ஆப்கானிஸ்தான் அணி.

தொடரின் முதல் இரண்டு ஆட்டங்களிலும் ஆப்கானிஸ்தான் அணி வெற்றிபெற்று 2:0 என்ற அடிப்படையில் முன்னிலையில் இருந்தது. இதனால் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் ஆப்கானிஸ்தான் அணியே கிண்ணம் வெல்லும் என்ற நிலையே இருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் துடுப் பெடுத்தாடத் தீர்மானித்தது.

அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற் றங்களில் 6 இலக்குகளை இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சென்வாரி 33 ஓட்டங்களையும், ஸ்ரானிக்ஸை 27 ஓட்டங்களையும், செசாட் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இஸ்லாம், ஜெயாட் இருவரும் தலா 2 இலக்குகளையும், சகிப் அல் ஹசன், ஹக்கியூ இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி ஆரம்பம் முதல் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றியை அடைவதற்கு மிகவும் நெருக்கமாகவே பயணித்தது. எனினும் அந்த அணி ஓர் ஓட்டத்தால் வெற்றியைத் தவறவிட்டது. ரகிம் 46 ஓட்டங் களையும், மகமதுல்லா 45 ஓட் டங்களையும் பெற்றனர்.

ஆட்டநாயகனாக ரகிமும், தொடராட்ட நாயகனாக ரசிட் கானும் தெரிவாகினர். (ம)


### மரண அறிவித்தல்

| விண்ணில் | மண்ணில் |
|---|---|
| 27 | 07 |
| 09 | 06 |
| 1937 | 2018 |



### திருமதி பங்கிராஸ் நீற்றா

நெடுந்தீவைப் பூர்விகமாகவும் 17, ஜெயந்திநகர், கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பங்கிராஸ் நீற்றா கடந்த (07.06.2018) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் அருணாசலம் பங்கிராஸின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான யோசேப் மரியம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான அருணாச்சலம் ராசமணி தம்பதியரின் அன்புமருமகளும் அன்னலட்சுமி (பிரான்ஸ்), பத்மநாதன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அன்ரன் (பிரான்ஸ்), அமலதாஸ் (லண்டன்), மேரிகிளாரா (பேபி, பிரான்ஸ்), மேரி புளோரன்ஸ் (பபா, பிரான்ஸ்), அருட்தந்தை அலன் நிர்மலதாஸ் செ.தா மாகாண முதல்வர் - செபமாலைதாஸர் சபை), அலஸ் விமலதாஸ் (பவி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ராதாதேவி, ஞானமலர், கமலநாதன், விவேகானந்தன், றோகினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் யஸ்ரின், யஸ்ரிகா, சதுஸ்ரிகா, டெய்ஸி, ஜெஸ்டின், ராஜ், தினேஸ், நிபேஸ், சதீஸ், நிருஷா, நிவேதா, யானி, ஜெவார்த்தன், நிசாந், றொசாந், யோன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (11.06.2018) திங்கட்கிழமை மு.ப. 9.30 மணிக்கு புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் ஆனந்த நகர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

17, ஜெயந்திநகர், கிளிநொச்சி.
077 441 4374, 077 186 7206

தகவல்: குடும்பத்தினர்.

### மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 31 | 08 |
| 10 | 06 |
| 1942 | 2018 |



### திருமதி லீலாவதி சண்முகநாதன்

யாழ். காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகவும், காரைநகர் புதுரோட், கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட லீலாவதி சண்முகநாதன் (08.06.2018) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கந்தையா தங்கம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான நடராசா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சண்முகநாதன் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற ஸ்ரீவிக்னேஸ்வர நாயகி, மற்றும் கலையரசி, சூரியராணி, சண்முகராசா (லண்டன்), சிவகுக ராசா (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, வல்லிபுரம் மற்றும் நடராசா ஆகியோரின் அன்புச்சகோதரியும், சடகோபன், பிரியதர்ஷினி (லண்டன்), செவ்வந்தி(லண்டன்) ஆகியோரின் அன்புமாமியாரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், புவனேஸ்வரி, மற்றும்ராஜேஸ்வரி, தனலட்சுமி, செந்தில் நாதன், மகாலட்சுமி, சரவணபவன், சிவானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சித்தான், ஷகின் ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.06.2018) ஞாயிற்றுக் கிழமை அன்று மு.ப 08:00 மணிமுதல் மு.ப 11:00 மணிவரை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று பின்னர் பொரளை கனத்தை இந்து மயானத்தில் திருவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.06.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.